
# கந்தானுபூதி



அனுபூதி அருளிய அருணகிரியாரும்
பாதாரவிந்தத்தில் விளக்கவுரை தந்த திருப்புகழ் மணியும்.

பி. டி. பாணி கம்பெனி
திருவல்லிக்கேணி.

ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிய

# கந்தரனுபூதி

(பொழிப்புரை விளக்கவுரையுடன்)

ACL-FTS
00434

ஆசிரியர் :

திருப்புகழ்மணி

டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர்

பிரதம நீதிபதி, திருவனந்தபுரம்.

பிரசுரகர்த்தர் :

பி. டி. பாணி கம்பெனி

திருவல்லிக்கேணி, மதராஸ்

காபிரைட்] 1947 [விலை ரூ. 1-4-

Printed at
Solden & Co.. Madras
Q.H. MS. 151-1000—9-5-47

# அட்டவணை.


| | | | பக்கம். |
|---|---|---|---|
| | நெஞ்சக் கனக | .... | 1 |
| 1. | அமரும்பதிகே | .... | 28 |
| 2. | அடியைக் குறியா | .... | 68 |
| 3. | அரிதாகிய மெய் | .... | 62 |
| 4. | அறிவொன்றற | .... | 116 |
| 5. | ஆடும்பரி | .... | 4 |
| 6. | ஆதாரமிலே | .... | 70 |
| 7. | ஆதாளியை | .... | 100 |
| 8. | ஆனாவமுதே | .... | 74 |
| 9. | ஆறாறையு | .... | 115 |
| 10. | இல்லையெனு | .... | 77 |
| 11. | உதியாமரியா | .... | 58 |
| 12. | உருவாய் | .... | 121 |
| 13. | உல்லாச நிராகுல | .... | 49 |
| 14. | எந்தாயுமென | .... | 113 |
| 15. | கலையே பதறி | .... | 85 |
| 16. | கருதாமறவா | .... | 64 |
| 17. | கரவாகிய | .... | 111 |
| 18. | கார்மாமிசை | .... | 35 |
| 19. | காளைக் குமரேச | .... | 66 |
| 20. | கிரிவாய்விடு | .... | 98 |
| 21. | குறியைக் குறியாது | .... | 106 |
| 22. | கூகாவெனவென் | .... | 41 |
| 23. | கூர்வேல்விழி | .... | 6[illegible] |
| 24. | கெடுவாய் மனனே | .... | |
| 25. | கைவாய் கதிர்வேல் | .... | |

| | | | பக்கம். |
|---|---|---|---|
| 26. | சாகாதெனையே | .... | 104 |
| 27. | சாடுக்தனிவேன் | .... | 109 |
| 28. | சிங்கார மடந்தை | ... | 91 |
| 29. | சிந்தாகுல | .... | 89 |
| 30. | செம்மான் மகளை | .... | 42 |
| 31. | செவ்வானுருவிற் | .... | 80 |
| 32. | தன்னன் தனி | .... | 119 |
| 33. | திணியான | .... | 22 |
| 34. | தூசாமணியுந் | .... | 107 |
| 35. | நாதா குமரா | .... | 95 |
| 36. | பாழ்தாழ்வெனு | .... | 83 |
| 37. | பேராசையெனும் | .... | 54 |
| 38. | மதிகெட்டறவாடி | .... | 120 |
| 39. | மகமாயை | ... | 17 |
| 40. | மட்டூர் குழன் | .... | 31 |
| 41. | மாவேழ் சனனங் | .... | 101 |
| 42. | மின்னே நிகர் | .... | 71 |
| 43. | முருகன் குமரன் | .... | 81 |
| 44. | முருகன் றனிவேன் | .... | 46 |
| 45. | மெய்யேயென | .... | 70 |
| 46. | யாமோதிய | ... | 56 |
| 47. | வடிவுந்தனமு | ... | 60 |
| 48. | வளைபட்ட | .... | 15 |
| 49. | வானோபுனல் | .... | 13 |
| 50. | விதிகாணு | .... | 93 |
| 51. | வினையேட | .... | 103 |

# குருஸ்தோத்திரம்.

(1)

காலடீபவ ஸங்கராத் வைதரக்ஷக பவதாரக
கால கால க்ருபாநிதே வடமூலவாஸின் தேசிக
மூலகாரண முக்திதாயக பரமஹம்ஸ ஜகத்குரோ
காலபீதிம் நிவாரய பரமாத்ம தத்வபோதய

(2)

1. சீர்பெரும் ஸச்சித் ஆனந்த தேசிக
சின்மயனே — குருநாதா
பார்முழுதும் பரமாகி நிறைந்திட என்
பாக்கியமே — குருநாதா

2. யார்தருவார் எனகருளினல் அனுபவம்
ஆண்டவனே — குருநாதா
பேறிவாகிய பிரம்மநிலேகண்டு
பேசறியேன் — குருநாதா

3. அந்தகன்போல் வீணய் அலேந்து திரிந்தஎன்னே
ஆள்பவனே — குருநாதா
சிந்தைதேளிந்தேற்கு சிவபதமருள் சேய்வீர்
தேசிகனே — குருநாதா

4. காசம் படர்ந்தகண்ணை கடுவேளி யாக்கிவைத்த
காரணனே குருநாதா
பாசமறுத்து என்னை பதிதனில் நாட்டுவித்த
பண்டிதனே குருநாதா

5. மரமேறி கைவிட்ட மானிடர் போலே
நான் மாண்டு பிரவாமல் நாதா
பரமேனக்கீந்ததும் தேவரீரல்லவோ
தேசிகனே குருநாதா

6. நித்த நிரஞ்சன நிர்மலமதாகிய
நிர்குணனே குருநாதா
ஸத்தியஞான மனந்தமதாகிய
சாச்வதமே குருநாதா

(3)

கற்பனை கடந்த ஜோதி கருணையே உருவமாகி
அற்புதகோல நீடி அருமறை சிரத்தின் மேலாம்
சிற்பரவ்யோமமாகும் திருச்சிற்றம்பலத்துள்
பொற்புடன் நடம்செய்பூங் கழல் போற்றி போற்றி.



திருப்புகழ்மணி.

# நன்றிப்பேரேடு.

இந்தச் சிறு புத்தகத்தை வெளிப்படுத்துவதில் எனக்கு ஊக்கம் கொடுத்த அன்பர்கள் சிலர். அவர்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் கைம்மாறு செய்ய முடியாது. அவர்களை எழுதிவிடலாம். ஆனால் அவர்கள் அதை விரும்பவில்லை. ஆகவே ஆண்டவன்போல் அவர்கள் என்னுள்ளத்திலேயே என் நன்றியில் தோய்ந்தே கிடப்பர். ஆனால் ஸ்ரீமான் R. விஸ்வநாதய்யர், M.A. அவர்களை மாத்திரம் அவ்வாறு விடமுடியவில்லை. தமிழின் பண்டிதப் பண்பில் சிறந்தும்

முருகன் அன்பிலும் ஓங்கி நிற்கும் அவர்க்கு என் நன்றி மிகவாய்க் கூறவேண்டும். அவர்களால்தான் இந்தவெளியீடு வந்ததென்றால் தவறன்று. ஒவ்வொரு செய்யுளுக்கும் பொழிப்புரை கேளாதே எழுதி உதவினர். பிழைகளைத் திருத்தி அவர்கள் மேலான அபிப்பிராயங்களையும் சேர்த்து அச்சு சரி பார்த்து உதவியுள்ளார். முருகன் கருணையினால் கிடைத்த சகாயமாய் எண்ணுகின்றேன். இந்த வெளியீட்டை முருகனிடத்தில் ஈடுபட்ட பெரும்பித்தர்கள் ஆசியைப்பெற ஒரு ஆரம்ப பித்தன் காரியமாக கருத வேண்டும். இலக்கிய நூலாக எழுதப்படவில்லை. இதை ஒரு நண்பரிடம் சொன்னேன். அவர் "கந்தரனுபூதியை" அருணகிரி அனுபூதியாகப் பாடினரேயன்றி இலக்கியமாக செய்யவில்லை என்றார். அருமையான மொழிகள். இப்புத்தகத்தை அழகாக அச்சிட்ட சோல்டன் கம்பெனியார்க்கும் என் நன்றியுளது. அடிமுதல் கடைசி வரையில் தன் காரியமாக கருதி கூடவேயிருந்து உதவிசெய்த P. T. பாணி அவர்கள் உதவியை மறக்கமுடியாது. அவர்களுக்கே இந்த புத்தகத்தை கொடுத்துவிட்டேன். முருகன் வாழ்க! அடியார் வாழ்க! அவர் உள்ளம் வாழ்க! அவ்வுள்ளத்தின் கண் அனுபூதி பெருகி உலகமெலாம் உவப்பிலா ஆனந்தத்தையும் சாந்தியையும் பெறுக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர்.

ஸ்ரீ வடபழனி ஆண்டவர் துணை.

# கந்தரநுபூதி.

சற்றேறக்குறைய 400 வருஷங்களுக்கு முன் ஸ்ரீ அருணகிரியார் என்ற ஒரு சிறந்த பக்தர் இருந்தார். அவர் எல்லாக் கலைகளிலும் எட்டுப் பாஷைகளிலும் மிகுந்த தேர்ச்சி அடைந்தவர். அவர் டிண்டிம கவி என்று பிரசித்திபெற்று, நாட்டு அரசர்களால் குருவாகக் கொண்டாடப் பெற்றார்; உலகப்பெருமைகள் எல்லாம் பொய்யென்று தள்ளி, ஸ்ரீ முருகப் பிரானிடம் ஈடுபட்டு, அவனை அநேக பாடல்களிலும் நூல்களிலும் வாயாரப் பாடி மனம் களித்தார். ஸ்ரீ முருகப் பிரானிடம் தாம் அன்பினால் ஈடுபட்டு அடைந்த அமைதியையும் அவனை அடையும் வழியையும் உலகத்தவர்க்கு உணர்த்த வேண்டி அநுபூதி என்றஇந்த நூலை அவர் இயற்றினார்.

இந்த நூலைப் பாராயணம் செய்பவர் கந்தப் பெருமானுடன் அருணகிரியார் கலந்த சுகத்தை உணர்வார்கள். அன்பின் வெள்ளமும், அறிவின் வெள்ளமும், ஆனந்தத்தின் வெள்ளமும் ஒருங்கே தாக்கினது போல் உண்டாகும் உணர்ச்சியை அநுபூதி என்று சொல்லலாம். இந்த அநுபூதி "இன்பமயம்", "ஜோதிமயம்", இது நான் என்றது அற்ற, வேதனைகள் விட்ட வினைகள் தெரித்த, ஒரு நிலை

யைக் குறிப்பது; உலகெலாம் தன்னுள் அடக்கி யது. மௌனம், ஞானம், பொருள், பிரம்மம், பர சிவம், இவைகளெல்லாம் இந்த அனுபூதியின் விளக்கமே யன்றி வேறல்ல.

அனுபூதியைப் பற்றித் தாயுமானர் சொல்வ தாவது,

இன்னமுது கனிபாகு கற்கண்டு சீனிதே
        னெனருசித் திடவலிய வந்
தின்பங்கொ டுத்தநினை யெந்நேர நின்னன்ப
        ரிடையறு தருகி நாடி
யுன்னிய கருத்தவிழ வுரைகுளறி யுடலெங்கு
        மோய்ந்தயர்ந் தவச மாகி
யுணர்வரிய பேரின்ப வனுபூதி யுணர்விலே
        யுணர்வார்க ளுள்ள படி காண்
கன்னிகை யொருத்திசிற் றின்பம்வேம் பென்னினுங்
        கைக்கொள்வள் பக்கு வத்திற்
கணவனருள் பெறின்முனே சொன்னவா றென்னெனக்
        கருதிநகை யாவளது போற்
சொன்னபடி கேட்குமிப் பேதைக்கு நின்கருணை
        தோற்றிற் சுகாரம்ப மாஞ்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
        சோதியே சுக வாரியே.

அனுபூதியைச் சொற்களாற் பிறர்க்கு உணர்த்தமுடியாது. "அவ்வாறறிவார் அறிகின்றத லால், எவ்வாறொருவர்க்கிசைவிப்பதுவே" என்பதே

அனுபூதி வாக்யம். கந்தப் பெருமானை தாம் கலந்து அனுபவித்த அனுபவத்தைச் சொல்லால் சொல்ல வேண்டுமென்பது இயலாததொரு காரியம். அவ் விதம் 51 பாடல்களில் முருகனைப் போற்றி அனுப வித்துப் பாருங்கள். மிகவும் சுகமாக இருக்கும். கஷ்டங்கள் நீங்கிவிடும். பேரின்பம் எய்திடும். ஆனால் சொல்ல முடியாது என்று உணர்த்தினர். அந்த அனுபூதியின் பெருமையைக் கந்தரனுபூதி பாராயணத்தில் எல்லோரும் அடையக் கூடுமாறு இயற்றப்பட்ட சிறந்த பக்தியின் மேலீட்டினால் வெளிப்பட்ட ஓர் அற்புதமான நூல்.

இதற்கு விளக்க உரை எழுதப் புகுந்தது என் மனத்தில் எழுந்த பேராசை. இதனில் காணப்படும் குறைகளெல்லாம் என்னுடையனவே. சிறப்பு ஏதேனும் காணப்படில் அது அவன் திருவருட் பயனே.

இல்லே யெனுமாயையி லிட்டனைநீ
பொல்லேன் அறியாமை பொறுத்திலையே
மல்லே புரி பன்னிரு வாகுவிலென்
சொல்லே புனையுஞ்சுடர் வேலவனே.

டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயர்.

சுபம்.

உ

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு —குறள்.

# முருகன் ரக்ஷைமாலை

முருகா சரணம் முருகா சரணம்
முருகா சரணம் முருகா முருகா
அன்பர்கள் நேயா அம்பிகை புதல்வா
துன்பமகற்றிடும் சீலாபாலா
சிவகுமரா முருகா வருக
பரமா புருஷா வரம்தர வருக
கலங்காதெனையே காத்திடு முருகா
மலர்தானணுகா வரம்தா முருகா
காவா முருகா கார்த்திகை குமரா
வாகா முருகா சாகா வரம்தர
வா வா முருகா வினைதீர்த்திடவே
யோகா முருகா பங்க மாற்றிடவே
பொன்னடி போற்றி பணிந்திடவே
சென்னியி லுன்னடி ஓங்கிடவே
தேடிய நலங்கள் செறிந்திடவே
பாடிய புகழ்கள் மலிந்திடவே
கூடிய அன்பர் கும்பிடவே
அன்பாய் அவர் தாள் சூடிடவே
சூடிடவே யான் சூடிடவே
அன்பாய் அவர்தாள் சூடிடவே
முருகா சரணம் முருகா சரணம்
முருகா சரணம் முருகா முருகா.

ஓம் தத் ஸத்.

திருப்புகழ்மணி

உ.

ஸ்ரீ வடபழனி ஆண்டவர் துணை.



# கந்தரநுபூதி.

தன்சொன்மாலை சிறக்க கணபதி பொன்காலைப்பற்று.

---

## காப்பு.

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந் திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம்.

### பொழிப்புரை.

மனமாகிய கனத்த கல்லும் நெகிழ்ந்து உருகும்படி, அன்பர்கள் தன்னை வந்தடையும்போது அருள் புரிகின்ற ஆறுமுகனுக்கு இயல்பாக அமைந்த செஞ்சொற்களாலான இம்மாலை (நூல்) சிறந்து விளங்கும்படி, ஐந்து கைகளோடுகூடிய யானைமுகக் கடவுளின் பாதங்களை வணங்குவோம்.

### விளக்கவுரை.

*அன்பாவதும் அநுபூதியே. அன்பால் நெகிழாத நெஞ்சம் கல்லன்றோ? 'திணியான மனோசிலை' என்று பின்னும்*

கூறுவதை 6-ஆம் செய்யுளில் காண்க. கல்லுக்கு உணர்ச்சி கிடையாது. அன்பால் நெகிழ்ந்து உருகாத நெஞ்சினுக்கும் உணர்ச்சி கிடையாது. அது அனுபூதியை எவ்விதம் எய்தும?

“வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மேலாகப்
பதைத்துருகு மவர்நிற்க வென்னையாண்டாய்க்
குள்ளந்தா னின்றுச்சியளவு நெஞ்சா
யுருகாதா லுடம்பெல்லாங் கண்ணாயண்ணா
வெள்ளந்தான் பாயாதா னெஞ்சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந்தீவினையி னேற்கே.”

என்று மாணிக்கவாசகர் பாடியுள்ளது இந்தக் கல் நெஞ்சைப் பற்றியே.

ஆணவத்தாலும், லோபத்தாலும், அருளின்மையாலும் மூடப்பட்ட என் நெஞ்சமாம் கல்லை, அன்பு மயமாக நெகிழ்த்தி அருளினால் அனுபவம் தருபவர் யார்? கல்லை யெல்லாம் நீராகக் கரைத்திடும் இயல்பையுடைய வள்ளல் ஒருவனே உளன். இவ்விதம் செய்வதே அவனுடைய இயல்பு. அவனே தஞ்சம் என்ற தவத்தோரைத் தனிமை யில் ஆதரிக்கும் தனியன் ஆவன். அன்பின் சுவை காட்டி அல்லலை எல்லாம் ஒழித்துக் கல்லெனும் இதயத்தை அன்புக் கடலாக உருக்கும் திறமுள்ளவனும் அவனே. அவ்வாறு அவன் அருள பக்தனின் மனம் உருகும்.

நெஞ்சமுருகாதார் முருகனையறியாதார். ஆகவே யன்றோ,

உள்ள முருகில் உடனுவரல்லாது
தெள்ளவறியர் என்று உந்தீபற!
சித்பரச் செல்வர் என்று உந்தீபற!

என்று பெரியார்பாடினர்.

அன்பே சிவம். சிவமே அன்பு. சிவமே சண்முகம். மலைகளில் சிறந்த இமயத்தின் மேலும் சிவம் போய்க் குடி கொண்டபோதே கல்லெல்லாம் கரைந்து உலகின்கண் அமுத கங்கையாய்ப் பாய்ந்ததையும் பார்த்துள்ளோம். நாராயணன் பள்ளிகொள்ளும் பாற்கடலும், அன்புமயமான பால் வெள்ள மன்றோ? தஞ்சம் என்றோர்க்குத் தண்ணருள் காட்டி அவர்கள் நெஞ்சமான கல்லையெல்லாம் பிசைந்து கனியாக்கித் தன் கருணை வெள்ளத்தழுத்தி வினை கடியும் வேதியனும் முருகனன்றோ? ஸ்ரீ முருகப்பிரான் இயல்பைச் சொல்லி அருந்தமிழ்ச் சொற்களால் இயற்றிய பாமாலையில் முருகன் அனுபூதியாம் தேன் குன்றிடாது பொழியவே ஐந்து கரத்தானைப் பணிந்து ஏத்துவார். இவ்வனுபூதியின் பெருமையை,

> நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
> திருக்கொணுமலை தலத்தாறு கோபுர
> நிலைக்குள் வாயினில் கிளிபாடு பூதியில் வருவோனே!

என்ற திருப்புகழிலும் காண்க.

"செஞ்சொற் புனைமாலை" சண்முகனுக்கே இயல்பு என்றார்.

> "முத்தமிழ் வித்வ விநோதா கீதா"
> "செந்தமிழ் நாளுமோதி
> உய்ந்திட ஞானமுறும்
> செங்கனி வாயிலோர் சொல் அருள்வாயே;"
> "கொன்றைச் சடையர்க்
> கொன்றைத்தெரியக்
> கொஞ்சித்தமிழைப் பகர்வோனே"

என்று இவ்விதமாக முருகனைத் திருப்புகழில் பாடியுள்ள தினின்று தமிழ்ப் பாமாலைக்கும் முருகனுக்கும் உள்ள ஒற்றுமை விளங்கும். இப்பாமாலை சிறக்கும் பொருட்டுச் சொல்லும், பொருளும், மொழியும், இசையும், அருளும்

ஆனந்தமும் தடையின்றித் தந்தருளும் விநாயகனைத் துதிக்கின்றார். ஔவையின் உபதேசத்தையும் காண்க.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது-பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

நூல்:

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

பொழிப்புரை.

தன்னை எதிர்ப்பவரைத் தேடிச் செல்லும் கஜமுகாசுரனைப் போரிற் கொல்லுகின்ற யானைமுகக் கடவுளோடு உடன்பிறந்த முருகப்பிரானே! (உன்) ஆடுதலையுடைய (குதிரையாகிய) மயில் என்றும், படையாகிய வேல் என்றும், (கொடியாகிய) அழகிய சேவல் என்றும் இவ்வாறு பாடும் தொழிலையே எனக்குத் தொழிலாக அருள்வாய்.

விளக்கவுரை.

'கந்தரனுபூதி பெறத் திருப்புகழ் பாடுகின்றேன்,' என்றார். திருப்புகழ் பாடும் பணியைத் தமக்கு அளிக்க முருகனை வேண்டுகின்றார். முருகன் அருளால் அன்றித் திருப்புகழைப் பாட இயலுமோ?

"பத்திமையாற் பணிந்து அடியேன் தன்னைப்
பன்னாள் பாமாலை பாடப்பயில்வித்தானை"

என்றும்,

"பாடுவித்தால் ஆரொருவர் பாடாதாரே"

என்றும், அப்பர் சுவாமிகள் துதித்தவாறு, துதிக்கச்செய்வதும் அப்பன் அருள் அன்றோ? துதிக்கு இசைந்தவை ஆடும் பரி, வேல், அணி சேவல் ஆகிய இவை. ஆடும் பரி ஆடும் மயில் ஆகும். திருப்புகழில்,

"ஆன தனி மந்த்ர ரூப நிலைகொண்ட
தாடுமயிலென்ப தறியேனே"

என்றார். ஓங்காரமே ஆடும்பரி. ஓமொழிப்பொருள் ஈசனே யாவன். வேதங்கள் அறைகின்ற உலகங்கள் அனைத்தும், வேதமந்த்ர சாஸ்திரங்களும் எஞ்சிய மற்றெல்லாப் பொருள்களும் ஓங்காரத்துள் அடங்கியனவே. ஓங்காரத்துள் விளையாடும் தெய்வம் முருகனே.

"ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
தூங்கார்தொழும்புசெய் யாரென்செய் வார்யமதூதருக்கே"

என்பதைக் கந்தரலங்காரத்திலும் காண்க.

"ஓமெழுத்திலன்பு மிகவூறி
ஒவியத்தில் அந்தம் அருள்வாயே"

என்றார் சுவாமிமலைத் திருப்புகழில்.

ஓம் என்ற தனி மந்த்ரம் இந்த ஜகத்தையும் மற்றெல்லாவற்றையும் குறிப்பிடுகின்றதால் ஓம் என்றதைப் பாடி அன்பு செலுத்துபவர்கள் சகல பிராணிகளுக்கும் ஆத்மபந்து ஆகின்றார்கள். ஆகையால்தான் ஓம் என்பது துறவிகள் செய்யும் ஜபமும் அருந்தவமுமாய் அமைந்தது. இந்த ஆத்மபந்துத்வம்தான் ஆண்டவனுக்கும் நமக்கும் நித்தியமாய் நிற்கும் உறவு.

ஊசிக்கும் காந்தத்துக்கும் இருக்கும் உறவுபோல் ஆண்டவனுக்கும் பிராணிகளுக்கும் உறவு ஒன்றிருக்கின்றது. பெரிய யோகிகளும் அரிய பக்தர்களும் இந்த

உறவை மறவாது உன்னி உன்னி இறைவன் அருளைப் பூரணமாய் அடைந்து விடுகிறார்கள். தாயுமானவர்.

உடல் குழையவென்பெலா நெக்குருகவிழிநீர்க
ளூற்றென வெதும் பியூற்ற
ஊசிகாந்தத்தினைக் கண்டணுகல் போலவே
யோருறவு முன்னி யுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துண்ணடுக்குறப்
பாடியாடிக்குதித்துப்
பனிமதிமுகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பியார்த்தார்த் தெழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித்துக் கூப்பி
வானேய வானி லின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி
வாழியென வாழ்த்தியேத்துங்
கடன் மடைத்திறந்தனைய வன்பரன்புக்கெளியை
கன்னெஞ்சனுக் கெளியையோ
கருதரிய சிற்சபையிலானந்த நிர்த்தமிடு
கருணைகரக் கடவுளே.

என்று பாடியதும் காண்க.

ஆனாலும் ஒரு வித்யாசம் உண்டு. காந்தம் ஊசியை இழுக்கும். ஊசிபோன்ற அடியார்கள் தெய்வமாம் காந்தத்தினை இழுத்து விடுவார்கள். அடியார் இருப்பிடம் அன்றோ ஈசன் இருப்பிடம்?

"சொல்லினுஞ் சொல்லின் முடிவிலும் வேதச் சுருதியிலு
மல்லிலு மாசற்ற வாகாயந்தன்னிலு மாய்ந்துவிட்டோ
ரில்லிலு மன்ப ரிடத்திலுமீச னிருக்குமிடங்
கல்லிலுஞ் செம்பிலுமோவிருப்பானெங்கள் கண்ணுதலே"

என்ற பட்டினத்தார் செய்யுளையும் காண்க.

அப்பர் சுவாமிகள் இறைவனை :—
"விறகில் தீயினன் போலும்.
பாலில் படுநெய் போலும் மறைந்து நிற்கின்றான்."

என்றும் கூறி அம்மறைபொருளை வெளியிற் பற்றி அனுப விக்கத்தக்க மார்க்கத்தை உபதேசிக்குங்கால், "உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால் முருக வாங்கிக் கடைய முன்னிற் குமே" என்றார்.

'குறவிதோள் மணந்த செல்வக் குமரவேல் தாதையை உறவினால் வல்லனாகி உணருமாறு உணர்த்துவேன்' என் றும் கூறியுள்ளார். உறவின் உணர்ச்சியால் அறிவும் எய்திடு மன்றோ? ஓங்காரத் தனி மந்திரமாகிய "ஆடும்பரியை"ப் பாடுதல் வேண்டுமாதலால் இந்த நூலின் கருத்தாகிய ஓங் காரத்தை ஆடும்பரியென்று முதற்சொல்லாக வைத்ததும் மிகவும் பொருந்தும்.

வேதங்களும் ஓம் என்ற முழுமுதற் சொல்லை முதலில் வைத்துப் பாடியதுபோல் இந்தச் சிறந்த அனுபூதியாம் நூலும் ஆடும்பரி என்று ஓங்காரத்தை முதலில் வைத்துப் பாடிய சிறப்பைக் காண்க.

சிவதத்துவமாய் விளங்கும் ஓங்காரத்தைச் சொல்லிச் சக்தி ஸ்வரூபமாய் நிற்கும் வேலை அடுத்தபடியாகச் சொல் வார். அடியார்களை ரக்ஷிக்கும் தாய் அதுவே. தணிகேசன் வேலின் பெருமையை வேல் வகுப்பில் அருமையாய் விளக்கி யுள்ளார். அவ்வேல் உலக மாதாவான வள்ளிநாயகியின் கண்கள் போல உருவமுடைத்து. வள்ளிநாயகியின் குளிர்ந்த கண்களின் பார்வை மாத்திரத்தினாலே பயம், துன்பம், தரித்திரம் முதலிய வினைகள் நீங்கி அஷ்டலக்ஷ்மியின் கடா க்ஷம் எப்படிக் கைகூடுமோ, அதுபோன்றே இந்த வேலின் கடாக்ஷத்தில் நிற்கும் அடியார்களுக்குக் குறைவு ஒன்றும் கிடையாது. முருகனே அவதாரமாக வந்த ஞானசம்பந்த மூர்த்தி அம்மையின் கண்களைப் பாடுங்கால், "ஊனேறு வேலின் உருவேறு கண்ணி" என்றார்.

"சொலற்கரிய திருப்புகழை யுரைத்தவரை யடுத்த
பகை யறுத்தெறிய வுறுக்கியெழு மறத்தை நிலை காணும்"

என்றார் வேல் வகுப்பில். பகையை அன்பாக மாற்றும் குணம் வேலுக்குண்டு. பகைவனுய் விளங்கிய ஒரு சூரபத்மனை இரு கூறுய்ப் பிளந்து இரண்டு அன்பராய் மாற்றி ஆட்கொண்ட முருகவள்ளல் அன்புக்குக் கரையேதுமுண்டோ? மாய்ந்தது சூரபத்மனும்; உய்ந்தது மயிலும் சேவலுமாம்.

"பன்பகைச் சூர்வேர் களைந்தது
போலென் பகையை மாற்றிடும் வடிவேலவா"

என்று கூறுவதைத் திருவேரக நவரத்னமாலையில் காண்க.

வன்மையைப் பிளந்து அமிர்தவாரியை அளிக்கும் அவிரோத அன்பாவதே ஆண்டவன் கை ஞானச்சுடர் வேல்.

"செந்தில் வேலனுக்குத் தொண்டா கியவென்னவிரோத
ஞானச் சுடர்வடிவாள் கண்டாயடா வந்தகா"

என்று மார் தட்டி மறலியைப் போருக்கிழுத்த பெருமையைக் கந்தரலங்காரத்தில் காண்க. உலகெலாம் அளித்திடும் வேலை அம்மை கண்ணில் வைத்தார்; குமரன் கையில் வைத்தார்; அப்பன் மழுவில் வைத்தார்.

இந்த வேலே எல்லாவற்றையும் குறிக்கும். அதன் உருவம் ஓங்காரம்போல் விரிந்து குவிந்து நிற்கும். விரிந்த, குவிந்த இவ்வுருவத்தின் பெருமையைத் திருமூலர் திருமந்திரத்தில காண்க.

"மனம் விரிந்து குவிந்தது மாதவம்
மனம் விரிந்து குவிந்தது வாயுவும்
மனம் விரிந்து குவிந்தது மன்னுயிர்
மனம் விரிந்து மாண்டது முத்தியே"

சேவல் ஞானேதயத்தைச் சுட்டிக் காட்டுகின்றது. இரவின் முடிவில் பகலின் உதயம் ஆவதுபோல் மாயையின்

முடிவில் ஞானத்தின் உதயம் ஆகும். மாயையை இடித்து ஞானத்தை நாட்டுவது வேல். அச்சமயம் சேவல் தன் குரலால், 'ஜகமாயை எனும் இரவு மாண்டது; முருகன் எனும் ஞான சூரியன் அடியார்கள் இதயத்தில் உதயமாயி னன், என்று அறைகூவி எழுப்பும். எங்குமே ஒன்று போலே விளங்கும் சிவத்தில் பலவாக மாயா சக்தியால் பேதித்து விளையாடும் பராசக்தியைத் தரிசித்துப் பிரிவின்றி நிற்கும் சிவசக்தியையே ஷண்முகனாகவும் முருகனாகவும் அறிவாளர்கள் உணர்வார்கள். இந்த உணர்ச்சியைச் சேவல் குறித்துக் காட்டுமாதலால் சேவலைப் பாடவேண்டுமென்றார்.

ஆகவே அனுபூதி பெறவேண்டில் சிவமும் சக்தியும் கலந்த இந்தச் சிருஷ்டியின்கண் சகலஜீவராசிகளின் இதயஸ் தானமாகும் தகராகாசத்தில் விளையாடும் குகப்பெருமானை அறிந்து அன்போடு பாடுவதே எளிதான மார்க்கம் என்பது உபதேசம்.

ஆணவ ரூபமான பெருத்த யானையாக வந்த கஜமுகா சுரனைச் சண்டையிற் கொன்ற விநாயகன் சகோதரனை முருகனைப் போற்றுவார். விநாயகர் ரூபமானது நாமரூப அதீத பாதத்வத்தையே குறிக்குமாதலால், "தனியானை" யென்றார். ஒப்பற்ற மூர்த்தியின் சகோதரன் ஒப்பற்ற முருகன்.

---

## 2

### நலம்

உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவிநோ தனுநீ யலையோ
எல்லா மறவென் னையிழந் தநலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே.

பொழிப்புரை.

முருகக் கடவுளே! தேவலோக அதிபனே! உல்லாச மனமும், கவலையற்ற நிலையும் என்ற பலவகைப்பட்ட யோக வழியில் நின்று பேசும் வன்மையும் பெற்ற விநோதன் நீ அல்லனோ? எல்லாப் பற்றுக்களையும் நீக்கியும் என்னையும் நான் இழந்தும் நிற்கும் நல் நிலையை எனக்கு நீ உபதேசிப் பாயாக.

விளக்கவுரை.

நான் உற்றது துன்பம். நான் அற்றது இன்பம். 'நான் அற்ற நிலையில் எய்தும் பயன் யாது?' என்று முருகனை வினவுகின்றார். இவ்வுலகில் இன்பம் துன்பம் இரண்டும் கலந்திருக்கின்றன. துன்பத்தை நீக்கி இன்பத்தைக் கைப் பற்ற ஞானம் வேண்டும். ஞானம் அடைய ஆண்டவன் கருணை வேண்டும். யோசித்துப் பார்க்கும் வேளையில் உலகையெல்லாம் இரண்டு கூறுகப் பிரித்துவிடலாம். நானென்றும் நீ யென்றும் இரண்டு பாகங்களாக ஜகம் தோன்றும். "நான்" 'எனது" என்பவை துன்பத்திற்கு ஏதுவாய் நிற்கும். சமுஷ்டியாய், அகண்டமாய், ஏக உரு வாய் நிற்கும் இந்த ஜகத்தில் தன்னை வேறுபாடு படுத்திக் கொண்டு ஜகமெலாம் வேறு, நான் வேறு என்ற உண்மை யல்லாத ஒரு நினைவுதான் 'நான்' ஆகின்றது. உலகெலாம் நிறைந்த சிவத்தினின்று பிரியமுடியாத தன்னை ஜீவன் பிரிந்ததாகக் கருதி, அந்தப் பொய்யான கருத்தில் நானெனவும் எனதெனவும் உழன்று துன்பம் உறுகின்றான் இந்த மயக்கம் மாயையின் செயலென்பர். நான் என்ற மாயை மறந்தக்கால் ஜகமெலாம் நிறைந்து நிற்கும் பேரானந்தம் பெறலாமன்றோ? ஆகவேதான் சித்தர்களும் அருமையாய்,

> "தன்னை மறந்து தலைத்தநிலை மறந்து
> கன்ம மறந்து கதிபெறுவ தெக்காலம்?
> தன்னையேதான் மறந்து தலைவாசல் தாள்போட்டு
> உன்னை நினைந்து உறங்குவ தெக்காலம்?"

என்று பாடியுள்ளார்.

அப்பர் சுவாமிகளும்,

“ தன்னை மறந்தாள் தன்னாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே ”

என்று பாடியுள்ளார்.

பட்டினத்தடிகளும்.

“ என்னையே நானறிய விருவினையு மீடழித்துத
தன்னையறியத் தலமெனக்குச் சொன்னாண்டி.
தன்னை யறிந்தேண்டி தனிக்குமரி யானேண்டி
தன்னந்தனியே தனியிருக்கும் பக்குவமே.
இந்நிலைமை கண்டாண்டி யெங்கு மிருந்தாண்டி
கன்னி யழித்தாண்டி கற்பைக் குலைத்தாண்டி,
கங்குல்ப கலற்றிடத்தே காட்டிக் கொடுத்தாண்டி
பார்த்தவிடமெலாம் பரமாகக் கண்டேண்டி ”

என்று தம் அனுபூதியை அருமையாய் உரைத்துள்ளார்.

நான் அற்ற இடத்தில் (நீ என்ற முருகன் ஒருவனே இருத்தலால்) இரண்டாவது பேர் இல்லையானமையின் தனிமை ஏற்படும். அந்த முருகன்தவிர வேறொருவர் இல்லை என்ற எண்ணம் குடிகொண்ட மனது எப்போதும் தனிமையில் நிற்குமன்றோ ? பேதித்த இடங்கள் அபேதத்தில் ஒன்று மாயின் தனிமையே நிற்கும். ஜகத்தில் உள்ள பொருள்களெல்லாம் நான் என்னும் உணர்ச்சியை நாடி நிற்றல் பற்றி நான் இறந்தக்கால் எல்லாம் அற்றுவிடும். ஆதலின், “எல்லாமற என்னை இழந்த நலம்” என்று அற்புதமாய் மொழிந்தார். நான், என், என்ற இவற்றை இழந்தக்கால் எஞ்சியது வேதாந்தத்தின் சிகரமாய் விளங்கும் முருகனே யாகும்.

“ நாலந்த வேதத்தின் பொருளோனே
நான் என்று மார்தட்டும் பெருமாளே.”

என்று திருப்புகழில் காண்க.

'நான்' ஒழிந்தக்கால் அதையண்டிய மற்றவை ஒழியு மென்றால் மற்றவை யாவை?

"ஔவியமிருக்கநா னென்கிறவாணவ
மடைந்திட்டிருக்கலோப
மருளின்மை கூடக் கலந்துள்ளிருக்கமே
லாசாபிசாச முதலாம்
வெவ்வியகுணம் பல விருக்கும்"

என்றார் தாயுமானவர். இவைகளும்! ஒழியும். எஞ்சியது முருகன். அவன் வண்ணத்தைக் கூறுகின்றார்.

'ஆனந்தமயன், உல்லாசன், நிராகுலன், கவலையற்ற வன்' என்றார். ஆயினும், ஒரு கவலை அவனுக்கும் உண்டு.

"வேடுவர்பு னத்திலுரு மாறிமுனி சொற்படிவியாகுலமனத் தினெடு, போம்விற் காரனும்"

என்றும்,

"வேதியர் வெறுக்கையும நாதிபர வஸ்துவும் விசாகனும் விகற்பவெகு ரூபக்காரனும்"

என்றும்,

"யானெனதே னச்சருவு மீனசமயத்தெவரும் யாருமுணர் தற்கரிய, நேர்மைக்காரனும்" என்றும்

வேளைக்காரன் வகுப்பில் அருணகிரியார் பாடியுள்ளார்.

அடியார் படுந்துயர மெல்லாம் ஆண்டவனைத் தாக்கு மாகையால் அடியார்க்கு உதவுங் கவலையொழிய வேறு கவலை யில்லாததால் நிராகுலன் முருகன். மேலும் இந்தக் கவலை உதவுங் கவலையே யன்றி உதவாத கவலையன்று. ஆகவே கவலையே யன்று இது; ஓர் உற்சாகமே. ஆதலின் உல்லாச யோகன், நிராகுலயோகன் என்றார். அவன் வித விதமாய்ச் சல்லாப சம்பாஷணை செய்யும் விநோதன். இந்த விநோத ஆனந்தத் தன்மை முருகன் தன்மை. நான் என்பது அற்றால் இந்த அனுபூதி ஏற்படு மென்பது உபதேசம்.

பொருள் எது.

3

**வானே புனல்பார் கனன்மா ருதமோ**
**ஞானே தயமோ நவினுன் மறையோ**
**யானே மனமோ வெனையாண் டவிடந்**
**தானே பொருளா வதுசண் முகனே.**

பொழிப்புரை.

ஷண்முகனே! நான் பொருளாகக் கொள்ளவேண்டுவது யாது? அது வானே? நீரோ? நிலமோ? நெருப்போ? காற்றே? ஞான உதயமோ? சொல்லப்படுகின்ற நான்கு வேதங்களோ? நானே? மனமோ? என்னை நீ ஆட்கொண்ட இடந்தானே? நின் கருணைதானே?

விளக்கவுரை.

*'பரம்பொருள் என்பது யாது?' என்று ஷண்முகனை வினவுகின்றார். பஞ்சபூதங்களோ, அறிவின் உதயமோ, வேதங்களோ, யான் யார் என்று அறியமுடியாத யானே, என் மனமோ, எனையாண்ட நின் கருணையோ? எது நித்ய மான பொருள்? எவற்றினும் நின்று மனத்தினும் புகுந்து அதனில் அறிவாய் விளங்கியே அன்பாய் நெகிழ்ந்திடும் நின் கருணை யன்றோ பொருள், என்றவாறு.*

*"இருநிலனாய்த் தீயாகி நீருமாகி*
*யியமான னாய்எறியுங் காற்றுமாகி*
*அருநிலைய திங்களாய் ஞாயி றாகி*
*யாகாச மாயட்ட மூர்த்தி யாகிப்*
*பெருநலமுங் குற்றமும் பெண்ணுமாணும்*
*பிறருருவுந் தம்முருவுந் தாமேயாகி*
*நெருநலையா யின்றாகி நாளையாகி*
*நிமிர்புன் சடையடிகணின்ற வாறே."*

*என்ற அப்பர் சுவாமிகளின் திருத்தாண்டகத்திலும் காண்க.*

இப்பிரபஞ்சம் பஞ்சபூதங்களின் சேர்க்கையால் ஆனது இம்மனித சரீரமும் அப்படியே. ஆகவே இப்பூதங்கள் காரணமாகும். இக்காரணத்தினின்று தோன்றுவது விவேக மான காரியம். விவேகத்தின் விளைவு நான்கு வேதங்கள். ‘இவையெலாம் பொருளாகுமோ?’ என்று வினவுகின்றார். ‘இன்னும் சமுசார வாழ்க்கை எல்லாவற்றிற்கும் பிறப்பிட மான யான் என்னும் அகங்காரமும், அதன் மூலமான மன மும் பரம்பொருளோ?’ என்கிறார். ‘அழியும் பொருள்க ளாகிய இவையெலாம் பொருளோ? இவற்றை அழிவிக்கும் பொருளாகிய நின்கருணையே பொருளோ?’ என்கின்றார்.

தாயுமானவரும், ‘யானார்? மனமெது? வினையெது? பிறப்பேன்? துன்பமேன்?’ என்ற இவற்றை விசாரித்துத் தீர்மானமான உண்மையைப் பகர்வதுங் காண்க:

வேதாவை இவ்வண்ணம் விதித்ததே தென்னினுன்
வினைப்பகுதி யென்பனந்த
வினைபேச வறியாது நிற்கவிவை மனதால்
விளைந்தான் மனதை நாடிற்
போதமே நிற்குமப் போதத்தை நாடிலோ
போதமுநி ஞல்விளக்கம்
பொய்யன்று தெய்வமறை யாவுமே நீயென்று
போக்குவர வறநிகழ்த்து
மாதார வாதேய முழுதுநீயாதலா
லகில மீதென்னையாட்டி
யாடல் கண்டவனுநீ யாடுகின்றவனுநீ
யருளுநீ மௌனஞான
தாதாவுநீ பெற்ற தாய்தந்தை தாமுநீ
. தமருநீ யாவுநீகாண்
சர்வபரிபூரண வகண்டதத்வமான
சச்சிதாநந்த சிவமே.

சித்தர்களும் பாடியுள்ளதைக் காண்க:

வானலாத தொன்றுமில்லை வானுமில்லை வானிடில்
ஊனலாத தொன்றுமில்லை ஊனுமில்லை ஊனிடில்
நானலாத தொன்றுமில்லை நானுமில்லை நண்ணிடில்
தானலாத தொன்றுமே தயங்கி ஆடுகின்றதே.

ஆசாபாச காமக்ரோதங்களாகிய பெரிய இராணுவ சைன்யங்களால் காக்கப்பெற்ற என் இதயத்தில் உள்ளே புகுந்து நிற்பர் எம்பெருமான். ஆகையால், "எனை ஆண்ட இடம் தானே" என்பார். உளமே புகுந்த பெருமையை அப்பர் கொண்டாடுவர்.

கருவுற்ற காலத்தே யென்னையாண்டு
கழற்போது தந்தளித்த கள்வர்போலும்
செருவிற்புர மூன்று மட்டார்போலும்
தேவர்க்குந் தேவராஞ் சொல்வர்போலும்
மருவிப் பிரியாத மைந்தர்போலு
மலரடிகணுடி வணங்கவுற்ற
இருவர்க்கொருவராய் நின்றார்போலு
மின்னம்பர்த் தான்றோன்றி யீசனாரே,

ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமானும், "சதுரப்பெருமான் என் உள்ளத்தினுள்ளே வரும் பேருமான்" என்றார்.

இவ்வாறு பரம அத்வைத வஸ்துவே பொருள்என்றது உபதேசம்.

---

## சம்சார மாயை.

### 4

வளைபட் டகைமா தொடுமக் களெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்
துளைபட் டுருவத் தொடுவே லவனே.

## பொழிப்புரை.

(மயிலாகவும் சேவலாகவும்) கிளைத்து வெளிவந்த சூரபத்மனது நெஞ்சும் கிரௌஞ்சகிரியும் துளைபட்டு ஊடுருவிச் செல்ல விடுத்த வேலாயுதத்தை உடையவனே! வளையல்கள்

அணிந்த கைகளோடு கூடிய மனைவியென்றும், மக்களென்றும் சொல்லப்படும் விலங்குகள் பூட்டப்பட்டு (நான்) அழிவது தகுமோ? தகுமோ?

விளக்கவுரை.

'வளைகள் அணிந்த மனைவி மக்கள் எனும் சம்ஸார வலையில் கட்டுண்டு அழிவது உன் கருணைக்குத் தகுமோ? தகுமோ?' என்று முருகனை வினவுகின்றார். மாதர்கள் ஆபரணமாகக் கை வளை யணிந்து எனைப் பகட்டிச் சம்சாரம் எனும் தளையை அதாவது விலங்கை எனக்கிடுவதும் தகுமோ? ஸம்ஸாரம் அநித்யம் என்ற உணர்ச்சியை நீ எப்பொழுது ஈகுவையோ! முருகா' என்றார்.

மாதர்கள் வளையணிதல், 'சரிவளை, விரிசடை, எரிபுரை வடிவினள்' என்று அம்பாளைத் தேவேந்திர சங்க வகுப்பில் பாடியுள்ளதினின்றும் தெரியவரவாம். வளையின் உருவம் ஓர் வட்டமாய் நடுவில் ஒன்றுமில்லாமலிருப்பது. மாதர்கள் தங்களைப் பார்த்து உலகம் மயக்கம் ஒன்றும் அடையலாகாது என்றும், அப்படி அடையும் மாயை சூன்யமேயன்றி வேறன்று என்றும் அறிவுறுத்தவோ வளை யணிகின்றார்கள்?

நிலையாத சமுத்திரமான
சமுசார துறைக்கணின் மூழ்கி
நிஜமான தெனப்பல பேசி

என்றார் திருப்புகழில்.

அப்பர் ஸ்வாமிகளும்,

தந்தையார் தாயா ருடன்பி றத்தார்
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமா மிதற்கேது மகிழ வேண்டாம்
சிந்தையீ ருமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளாவுந் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாம நமச்சி வாய
வென்றெ முவார்க் கிருவிசும்பி லிருக்க லாமே

என்று வற்புறுத்தியிருக்கின்றார்.

ஆகவே மாதையும் மக்களையும் மாயையாகக் கருதி அவர் தம் உள்ளத்தில் உறைகின்ற ஈசனை முருகனென்று கருதும் நினைவு என்றருள்வாய்? மாயையாய்க்கருதப்பட்ட க்ரௌஞ்சகிரிதனைத் தன் கைவேலால் தொளைபட்டுப் போகும்படி செய்பவனும், ஆசாபாச காமக்ரோத ஸ்வரூபியான சூரனைத் தொலைத்தவனுமாகிய முருகனைத் தமது ஸம்ஸார மாயையை நீக்கிக் கொடுக்க உதவிபுரியுமாறு வேண்டுகின்றார்.

அலங்காரமாய் மாதர்கள் தங்கள் கையில் வளை இட்டுக் கொள்ளுகிறார்கள். கைகளில் இட்டுக்கொள்ளும் வளைகள் அவர்களைக்கட்டுப்படுத்துவது இல்லை. ஆனால் அவை அவர்களிடம் மோகப்படும் ஆடவர்களுக்கோ மனவிலங்குகளாய்த் தோன்றுகின்றனவாம். ஒருமாதுசென்று செங்கழுநீர்ப் புஷ்பம் ஒன்றைத் திருகி எடுத்துத தன்தலையில் வைத்துக்கொள்வதைக் காதலன் ஒருவன் பார்க்க,

முருகில் சிவந்த கழுநீரும் முதிரா
இளைஞர் ஆருயிரும் திருகிச் சொருகும் குழல்

என்று கூறுவதாகக் கவிஞர் பாடுகிறார். மடவார் மனவளைக்குள் கைவளைகள் செல்லாமலிருக்க முருகன் அருள் தேட வேண்டும்.

---

மாயையை மறைப்பது பொருளே.

5

மகமா யைகளைந் திடவல் லபிரான்
முகமா றுமொழிந் துமொழிந் திலனே
அகமா டைமடந் தயரேன் றயருஞ்
சகமா யையுணின் றுதயங் குவதே.

பொழிப்புரை.

மகத்தான மாயையை நீக்க வல்ல எம்பெருமான் தன் ஆறுமுகங்களாலும் (தத்துவத்தை) உபதேசிக்கவும் நான் (அம்மாயையினின்றும்) நீங்கிலேனே. (அப்படி நீங்கியிருப் பேனுனல்) வீடு, உடை, பெண்டிர் என்று மயங்கும் ஜக மாயையுள் அகப்பட்டு நான் தயங்குவேனே!

விளக்கவுரை.

"உலகின்கண் அறிவை மறைக்கும் மாயையினின்று எவ்விதம் ஒழிவு பெறலாம்? அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அது எளிதான வழி. அது ஷண்முக பஜனம். ஆறுமுகத்தை மொழிந்து மொழிந்து ஈடுபட்டால் மாயை ஒழிந்துவிடுமே. அந்த வழியைக் கைப்பற்றுமலும், மாயை ஒழியாமலும் இருந்துவிட்டேனே" என்று வருந்துவார்.

எங்கும் நிறைந்தபொருள் ஆறுமுகம். அது உபதேசிப்பதும் தன்னையேதான். தானன்றி வேறுள பொருள் ஒன்றுமில்லை. அது ஒன்றே உள்ளது, இரண்டாவது இல்லை. "ஏறுமயிலேறி" என்ற திருப்புகழில் அறுமுகங்களின் உபதேச மார்க்கத்தை விளக்கியுள்ளார். ஆதியில் ஓங்காரஸ்வரூபமாய் நின்ற சிவத்தின்மேல் சக்தி என்ற ஒரு மின்னல்கொடி படர்ந்து ஜகமெனும் ஒரு பெரிய காட்சியை உண்டுபண்ணியதும் அதை ரக்ஷித்ததும் ஒரு முகம். பரமனை அறியாத ஜீவனும் சிவனுக்கு ஒன்றாய் நிற்கும் சிவதத்துவ உபதேசம் செய்ததும் ஒரு முகம். பேதமாம் வினைகளை அகற்றவல்லது ஒரு முகம். அதை அடையும் வழி அபேதஸ்வரூப ஷண்முக த்யானமாம் நாம சங்கீர்த்தனம். உள்ளதை உள்ளபடி உணரவொட்டாமல் நமது உணர்ச்சிமுன் மலையாய் நின்று உண்மையை மறைக்கும் மாயையெனும் க்ரௌஞ்சத்தைப் பொடியாக்கி அந்த மலையாம் மாயையை ஊடுருவிச்சென்று நமது புல்லறிவும் அறியும்வகை உதவிபுரியும் முகமும் ஒன்று. ஆசாபாசக்ரோதங்களாம் சூரபத்மாதிகளை ஒழிப்பதும் வள்

ளியாகிய ஜீவனைத் தன்னுடன் சேர்த்து ஆண்டருளும் முகமும் ஒன்றே. இவ்வாறு ஒன்றாய் நின்ற ஷண்முகம் பலமுகமாய் ஜீவனுக்கு உதவிபுரியும் பெருமையை உபதேசித்தார். ஆறு அக்ஷரங்களும் குறிப்பிடும் தத்துவமும் இதுவே. முருகன் முகமன்றி வேறுமுகம் இல்லையாதலால் யார் முகமும் ஆறுமுகமாகவே ஞானிகள் கொள்வார்கள். பட்டினத்தார் பாடியதும் அதுவே.

"கங்குல்பகலற்றிடத்தைக் காட்டிக்கொடுத்தாண்டி"

"பார்த்தவிடமெலாம் பரமாகக்கண்டேண்டி"

மகமாயை பரம்பொருளின் நிழல் என்று சொல்லலாம். அந்தச் சக்தியின் ஒரு பாகந்தான் ஜகமாயையாய் விளங்குவது. மகமாயையின் விளையாட்டு இந்த ஸ்ருஷ்டி ஜீவராசிகளின் இயற்கையானது அறிவு. அறிவை மறைக்கும் மாயையை ஒழித்தால் அறிவு தானே விளங்கும். ஆகையால் தான் ஜீவன் சிவஸ்வரூபமென்று பாடினர். அறிவு ஆண்டவன், குருநாதனும் ஆவன், அறியாமைதான் ஜீவனாகிய சிஷ்யன். குருவும் சிஷ்யனும் ஓரிடத்தில் கூடி இரண்டறக் கலத்தல்தான் மோக்ஷம் என்பர் "அறிவும் அறியாமையும் கடந்த அறிவு நின் திருமேனியேன்றுணர்ந்து உன் அருணசரணாரவிந்தம் என்று அடைவேன்?" என்று திருப்புகழில் பாடியது காண்க.

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்றுபூதி
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பத மேதுணைய தென்றுநாளும்
ஏறுமயில் வாகனகு காசரவ ணாஎனது
ஈசஎன மானமுன தென்றுமோதும்
ஏழைகள்வி யாகுலமி தேதெனவி னாவிலுனை
யேவர்புகழ் வார்மறையு மென்சொலாதே"

என்று பழனியில் பாடியது காண்க.

கண்டனவெலாம் குரு
காண்பனவெலாம் சீடன்
நீயே ஆகிய நான் ஞானம்
நீயலாத நான் மாயை.

மாயை என்பது இரவு. தேகம் என்பது மனை. விஷய வாசனைகள் கள்வர்கள். அவர்கள் கவர்ந்ததும் நாம் இழந்ததும் ஆனந்தம் என்ற அனுபூதியாகும். இராமலிங்கஸ்வாமிகள் புலம்பியது நோக்குக:

மாயையெனும் இரவில் என் மனையகத்தே விடய
வாதனையே னுங்கள் வர்தாம்
வந்துமன அடிமையையெழுப்பி அவனைத் தமது
வசமாக உளவு கண்டு
மேயமதி யெனும் ஒரு விளக்கினை அவித்து எனது
மெய்ந்நிலைச் சாளிகை யெலாம்'
வேருற உடைத்துள்ள பொருளெலாங் கொள்ளை
கொள, மிகநடுக் குற்று நினையே
நேயமுற ஓவாது கூவுகின் றேன் சற்றும்
நின்செவிக் கேறவிலையோ
நீதியிலையோ தரும நெறியுமிலையோ அருளின்
நிறைவுமிலையோ என் செய்கேன்
ஆயமறை முடிநின்ற தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே.

4-ஆம் பாட்டின் குறிப்பையும் சேர்த்துப் பார்க்க.

மாயையின் உருவம் எவ்விதமென்றும் அறிவுறுத்துகிறார். அகமாகவும், ஆடையாகவும் மடந்தையராகவும் நின்று ஜீவன் மனத்தைக் கவரும் கவர்ச்சியாம் மாயை; பெண்டிர், மைந்தர், வாழ்வு, மனை இவையெலாம் மாயையாம் உருவெளித்தோற்றம் வெறும் பொய்யென்று உணர்த்துகின்றார் பட்டினத்தார்.

"மையாடு கண்ணியும் மைந்தரும் வாழ்வும் மனையும் செந்தீ
ஐயா நின்மாயை உருவெளித்தோற்றம் அகிலத்துள்ளே
மெய்யாயிருந்தது நாட்செல நாட்செல வெட்டவெறும்[வே.
பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப்போனது

வினைகளை அனுபவிக்கவே உண்டாயது உடம்பு, வினைகள் அற்றால் இந்த உடம்பு நிற்காது.

"வினைப்போகமேயொருதேகங்கண்டாய் வினைதானொழிந்தாற்
றினைப்போதளவும் நில்லாது கண்டாய் சிவன்பாத
நினைப்போரை மேவுநினையாரை நீங்கு மிந்நெறியில்
நின்றால், உனைப்போல் ஒருவர் உண்டோ மனமே
எனக்குற்றவரே"
—(பட்டினத்தார்)

'கரௌஞ்சமாகிய மாயை எனும் மலையைப் பஞ்சாடிய வேலவனுர்க்கு இயல் அங்காகுவம் வா' என்று மனதை அழைத்துச்சென்ற அருமையைச் கிராமலைத் திருப்புகழில் காண்க. ஜகமாயையினின்றும் விடுதலை வேண்டுவோர்க்கு ஞானபண்டிதனின் நாமமே துணை.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கண் மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கண் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ் செங்கோடன் மயூரமுமே.

என்பது உபதேசம். (கந்தரலங்காரம்.)

திருமூலர் மாயையின் ஸ்வரூபத்தை விளக்குவார்:

மனமாயை மாயை இம்மாயை மயக்கம்
மனமாயை தான்மாயும் மற்றொன்று மில்லை
வினை மாய்வதில்லை பிதற்றவும் வேண்டாம்
தனை ஆய்ந்திருப்பது தத்துவம் தானே.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளிக்
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே

என்ற அலங்கார அருமையையும் காண்க.

ஆறுமுகத்தை மறவாது நிற்பின் அதுவே பெரிய தவம். அன்பே வாழ்வு; அருளே செல்வம்; நோன்பே நினைவு; பொருளே ஸோகம்.

---

கன்னெஞ்சம் தாமரை பூக்காது.

6

திணியா னமனே சிலைமீ துனதாள்
அணியா ரரவிந் தமரும் புமதோ
பணியா வெனவள் ளிபதம் பணியுந்
தணியா வதிமோ கதயா பரனே.

பொழிப்புரை.

'எனக்கிட்ட பணிகள் யாவை?' என்று சொல்லிக் கொண்டு வள்ளிநாயகியின் பாதங்களில் வணங்கும் தணியாத அதிமோகமுள்ள தயாபரனே! கெட்டியாகிய கல்லாகிய என் மனத்தின்மீது உன் பாதங்களாகிய அழகு மிகுந்த தாமரைகள் மலருமோ?

விளக்கவுரை.

முருகன் ஓர் தனிச் சேவகன். அடியார்களை விட்டு அகலாத சேவகன். அவன் அடியார் இடம் சென்று, "ஐயனே எனக்கு நீர் இடும் பணியாது? செய்யக் காத்திருக்கின்றேன்" என்பான் 'அண்டர் உபகார சேவக்காரன்' என்றார் மற்றோரிடத்திலும்.

“ வாழியென நித்தமற வாதுபர விற்சரண வாரிஜமளிக்கு முபகாரக் காரனும்” என்ருர் வேளைக்காரன் வகுப்பில், அடியார்கள் தாபத்தையெல்லாம் தணிக்கும் தணிகைக்கு ஈசனும் அடியார்பால் அதிமோகமும் தயையும் கொண்டபிரான். அடியார்பால் அளவுகடந்த அன்பாய் நிற்கும் வள்ளல். அடியார்கள் அன்பே முருகனன்றே ! “ எனது உள்ளம் கல்லை யொத்துக் கெட்டியாக இருக்கின்றதே. அதன்மீது உன்பாதமாகிய அரவிந்தங்கள் எப்பொழுது மலருமோ ? ” என்று ஏங்குகின்ருர்.

“என் மனம் கல்லே. அதற்கு நெகிழ்ச்சி இல்லை. தாமரையோ சேறுள்ள குளத்திலேயே மலரும். கல்லில் படராது. என் மனமாகிய கல்லை உன் கருணையால் குழைத்து அதன்மேல் உன் திருப்பாத மலர் பூக்கும்படி செய்வது உன் பாரமே. நீ உன் பக்தர்களிடம் தணியா அதிமோகம் கொள்வாய் ! நீ தயாபரன். உன் தயையால் கல்லும் குழையுமே ! அதனைச் செய்தருள்க” என்ருர். இன்னும் குளம் வெட்டி ஜலம் விட்டுக் கற்களையெல்லாம் அப்புறப்படுத்திச் சீர்திருத்தஞ் செய்யின் அங்குள்ள தாமரை நன்ருகப் புஷ்பிக்கும். அவ்விதம் மலர்ந்த தாமரைப்பூவின்மேல் தாபத்தால்கொதிக்கும் கல்பட்டால் அந்தத் தாமரை வாடி அழியுமே. ஆனல் தாமரைமலர் போன்ற முருகன்பாதம் என்மனத்தில் பட்டால் (அதாவது மனதால் முருகன் பாதத்தை த்யானம் செய்தால்)கல்போன்ற என்மனம் கரைந்து அன்பின் பெருங்குளமாகி அக்குளத்தின்கண் என் இதயமென்ற மனேபத்மம் அரும்பி மிருதுவாய் ஞானவாசனையுடன் முருகன் பாதங்களுக்கே அர்ச்சிக்கத்தக்க மலராய் அவிழ்ந்து மலர்ந்ததும் என்ன வியப்பே ?

முருகன்பாதம் தாமரை ஒத்தது. பூவெனப்படுவது பொறிவாழ் பூவே என்பர். இவ்வாறு கூறத் தாமரையின் விசேஷம் யாது ? மற்ற மலரைவிட்டுத் தாமரையைப் பற்றி இங்குச் சொல்வதேன்?

தாமரை ஜீவன்போல் தரையில் பிறந்து சம்ஸாரம் என்னும் வெள்ளத்தால் மூடப்பட்டு அந்த நீர்த் தொகுதியை நாளத்தின் வாயிலாய்த் தாண்டி வெட்டவெளியின்கண் பிரகாசிக்கும் சூரியனைக்கண்டு மலர்ந்து மோகம் அடைவது. அதுபோலவே ஜீவனும் பூமியில் பிறந்து, சம்ஸாரம் எனும் பேதவாழ்க்கையைப் பக்தி அல்லது அன்பெனும் நாளத்தால் தாண்டி, மலர்ந்து, ஞானவாசனைபெற்றுப் பரஞ்சோதிப் பொருளை அடைந்து நற்கதி பெறுகின்றான். இதைப்பற்றியே கம்பர் ஸ்ரீராமரை வர்ணிக்க முயன்றபோது.

"எரிநீரில் எழுநாளகந்தத மலரைப்
பொருவு கண்ணர் கழர்க்கையர்"

என்றார். மேலும் தாமரையின் விசேஷத்தைக் கைவல்யத்தில் "தாமரையிலைத் தண்ணீர்போல ஜகத்துடன் கூடிவாழ்வார் ஜீவன்முக்தர்" என்றார். ஜலமானது தாமரையை வளர்த்துத் தாமரைக்குத் தான் ஆதாரமாய் இருந்தும், அதில் ஒட்டாதபடி இருக்கும் தன்மை தாமரையின தன்மை. உலகெலாம் கருணையால் நோக்கி அவையெலாம் செழிக்க, அதில் எட்டாமலும் கட்டுப்படாமலும் இருக்கும் குணம் ஜீவன் முக்தர்கள் குணமாம். ஈசனும் ஜகத்தும் அவ்விதமே இருப்பதையும் காண்க.

"நீரிலே முளைத்தெழுந்த தாமரையினேரிலை
நீரினோடு கூடி நின்று நீரிலாத வாறுபோல்
பாரிலே முளைத்தெழுந்த பண்டிதப்பராபரம்
பாரினோடு கூடிநின்ற பண்புகண்டிருப்பரே.—சிவவாக்கியர்.

அழகையும் ஞானவாசனையையும் ஆனந்த மோக்ஷத்தையும் குறிக்குமாதலால் தாமரைப் புஷ்பத்தை உவமையாகச் சொன்னார். அன்பர்கள் நாயகம் வள்ளி. வள்ளிக் கிசைந்த முருகன் மற்றெல்லா அடியார்க்கும் இசைபவன் என்பது பொருள். ஆகவே மனதில் முருகா வென்பதே முத்தியைக் கூட்டும் கருவி யென்பது உபதேசம்.

வினையை விடு.

## 7

**கெடுவாய் மனனே கதிகேள் கரவா**
**திடுவாய் வடிவே லிறைதாணினைவாய்**
**சுடுவாய் நெடுவே தனைதூள் படவே**
**விடுவாய் விடுவாய் வினையா வையுமே.**

பொழிப்புரை.

கேடடையும் மனமே! நீ உய்யும் வகையைக் கேட்பாயாக; (உன்னிடம் உள்ளதை)ஒளிக்காமற் கொடுப்பாயாக; கூர்மையான வேலாயுதத்தை உடைய தலைவனின் திருப்பாதங்களை நினைப்பாயாக; நீண்டகாலமாய்த் தொடர்ந்து வரும் வேதனைகளைத் தூளாகப் போகும்படி சுடுவாயாக; எல்லா வினைகளையும் விடுவாயாக; விடுவாயாக.

விளக்கவுரை.

'வினையாலும் வேதனையாலும் கெட்டே போகும் மனமே! நீ இன்புற்றிருக்கவும் வினையகற்றவும் வேதனையெல்லாம் தூள் படச் சுட்டெரிக்கவும் வேண்டுதியேல், கூர் கொண்டவேல் தாங்கிய முருகன் பாதத்தையே நினை. இந்த நினைவு ஏற ஏற, வினை சோரச் சோர, வேதனையெலா மகன்று பேரானந்த அனுபூதி அடைவாய் மனமே. என்று உபதேசிக்கின்றார். கந்தரலங்காரத்தில் உபதேசித்தவாறும் இதுவே.

" தடுங்கோண் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தான மென்றும்
இடுங்கோ ளிருந்த படியிருங் கோளெழு பாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் துளைத்தவைவேல்
விடுங்கோ னருள்வந்து தானே யுமக்கு வெளிப்படுமே."

உலகத்தில் ஈவதும் ஏற்பதும் என்ற இரண்டு செய்கைகள் உண்டு. இவ்விரண்டும் தவிர ஈட்டல் என்பதும் உண்டு. தீவினைவிட்டு ஈட்டுதல் பொருள் என்றார் ஔவையார் பாங்காய்த் தொழில் நடத்திச் சம்பாதிக்கவேண்டும். பிறகு ஈட்டிய பொருளை ஈயவேண்டும்; இடவேண்டும். ஆண்டவன் உலகத்தையும் எல்லாச் செல்வத்தையும் படைத்து உலகின் கண் ஜீவராசிகளுக்கு எல்லாவற்றையும் இட்டான்; கொடுத்துவிட்டான். ஈட்டிய பொருளை இடுவதுதான் சன்மார்க்கம். அது வாழ்வைக் கொடுக்கும் ஈவதின் பெருமையைப் பெரியோர்கள் நன்றாய்ப போதித்துள்ளார்கள்.
சிவவாக்கியர்,

ஆடுமாடு தேடினு மானைசேனை தேடினும்
கோடிவாசி தேடினுங் குறுக்கேவந்து நிற்குமோ
ஓடியிட்ட பிச்சையு முகந்துசெய்த தர்மமும்
சாடிவிட்ட குதிரைபோல தர்மம்வந்து நிற்குமே,

என்று சொல்லுவார்.

சாதாரணமாக மரணமடைந்தவர்கள் செத்தவர்கள் ஆகார்; கொடுத்தவர்களே வாழ்ந்திருக்கக் கொடாதவர்களே செத்தவர்கள் ஆவர் என்றார் கம்பர்.

மாய்ந்தவர் மாய்ந்தவர்
அல்லார்கள் : மாயா(து)
ஏந்திய கைகொ(டு)
இறந்தவர் எந்தாய்
வீந்தவர் என்பவர்
வீந்தவரேனும்
ஈந்தவர் அல்ல(து)
இருந்தவர் யாரே.

"வஞ்சகமற்றுக்கொடு. இறைவன் தாள் நினைந்து சும்மா இரு. அருள் தானே வந்து உன்னையாளும். வினையை விடு" என்றார்.

வினையாவது யாது? "மெய், வாய், விழி, நாசியொடுஞ் செவியாம் ஐவாய் வழி செல்லும் அவாவினையே" என்று பின்னால் உபதேசிக்கப் போகின்றார். ஆசை முகமாகப் பஞ்சேந்திரியங்கள் மூலமாய்ச் செல்லுவது வினை. வருவது வினையன்று; விதி. ஆகவே, "வினையை மனமே நீ விடுவாய்" என்று கூறினார்.

வினை வித்தாகும்; விதி பயிராகும். பஞ்சேந்திரியங்கள் செல்லாவிடில் வெளியில் நின்று உள்ளே வந்து ஒரு வினையுந் தோன்றுவதில்லை. வினையை நாம் விடுவது இல்லையே தவிர வினை நம்மைப்பற்றுவதில்லை. ஆகையால், "விடுவாய் டுவாய் வினை யாவையுமே" என்றார். வினை என்பது ஆசையின் பலன் என்று தெரிவிக்கிறார்.

வினை — நல்வினை தீவினை என இரண்டாகும். நல்வினை புண்ணியம்; இது நன்மையைப் பயக்கும்; உயர் பிறப்பைக் கொடுக்கும்; சுகபோகங்களை அளிக்கும். தீவினை பாபம்; இது தீமையைப் பயக்கும்; இழிபிறப்பைக் கொடுக்கும்; நரகவாதனையை அளிக்கும். இவ்விரண்டும் விடத்தக்கனவே. உயர்ந்த அறிவுநிலை அடைந்தவர்கள் இருவினைகளையும் ஒப்பாகவே கருதுவர். நல்வினையை ஆண்டவன் திருவடிகளுக்கு அர்ப்பணம் செய்து அதற்கும் தமக்கும் யாதொரு உறவும் இல்லை என்றிருப்பர். தீவினையை அவர்கள் கனவிலும் செய்ய மாட்டார். "விடுவாய் விடுவாய் வினை யாவையுமே" என்று கூறியதால், 'தீவினையகற்று' என்றும் 'நல்வினைப்பயனையும் அவன் திருவடிக்கே அர்ப்பணம்செய்' என்றும் கூறியவாறு காண்க. ஜீவன்முக்தர் லக்ஷணங்களைச் சொல்லவந்த கைவல்யம் பாடுவது:

சென்றதுகருதார் நாளைச்சேர்வது நினையார் கண்முன்
நின்றதுபுஜிப்பர் விண்விழுது வீழ்ந்து வெய்யில் நிலவாம்
பொன்றியசவம் வாழ்ந்தாலும் பு[illegible] ஒன்றும் பாரார்
நன்று தீதென்னார் சாக்ஷிநடுவான ஜீவ[illegible]தரே.

*வினையின் காரியம் விதி. ஆசை மனதைப் பற்றியது போல் வினையும் விதியும் மனத்தையே பற்றின. ஆகையால் தான் தாயுமானவர், "துள்ளுமறியாமனதுபலிகொடுத்தேன் கர்ம துஷ்ட தேவதைகள் இங்கு இல்லை" என்றும் பாடினார். மனமிறந்தால் வினையும் விதியும் இறக்கும். விதியற்ற சிவம்போல் ஆனந்தத் தாண்டவத்தில் அமரலாம் என்பது உபதேசம். திருமூலர் சொல்வதும் கருதத்தகுந்தது.*

*"உரையற்ற தொன்றை உரைசெய்யும் ஊமர்காள்*
*கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ*
*திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப்*
*புரையற்றி ருந்தான் புரிசடை யோனே"*

*இன்பம் இடையறாது ஈண்டுமவா வென்னுந்*
*துன்பத்துள் துன்பம் கெடின் குறள்*
*துன்பத்துள் கெட்ட துன்பம்*
*அவா அவாபென்பதுதான் வினை,*

---

ப்ரபஞ்ச ஞானம் பிரமையாம் அஞ்ஞானம் அது
கெடஉபதேசித்தான் ஞான குரு,

8

**அமரும் பதிகே ளகமா மெனுமிப்**
**பிமரங் கெடமெய்ப் பொருள்பே சியவா**
**குமரன் கிரிரா சகுமா ரிமகன்**
**சமரம் பொருதா னவநா சகனே.**

பொழிப்புரை.

குமரனும் பர்வதராஜ குமாரியின் மகனும், போரில் சண்டையிடுகின்ற அசுரனை நாசம்செய்தவனுமாகிய எம்பெருமான் நான் வாழும் ஊர், என் உறவினர், நான் என்னும் எண்ணம், ஆகி[illegible]கள் தீர உண்மைப்பொருளை உபதேசித்த தன்[illegible] எப்படிச் சொல்லுவேன்.

## விளக்கவுரை.

"மனமே கேள்! அசுரர்களை நாசஞ் செய்தவனும், சந்ததமும் இளமையோடு இருப்பவனுமான குமாரனும் பர்வத ராஜகுமாரியின் புத்திரனும் ஆகிய முருகன்தான் எனக்கு ஞானத்தை உபதேசித்தவன். அகம் அதாவது நான் என்பது ஒரு பிரமை; இல்லாததும் இருப்பதுபோல் காணப்படும் தோற்றமுமாகிய பொய்யைப் பொய்யென்று தள்ளவும் உண்மையாம் நித்யத்தை உணரவும் எனக்கு அவன் உபதேசித்தான்.

நான் வாழும் ஊர் இது; என் உறவினர் இவர்; நான் எனும் அகந்தை உண்டு; என்று இவ்வாறெல்லாம் தோன்றுவன எல்லாம் வெறும் பொய்ப்பொருள்கள்; பிமரங்கள். இவை கெட மெய்ப்பொருளை எனக்கு அவன் உபதேசித்தான்."

பொய்யைப் பொய்யென்றும் மெய்யை மெய்யென்றும் அறிவதுதான் ஞானம். ஆதலால்தான் தாயுமானவர்,

மெய்விடா நாவுள்ள மெய்யரு ளிருந்துநீ
　　மெய்யான மெய்யை யெல்லாம்
மெய்யென வுணர்த்தியது மெய்யிதற் கையமிலை
　　மெய்யேது மறியா வெறும்
பொய்விடாப் பொய்யினே னுள்ளத்திருந்துதான்
　　பொய்யான பொய்யையெல்லாம்
பொய்யெனு வண்ணமே புகலவைத்தாயெனிற்
　　புன்மையே னென்செய்குவேன்
மைவிடாதெழுநீல கண்டகுருவே விஷ்ணு
　　வடிவான ஞானகுருவே
மலர்மேவி மறையோது நான்முகக் குருவே
　　மதங்கடொறு நின்றருருவே
கைவிடாதேயென்ற வன்பருக் கன்பாய்
　　கருத்தூடுணர்த்து குருவே
கருதரிய சிற்சபையி லான[illegible]மிடு
　　கருணாகரக் கடவுளே.

என்று பாடினர்.

ஏதுக்களால் உண்டாவதுபோல் காண்பித்துப் பிறகு மறைவது மாயையின் செயல். இருந்து அழியும் வஸ்துவை நித்யமெனக் கருதினல் அந்த வஸ்து அழியுங்கால் கைப் பற்றிய பொருள் காற்றைப பற்றிய கைபோல் ஆகிவிடும்; அந்தக் காலத்தில் இழந்த பொருளைப் பற்றியமனம், வேதனை யுறும். வேதனையை நீங்கச் செய்வது உண்மையான அறிவு தான். அதுவே ஞானம். அகம் என்பது தோற்றமென் றும், இந்த உண்மை தெளிந்தது தேற்றமென்றும் அறி வுறுத்துகிருர்.

அமரும்பதிகேள்: என் மனத்தில் அமரும்பதியே, கேட்பாயாக என்னும் பொருள் தொனிப்பதையும் காண்க. நம் மனம் அவன் அமரும்பதி;

நித்தமுமோதுவார்கள் சித்தமேவீடதாக
நிர்த்தமதாடுமாறு முகவோனே

என்றவாரும், "நினைத்தாற் சித்தத்துறைவோனே" என்றவாறும் காண்க. அவன்தான் என் இதயத்தில் அமர்ந்து நிற்கும்பதி. முருகன் அடியார் மனத்தில் அமர்ந்து நிற்பது பற்றியன்ரோ அடியார்களுக்கு அமரர் என்ற பெயரும் வழங்குவது. ஞானேபதேசிகனே முருகன் என்று உபதேசித்தவாறு. மாயையின் நிலையில்லாமையை "மகமாயை களைந்திட" என்னும் பாட்டின் விளக்கத்தில் காண்க.

பெண்ணுசை ஒழியுமோ.

9

**மட்டூர் குழன்மங் கையர்மை யல்வலைப்**
**பட்டு சல்படும் பரிசேன் றொழிவேன்**
**தட்டு டறவேல் சைலத் தெறியு**
**நீட்டு ரநிரா குலநிர்ப் பயனே.**

பொழிப்புரை,

இடையேதங்கு தடைகள் இல்லாமல் வேலாயுதத்தை (க்ரௌஞ்சம் என்னு) மலையின் மீது எரியும் நிஷ்டூரனே! வியாகூலமற்றவனே! அச்சமற்றவனே! தேன் நிறைந்த பூக்களை யணிந்த கூந்தலையுடைய மாதர்களின்மீது உண்டாகும் மோகவலையில் அகப்பட்டுத் திண்டாடும் தன்மை எனக்கு எப்பொழுது ஒழியும்?

விளக்கவுரை.

ஆணும் பெண்ணுமாய் விரிந்த மண்ணுயிர்களெல்லாம் ஒன்றைப் பார்த்து மற்றொன்று மோகமடைந்து இந்த மோகத்தில் நித்ய ஞானம் நழுவித் துக்கத்தில் மூழ்கிவிடுகின்றன. ஆனந்தம் அடைவதற்கு மங்கையர்கள் மீது எழும் ஆசை ஒரு பெரிய தடையாய் நிற்கும். ஆகவே,

*சுரப்பற்று வல்வினை சுற்றமு மற்றுத் தொழில் களற்றுக்*
*கரப்பற்று மங்கையர் கையிணைக் கற்றுக் கவலை யற்று*
*வரப்பற்று நாதனை வாயார வாழ்த்தி மனம டங்கப்*
*பரப்பற் றிருப்ப தன்றோ பரமா பரமா னந்தமே.*

என்று பட்டினத்தார் பாடியதும் கா

"தேன் ஊறுகின்ற புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட கேசங்களையுடைய மங்கையர்கள்மீது ஆசையெனும் வலையில் அகப்பட்டு இழிவான துன்பத்தை அனுபவிக்கும் நிலை என்றுதான் ஒழியும் முருகா? என் மாயை நீக்க உன்னால் அன்றி வேறு எவராலும் முடியுமோ! க்ரௌஞ்சகிரியின் மேல் அடுக்கடுக்காய் நிர்மாணம் செய்யப்பட்ட அதன் பாகங்களெல்லாம் அடியோடு அழியும்படி வேலை ஏவிய நீட்டுர! கவலையும் பயமும் அற்ற முருகனே!" என்றார். மாயயை ஒழித்தாலன்றிப் பயமும் கவலையும் நீங்காது என்ற வாறு.

ஆசைகளில் பெண்ணாசை இயற்கையில் உண்டாவது. பிறந்தவுடன் ஆண் என்றும் பெண் என்றும் பேதம் பற்று கிறது. பற்றிய பேதம் நாளடைவில் உடலின் விகாரங் களாலும் மனதின் மையலாலும் மையல் மோகம் என்ற வியாதியால் மூடப்பட்டுத் துன்பத்தை அடைகிறது. பற்று வது மனத்தின் இயல்பு. ஈசன், கனியினும், கட்டிபட்ட கரும்பினும், பனி மலர்க் குழல் பாவை நல்லாரினும் எவ்வளவு இனியன் என்னும் அவனடியைப் பற்றும் சக்திகொண்டு மிகவும் பலமாய்ப் பற்றுமல், மனதைச் சும்மா விடின் அது கண்டதையெல்லாம் பற்றிக் காணுத வினைகளுக்கு நம்மை ஆட்படுத்தும். முருகன் அருளின்றி ஆசையை, முக்கியமாய்ப் பெண்ணாசையை நிவர்த்திக்க முடியாதது பற்றியே பெரியோர்கள் ஆண்டவன் அருளையே பலமாக வேண்டுவார்; அவ்வாறே இங்கும் வேண்டுகின்றார். மறக்க ஆசையையும், நினைக்க முருகனையும் என்று அறிந்த பேரன்பை இராம்லிங்க சுவாமிகள், "மருவு பெண் ணாசையை மறக்க வேண்டும், உனை மறவாதிருத்தல் வேண்டும்" என்று போற்றுவதையும் காண்க.

தேவாசையில் ஈடுபட்டு மூவாசையையும் மறத்தல் வேண்டும். உ[illegible]ன்கண் எவரையும் ஆட்கொள்ளவல்ல ஈச னர் தாம் ஒரே [illegible]ருகவும் மற்றெல்லா உயிர்களும் பெண்

ளுகவும் கருதிய வேதங்கள் நிற்க, புருஷனைவிட்டுப் புருஷ வேஷந்தரித்ததோர் பெண்ணை ஏனைய பெண்கள் காமுறு வதும் அறிவின்மையே ஆகும்.

அன்பனைவிட்டு மற்றோரவலனை விரும்பிப்பின்னர்
துன்புறுவார்கள் போலச்சுயப் பிரகாசனாகு
ம்பனைவிட்டுப் பொல்லாஞாலத்தை விரும்பிப்பின்னர்
துன்புறுவார்கள் அந்தத்துயரினுக்கு ஒழிவுமுண்டோ.

அணிக் குமரியாகி முருகன் மேல் மோகம் கொண்மின். இதுவே பெண்ணாசையைத் தாண்டும் வழி. முருகன்மேல் காதல் கொண்டால் நல்ல காலம் உண்டாகும் என்றார். "காலமுண்டாகவே காதல்கொண்டு உய்மின்" என்பர் மாணிக்கவாசகர்.

கருடத்தனிப்பாகன் காண்டற்கரியன காதல் செய்யில்
குருடர்க்கு முன்னே குடிகொண்டிருப்பன கோலமங்கு
செருடக்கடிமலர்ச் செல்விதன் செங்கமலக்கரத்தால்
வருடச்சிவப்பன மாற்பேறுடையான் மலரடியே.

என்றார் அப்பர்.

'மட்டூர்குழலில் இருக்கும் அதாவது கேசத்தை அலங்கரிக்கும் மாலையால் இழுபட்டு மலைத்து அழியாதீர். முருகன் அணியும் மாலையைக் கருதி நீர் சுகமும் ஆனந்தமும் அடைமின்' என்றார் திருப்புகழில்.

அன்பாக வந்து உன்றாள் பணிந்து
ஐம்பூத மொன்ற நினையாமல்
அன்பால் மிகுந்து நஞ்சா ருகண்க
ளம்போ ருகங்கள் முலைதானும்
கொந்தே மிகுந்து வண்டா டிநின்று
கொண்டா டுகின்ற குழலாரைக்

கொண்டே நினைந்து மன்பே துமண்டி
குன்று மலைந்து அலைவேனோ ;
மன்றாடி தந்த மைந்தா மிகுந்த
வம்பார் கடம்பை யணிவோனே
வந்தே பணிந்து நின்றார் பவங்கள்
வம்பே தொலைந்த வடிவேலா
சென்றே யிடங்கள் கந்தனெனும்போ
செஞ்சேவல் கொண்டு வரவேணும் ;
செஞ்சாலிகஞ்சநன்றாய் வளர்ந்த
செங்கோ டமர்ந்த பெருமாளே.

'நிட்டூர நிராகுல நிர்ப்பயனே !' என்றார். போரில் இறங்கின வீரர் மனத்தில் ஆகுலமும், பயமும் இருத்தலாகாது. நிட்டூரம் அல்லது கொடுமை நிறைந்திருக்கவேண்டும். கோழை மனத்தவர்கள் போருக்கு உரியவர் அல்லர். என்னிடம் குடிகொண்ட மையலோ சயில உருவத்தில் நின்ற அசுரன் போன்ற கொடுமையுள்ளது. அதனை ஒழிக்க உனக்கும் கொடுமைவேண்டும். தயை தாக்ஷண்யம் உதவாது. அவ்வாறு வீரக்கோலம்கொண்டு நிற்கும் நீயே என்னிடம் குடிகொண்ட இவ்வரக்கனைக் கொல்லக்கூடும் என்று கூறிய அழகையும் கவனிக்க.

## 10

கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார் பவலா ரிதலா ரியெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே.

### பொழிப்புரை.

'மாலையை மார்பில் அணிந்தவனே! வலன் என்ற அசுரனை அழித்த இந்திரனின் இருப்பிடமான சுவர்க்கத்துக்குச் சத்துருவான சூரபத்மனாகிய மாமரத்தை மடிவிக்கும் பொருட்டு எடுத்த வேலாயுதத்தை யுடையவனே! கரிய எருமையின்மீது ஏறி யமன் வருவானானால் (அச்சமயம்) கலாபத்தினைக்கொண்ட மயில்வாகனனாய் என்முன் தோன்றுவாயாக.

### விளக்கவுரை.

மரணம் என்பது பெரும்பாலோர் அறியாத ஒரு நிகழ்ச்சி. ஜீவன் தேகத்தை விட்டுப் பிரியும் செயல் என்று அதனைச் சொல்லலாம். யார் மரணம் அடைகின்றவர் என்று கேள்வி கேட்டுவிட்டால் இதற்குப்பதில் மரணம் அடைந்தவர்கள் சொல்லுவதில்லை. மரணம் அடைந்தவர்களை உலகத்தில் நாம் கண்ணுறுவதும் இல்லை. உடலும் உயிரும் கலந்து நிற்கும் ஜீவனிடத்தில், உதித்த தான் எனும் ஒரு உணர்ச்சி ஊனும் உயிரும் பிரியுங்கால் மரணம்தான் அடையும் என்ற ஒரு பாவத்தை வெளியிடும். உயிருடன் இருப்பவர்கள் மரணம் வரும் என்று எண்ணுகிறார்களே தவிர மரணம் அடைந்தவர்கள் யாவர் என்றும் தெரிவது இல்லை. மரணம் அடைந்தார் என்று சொல்லுங்கால் யார் எதை அடைந்தார்கள் என்பதும் புலப்படுவதில்லை. ஆகவே மரணம் என்பது யாது?

உயிருடன் இருக்கும் ஜீவர்களுக்கு உடலும் உயிரும் பிரிந்திடும் காலம் வரும் என்ற ஒரு நோக்கம் தட்டுகின்றது. அந்தக்காலம் நேரிடின் அப்பொழுதுதான் மரணம் அடைவோம் என்ற ஒரு எண்ணமும் பயமும் தோன்றுகின்றன. உண்மையை உற்றுநோக்கிய பெரியோர் மரணம் என்பது பொய்யென்பர். தாயுமானவர் சொல்லுவதைக் கவனிக்க வேண்டும். 'உலகத்தில் ஊர்ந்தும், நடந்தும், பறந்தும், மற்றும் செயல்கொண்டும் இருக்கும் எல்லா உடல்களும் அவைகளை நிர்மித்த பஞ்சபூதங்களும் எவையும் அழியும்— ஒன்றுடன் ஒன்றாகி முடிந்துவிடும். இவைகளையெல்லாம் கடந்து நிற்கின்ற பேரொளியே தத்துவம் என்றும், "பிறவாமை என்றைக்கும் இறவாமையாய் வந்து பேசாமை யாகுமெனவே" தனக்குப் போதிக்கப்பட்ட பொருளென்றும் பாடியுள்ளார்.

தெரிவாக ஊர்வன நடப்பன பறப்பன
செயற்கொண் டிருப்பன முதற்
றேகங்க ளத்தனையு மோகங்கொள் பௌதிகஞ்
சென்மித்த வாங்கி றக்கும்
விரிவாய பூதங்க ளொன்றோடொன் றாயழிவு
மேற்கொண்ட சேடமதுவே
வெறுவெளி நிராலம்ப நிறைசூன்ய முபசாந்த
வேதவே தாந்த ஞானம்
பிரிவாத பேரொளி பிறக்கின்ற வருளருட்
பெற்றோர்கள் பெற்றபெருமை
பிறவாமை யென்றைக்கு மிறவாமை யாய்வந்து
பேசாமை யாகுமெனவே
பரிவா யெனக்குநீ யறிவிக்க வந்ததே
பரிபாக கால மலவோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணாநந்தமே.

உலகத்தில் ஊன் நிறைந்த உயிரும், உயிர்பரந்த ஊனும், எங்கும் காணப்படுகின்றன. ஊன் என்பதை ஜடம் என்றும் உயிர் என்பதைச் சைதன்யம் என்றும் சொல்லலாம். இது இரண்டும் கலந்த இடத்தில் தான் ஜீவனைக் காணலாம். உலகெலாம் ஊனும் உயிரும் கலந்தும், பிரிந்தும் பெரிய கூத்தை இழைக்கின்றன. கலந்த இடத்தைப் பிறப்பென்றும் பிரிந்த இடத்தை இறப்பு அல்லது மரணம் என்றும் கூறுவது உலக இயல்பு. ஜீவனோ இறப்பதுமில்லை, பிறப்பதுமில்லை. இந்த அறிவு ஏற்படுமாகில் ஒருவனுக்கு மரணம் உண்டு என்ற பாவம் மனதைவிட்டு நழுவிவிடும். பொய்ப் பேச்சாய்ப் போய்விடும். மறுபிறப்பு வேண்டாம் என்று கருதுபவர் அந்த நிலையை எப்படி அடைவது? பிரிந்தன கூடும்; கூடினபிரியும். அதுபோல் இறந்தவர் பிறப்பர்; பிறந்தவர் இறப்பர். பிறந்தவர் இறவாமல் நின்றுவிட்டால் பிறவாமலும் இருந்துவிடலாம். இதுதான் தாயுமானவர் உபதேசம். இப்படிப் பிறந்தவர்கள் இறவாமல் இருப்பதற்கு வழி உண்டா? அல்லது மருந்துண்டா? பட்டினத்தார் மருந்து உண்டு என்பர்.

பிறவா திருக்கவரம் பெறல்வேண்டும் பிறந்துவிட்டா
லிறவா திருக்க மருந்துண்டுகாணிது வெப்படியோ
அறமார்புகழ்த்தில்லை யம்பலவாண ரடிக்கமல
மறவா திருமனமே யதுகாணன் மருந்துனக்கே.

ஈசன் நாமத்தை நினைத்து இருப்பதே மருந்தாம். எப்படியோ எனில்:—மறந்தது இறந்தது. மனிதன் தன் தேகத்தை நினைந்து நினைந்து அந்த நினைப்பால் அதைக் கொல்லுகின்றான். தேகத்தை மறந்து மறந்து அதை வளர்க்கின்றான். காலெல்லாம் நினைந்து, ஊரெல்லாம் சுற்றிப் பெருங் களைப்புடன் வாடும்படிசெய்து வீட்டில் தேகத்தைக் கொண்டுவந்து தள்ளுகின்றான். இரவில் தனது தேகத்தை மறந்து மறந்து, தூங்கி அதற்குப் பெரிய ஊக்கத்தை கொடுக்கின்றான்.

மறந்த வஸ்து ஒருவன் இழந்த வஸ்து வாகும் நினைவு இல்லாவிடில் நமது பொருள்கள் எல்லாம் இல்லாதவா றன்றோ! அதுபோலவே மறந்தவன் இறந்தவனாவன். தேகத்தை மறந்து அதனால் இறந்துநிற்கும் ஜீவன்முக்தர்கள் பிறவார்கள். இவ்விதம் இறந்தவர்களாம் பெருமையைக் கொண்டாடும் பாக்களை நோக்குக.

சிவவாக்கியர்:

கறந்தபால் முலைப்புகா கடைந்தவெண்ணெய் மோர்புகா
துடைந்துபோன சங்கினோசை யுயிர்களு முடற்புகா
விரிந்தபூ வுதிர்ந்தகாயு மீண்டுபோய் மரம்புகா
இறந்தவர் பிறப்பதில்லை யில்லையில்லை யில்லையே.

அருணகிரியார் கந்தரலங்காரத்தில் உபதேசிப்பது யாதெனில்,

சொன்ன கிரௌஞ்ச கிரியூடுருவத் தொளைத்தவைவேல்
மன்ன கடம்பின் மலர் மாலை மார்பமௌ னத்தையுற்று
நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லா மொருங்கிய நிர்க்குணம்—
டென்னை மறந்திருந் தேனிறந்தேவிட்டதிவ்வுடம்பே. [பூண்

உயிரைவிட்டுப் பிரிந்த உடல் இறக்கும். ஆனால் உயிரினுக்கு உயிராய் நின்ற ஜீவன் இறப்பதில்லை. அஞ்ஞானத்தால் உடலை நம்பி ஊனை வளர்த்து அந்த உடல் இறக்கும் போது தான் இறப்பதாகக் கருதிப் படும்பாடே மரணபயமாகும். ஜீவன் உடல் அன்று என்ற பூர்ணஞானத்தை முருகனருளாற் பெற்று உடலை வேற்றுமைப்படுத்தியும், மறந்தும் நின்ற ஞானம் மரணத்திற்கு நல்ல மருந்து.

அஞ்ஞான வசத்தினால் மரணபயம் அடைந்த ஜீவர்கள் மரணத்தை எங்கெங்கவாறோ அலங்கரித்துத் தோன்றாத தோற்றங்களெல்லாம் கற்பித்துப் பயத்தைத் தங்களைவிட்டு நீங்காமல் போற்றி வருகிறார்கள். எமன் என்றும், எருமைக்

கடாவென்றும், சூலம் என்றும் எமதூதர்களென்றும் சொல்லிச் சொல்லிப் பயமுறுத்திவிடுகிறார்கள். 'முருகா, பயம் என்னை நாடும்போது என்னிருளகல, உண்மையாம்! ஜோதிஸ்வரூபமாம் நின்னுருவம் என்னை வந்து காத்து ரக்ஷிக்கவேண்டும், என்று சொல்லி ஈசனை நாடிடும் அடியார் களை மரணம் நாடாது என்பது பெரியோர்களின் வாக்கு. தாயுமானவர்:

எல்லா மறிந்தவரு மேதுமறி யாதவரு
மில்லையெனு மிவ்வுலக மீ
தேதுமறி யாதவ னெனப்பெயர் தரித்துமிக
வேழைக்கு ளேழையாகிக்
கல்லாத வறிவிற் கடைப்பட்ட நானன்று
கையிஞ லுண்மை ஞானங்
கற்பித்த நின்னருளினுக்கென்ன கைம்மாறு
காட்டுவேன் குற்றே வஞ
னல்லார்ந்த மேனியொடு குண்டுகட் பிறையெயிற்
ருபாச வடிவமான
வந்தகா நீயொரு பகட்டாற் பகட்டுவ
தடாதடா காசுநம்பாற்
செல்லாதடாவென்று பேசுவா யதுதந்த
செல்வமே சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேஜோமயானந்தமே.

அருணகிரியார் சொல்வதாவது:

தண்டா யுதமுந்திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டா யடாவந்த காவந்து பார்சற்றென் கைக்கெட்டவே.

இங்கு ஒரு தத்துவத்தை வெளிப்படுத்த வேண்டும். ஈசன் ஆடும் அம்பலத்தில் எமன் வாரான்; காணப்படான்.

எந்த இடத்தில் ஈசன் காணப்படுகிறதில்லையோ அந்த இடத்தில் இருப்பவன் எமனே யாகும். அன்பன் ஈசன் எங்கும் உளன். உயிர்தோறும் உடல்தோறும் ஒன்றாய் விளங்கி நிற்பான்.

ஞானிகள் அவனை எங்கும் காண்பார்கள். எமனைக் காணார்கள். அவர்களுக்கு அன்பனைத்தவிர அவலன் காட்சி கூடுகிறதில்லை. உதாரணமாகப் பிரஹ்லாதன் சரித்திரத்தைப்பார்த்தால் இந்தப்பொருள் நன்கு விளங்கும். உலகெங்கும் கண்ட நாரணனைப் பிரஹ்லாதன் தூணிலும் கண்டான். உலகெங்கும் காணாத நாரணனைத் தூணிலும் கண்டிலன் ஹிரணியன். தூணிலவதரித்த இறைவன் பிரஹ்லாதனுக்குத் தெய்வமாகவும், ஹிரண்யனுக்கு மறலியாகவும் நின்ற வியப்பைக் காண்க. அன்பருக்கு எமன் காணினும் அவன் ஈசனாய் நின்று உதவுவான். அல்லார்க்கு ஈசனே தோன்றினும் அவன் அவருக்கு எமனாவன். ஆகவே எங்கும் நிறைந்த ஈசனை கண்படக்கூடினால் மறலி என்பவன் இல்லை. இந்தத் தத்துவத்தை இந்தச் செய்யுளில் போதித்துளார். அருணகிரியார் கந்தரலங்காரத்திலும் முருகனிடத்தில் பின்வருமாறு கூறினார்:

மரணப்ர மாத நமக்கில்லை யாமென்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலுமுண் டேகின் கிணிமுகுள
சரணப்ர தாப சசிதேவி மங்கல்ய தந்து ரக்ஷா
பரணக்ரு பாகர ஞான கரக்ஷர பாஸ்கரனே.

அறிவை நினைந்து உடலை மறந்து இருந்த பெரியோர்களின் மகிமையை எவ்வாறு உரைப்பது என்று பட்டினத்தார் புலம்புவார்.

அறந்தானி யற்று மவனிலுங் கோடியதிகமில்லந்
துறந்தானவனிற் சதகோடியுள்ளத் துறவுடையோன்
மறந்தானறக்கற் றறிவோடிருந்திரு வாதனையற்
றிருந்தான் பெருமையை என் சொல்லுவேன் கச்சி
யேகம்பனே.

11

கூகா வெனவென் கிளைகூடியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவித்
தியாகா சுரலோக சிகா மணியே.

பொழிப்புரை.

நாகாசலம் என்னும் மலையில் இருப்பவனே! வேலவனே! நான்கு வகைக் கவித்துவத்தை அடியார்களுக்குக் கொடுப்பவனே! தேவருலகத்தின் சிரோரத்னம்போல்விளங்குபவனே! (நான் இறக்கும்போது) என் மீது என் சுற்றத்தினர் விழுந்து கூகா என்று அழுமாறு நான் சாதாரண மரணத்தை அடையாத வகையில் மெய்ப்பொருளை உபதேசித்தவற்றை நான் என்ன என்று சொல்வேன்!

விளக்கவுரை.

முன் பாடலில் எதிரப்படுவாய் என்று வேண்டியது போல், முருகன் வந்து உபதேசம் செய்யத்தான் மரணத்தை ஜயித்த பெருமையை இப்பாடலில் கூறுகின்றார். முருகனே மெய்ப்பொருள் என்ற உபதேசத்தை அடைந்த பெரியோர்கள் மரணத்தை வென்றவர்கள். அவர்கள் மரணத்தினால் மோகமடையார்கள். அவர்களுக்குப் பயமில்லை. நாகாசல என்பது செங்கோட்டு வெற்பனே என்று பொருள்படும். ஆசுகவி, மதுரகவி, சித்ரகவி, விஸ்தாரகவி என்ற நாலுவித கவித்வத்தை அடியார்க்குக் கொடுப்பவன் அவனே. முருகனை உண்மை அன்புடன் பஜிப்பவர்க்குக் கவித்துவம் தானே வரும். முருகனே தமிழின் தலைவன், அவனை வணங்குபவர் யாதொரு கல்வியும் பெறுமலே கவிகளாக விளங்குவதை நாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். தேவலோகத்துக்குச் சிறந்த மணியாய் விளங்குபவன் அவனே. மரணபயம் நீங்க மெய்ப்பொருள் உபதேசிக்கும் ஞானபண்டிதனும் உபதேசிப்பவனும் முருகன்; அவன் உபதேசிக்கும் பொருளும் அவனே.

## 12

**செம்மான் மகளைத் திருடுந் திருடன்**
**பெம்மான் முருகன் பிறவா னிறவான்**
**சும்மா இருசொல் லறவென் றலுமே**
**அம்மா பொரு ளொன்று மறிந்திலனே.**

பொழிப்புரை

மேன்மையுள்ள மகாவிஷ்ணுவின் மகளான வள்ளியைக் களவொழுக்கத்தால் மணந்தவனும், என் தலைவனும், பிறப்பு இறப்பு அற்றவனுமான முருகன் (என்னை நோக்கி) "பேச்சற்றுச் சும்மா இரு" என்று உபதேசித்தபோது அதன் பொருளை நான் அறிந்துகொள்ள வில்லையே! இஃதென்ன வியப்பு.

விளக்கவுரை.

*பிறப்புக்கு மேற்பட்ட பெம்மான் முருகன் என்க. ஜீவன் பிறப்புஇறப்பு இவ்விரண்டிற்கும்உட்பட்டு நிற்கிறான். பிறப்பையும் தன் இஷ்டப்படி எடுக்க எவருக்கும் முடியாது; தன் இஷ்டப்படி இறக்கவும் சக்தியில்லை. முருகனே பிறவாமலும் இறவாமலும் என்றும் உள்ளபொருளாய் விளங்குகின்றான். பூரண அவதாரம்எடுத்துக்கிருஷ்ணனாய் அவதரித்துக் கோகுலத்தில் வளர்ந்து ஆயர்பாடியில் பக்தர்களாகிப் பிறப்புற்ற இடைச்சியர்களிடத்தில் லீலைகள் செய்து, அவர்களால் காதல் உறப்பெற்று, அவர்கள் மனதைத் திருடி அவர்களால் கட்டுண்டு, அவர்களை யெல்லாம் இன்புறச்செய்த மகிமைகளெல்லாம் முருகனுக்கும் உரியன. தாமரைப் புஷ்பம் போலச் சிவந்த நிறத்தையுடைய இலக்ஷ்மியானவள் ஒரு மானுருவமெடுத்துத் தவம் செய்துகொண்டிருக்கும் தன்*

புருஷனை விஷ்ணுவிடம் விளையாடி நிற்க, தவம் தீர்ந்து அத்தவத்தின் பேற்றை அவர் ஒரு கண்ணேக்கால் மாணிடம் அளிக்க அந்தத் தனிமானுகிய இலக்ஷ்மி வள்ளிநாயகியை ஈன்றாள்.

செம்மான் மகளைத் திருடும் திருடன். கிருஷ்ணன் ருக்மணியைத் திருடியதுபோல் முருகன் வள்ளியை ஆட்கொண்டான். பரமசிவனும் ஒரு பெருந் திருடன். ஞான சம்பந்தர் முதல் பாட்டிலேயே "என் உள்ளங் கவர் கள்வன்" என்றார். 'அலைநீர்க்கரையில் அண்டும் அடியார்கள் பாவத்தை யெல்லாம் திருடிக்கொண்டு தன்னைக்கொடுத்து ரக்ஷிக்கிறான்' என்றார். செந்திலாதிபனை ஆதிசங்கரர் அடியார்கள் பாவத்தை அவர் அனுமதியன்றியே தீர்த்து விடுதலால் திருடன் என்றார்.

முருகன் செய்த உபதேசம் யாது என்னின், "சும்மா இரு; சொல்லற" என்பது தான்.

பிறவி தீரவென்றால் அகப்பேய் நீ பேதகம்பண்ணதே
துறவியானவர்கள் அகப்பேய் சும்மா இருப்பார்கள்

என்றார் அகப்பேய் சித்தர்;

"சொல்லான்முழக்கிலோசுகமில்லை சும்மா இருக்க அருளாய்"

என்றார் தாயுமானவர். பட்டினத்தார் உபதேசித்ததும் இதுவே.

'சும்மா இருக்கவைத்தான் சூத்திரத்தை நானறியேன்,
பார்த்த விடமெலாம் பரமாகக் கண்டேனடி"
" அம்மா இது பொருளென அதனையே விழுங்கினனடி
கங்குல் பகலற்றிடத்தை காட்டிக் கொடுத்தாண்டி"

முருகன் "சும்மா இரு" என்று உபதேசித்தான் அதாவது "இருந்தபடி இரு" என்றான். நானும் பேசாமல் சும்மா இருந்தேன் மௌனத்தையுற்று இருந்தேன். நிற்குணம் பூண்டு இருந்தேன. என்னை மறந்து உபதேசித்த முருகனை நினைந்து இருந்தேன். உடனே என்ன ஆச்சரியம் அம்மா! பொருள் அதாவது இதுவரையிலும் ஒன்றாத ஒரு பொருள் என்னுடன் ஒன்றியிருப்பதை உணர்ந்தேன் ஆனால் அதை அறியவில்லை அறிவுக்கெட்டாதது உணர்ச்சியில் ஒன்றி நிற்பது தெரிந்துகொண்டேன் பரம்பொருள் உள்ளத்தில் ஒன்றிவிட்டால் அதைப்போலபாக்கியம், ஆனந்தம் அமைதி உலகத்தில் உண்டோ! ஒன்றியது ஒன்றுதான்.

"ஒன்றும் ஒன்றும் ஒன்றுமே
உலகனைத்தும் ஒன்றுமே
அன்றும் இன்றும் ஒன்றுமே
அனாதியான தொன்றுமே
கன்னல் நின்ற செம்பொனை
களிம்பறுத்து நாட்டினல்
அன்று தெய்வம் உம்முளே
அறிந்ததே சிவாயமே"

ஸ்ரீ சிவவாக்கியர் இதை அறிந்த அனுபவத்தைச் சொல்லுவார்.

"விண்கலந்து நின்றஜோதி
மேலைவாசலைத்திறந்து
கண் களித்த வுள்ளுலே
கலந்து புக்கு இருந்த பின்பு
மண்பிறந்த மாயமும மயக்கமும் மறந்துபோய்
என்கலந்தஈசனேடு இசைந்து வாழ்வதுண்மையே

அந்த தத்வம்தான் ப்ரம்மம் கடவுள் என்பதும் அதுவே.

"எங்குமுள்ள ஈசனார் எம்முடல் புகுந்த பின்பு
பங்குகூறு பேசுவார் அப்பன் பாடுசென்று அணுகிலார்
உங்கள் தெய்வமும் எங்கள் தெய்வம் என்றுபேத முள்ளதோ
உங்கள் பேதமன்றி யந்த வுண்மை பேதமில்லையே"

இந்த பாசுரத்தின் அனுபூதியை "தூசாமணியும் துகிலும் புனைவான்" என்ற பாசுரத்துடன் சேர்த்து பொருள் கொள்க.

பேதத்தைச் செய்யாமல் அபேதத்தை நாடி எங்கும் நிறைந்த முருகனைத் தியானிக்கும் பெரியோர் சும்மாவேதான் இருப்பார்கள். ஆசையென்ற கடலைத் தாண்டி ஆணவம் என்ற மலையைத் தூளாக்கியன்றோ பேசா வனுபூதியைப் பெறுவது!

## 13

**முருகன் றனிவேன் முனிநங் குருவென்**
**றருள்கொண் டறியா ரறியுந் தரமோ**
**உருவன் றருவன் றுளதன் றிலதன்**
**றிருளன் றொளியன் றெனநின் றதுவே.**

### பொழிப்புரை.

அவனுடைய அருளால் அவனை முருகனென்றும், ஒப்பற்ற வேலைத்தாங்கிய முனிவனென்றும், நம் குருவென்றும், அறியாதவர் அம்மூலவஸ்து உருவன்று, அருவன்று, உளதன்று, இலதன்று, இருளன்று, ஒளியன்று என்று இவ்வாறு நின்ற நிலையை உணரக்கூடுமோ?

### விளக்கவுரை.

*முருகனைக் குருவாகி நம்பி வழிபடும் அடியார்க்கும் அவன் அருள்வாயிலாய் அன்றிப் பொருள் விளங்காது; அனுபூதி அடையக் குருநாதன் அருள்வேண்டும். "ஆணவம் அழுக்கடையும் ஆவியை விளக்கி அனுபூதி அடைவித்தருளும் பார்வைக்காரனும்" என்றார் வேலைக்காரன் வகுப்பில். "யார் தருவார் எனக்கு அருளினால் அநுபவம் ஆண்டவனே, குருநாதா!" என்று பெரியார் புலம்பியதையும் அறிக. ரூபம், அரூபம் இரண்டிற்கும் மேலாக நின்றது அவன் உரு. அப்பர் ஸ்வாமிகள், "தம் முருவும் பிறந்துருவும் தாமேயாகிநிமிர்ப்புன் சடையடிகள் ! நின்றவாறே" என்பதும் காண்க. உள்ளது என்றும் இல்லது என்றும் பேசப்படுவதும் அதுவே. இருள் என்றும் ஒளியென்றும் விளங்குவதும் அதுவே. ஒளியின்குறைவு இருளென்றும், இருளின்குறைவு ஒளியென்றும் உலகத்தார் வழங்குவார்கள்.*

முருகனை முனி என்றழைத்தார். "சினத்தை நிந்தனை செயுமவர்" முனிவர்.

தினத்தினம் சதுர்மறை முனிமுறைகொடு
புனல் சொரிந்து அலர்பொதிய விண்ணவரோடு
சினத்தை நிந்தனைசெயு முனிவரர்தொழ மகிழ்வோனே

என்று திருப்புகழில் காண்க ஆசையை முனிந்தவர்கள் முனிவர்கள்.

பேதப்பட்ட ரூபங்கள் அனைத்தும் மாயும்; ரூபங்கள் இல்லாதவையும் மாயும். ஈசன் இல்லையென்றவர்க்கு இல்லாத ஈசனும், ஈசன் உளன் என்பவர்க்கு இருக்கின்ற ஈசனும், வெளிச்சமாயும், இருட்டாயும் விளங்கும் பொருளே பொருள் என்றார்.

சிவவாக்கியர் சொல்லுவதும் வெகு நேர்த்தியானது :

இல்லை இல்லை யென்றுநீர் இயம்புகின்ற ஏழைகாள்
இல்லை யென்று நின்றதொன்றை யில்லை யென்னலாகுமோ
இல்லை யல்ல வொன்று மல்லவிரண்டு மொன்றி நின்றதை
எல்லை கண்டு கொண்டபேர் இனிப்பிறப்பதில்லையே.

மாயை என்பது இல்லை என்றால், கல்லில் முட்டிக் கொண்டால் வலி தோன்றுகிறதே ! நல்லுணவை உண்டால் இனிக்கின்றதே! உலகின்கண் உண்டாகும் அனுபவங்கள் எல லாம் மாயையென்றால் அதைத்தெரிந்து தெளிவது எங்ஙனம் எனின் காரண காரியங்களால் தோன்றுவதும் மறைவது? மாயையென்றும், தோற்றமென்றும், இல்லாதது என்றும் பொருள் கொள்ளவேண்டும். நித்யமாய் காரண காரியங்க ளுக்கு அதீதமாய், என்றைக்கும் உள்ளதாய் எங்கும் நிறைந ததாய் விளங்கும் பரம்பொருள் ஒன்றேதான் விகாரங்க ளின்றி நிற்கும் பொருள். ஏனைய பொருள்களெல்லாம்

இல்லாத ஸ்திதிக்கும் (Negative), உள்ளது என்ற ஸ்திதிக்கும் (Positive) மத்தியிலே தோன்றித்தோன்றி மறைவன. தரித்திரம் பணம் இல்லாமை ஆயினும், தரித்திரத்தால் கஷ்டப்படும் ஜீவன்களைக் கேட்டால் தரித்திரம் மிகவும் ஜாஸ்தியாய் இருக்கிறது, அதாவது உள்ளது என்பார். இல்லாதது ஒன்று, அதுவே உள்ளதொன்றாய் விளங்குவது. எந்த ஒரு பொருளில் இல்லாததும் உள்ளதும் அடங்கி நிற்கின்றதோ அதுவே பரம்பொருள் என்று கொள்ளவேண்டும்.

பூமிமேல் சலித்து ஓடிய தண்ணீர் கண்ணுக்குத் தெரியாத ஆவியாய் மாறிய பிறகும் தண்ணீரின் உண்மை எப்படி மாறவில்லையோ, பிறகு எப்படி அதே தண்ணீர் மேகமாய்த் தெரிகிறதோ, பிறகு எப்படி அதுவே மழையாய்ப் பொழிகின்றதோ இன்னும் அது ரூபமாய் அரூபமாய், இராத்திரிக் காலத்தில் திரண்டு எழுந்த மழையில் மேகங்கள் இருள் திரளாகத் தோன்றுகின்றவோ, அவ்விருள் திரளுள் மின்னல் என்ற வெளிச்சம் எப்படித் தோன்றுகின்றதோ, அப்படியே ஈசனுள முருகன் என்ற தத்துவம் இருளுமாய், ஒளியுமாய், உள்ளதாய், இல்லாததாய் எங்கும் நிறைந்து நிற்கும் பொருளாகும் என்று உபதேசித்தார்.

மேகத்தின் இயல்பு முருகனின் இயல்பை ஒக்கும். ஆகவேதான் மேகத்தின் இயல்பைக் கண்ணன் தன் வர்ணத்தில் வைத்தார். "உள்ளந்தான் நின்று உச்சி அளவும் கருணையாய் கரையும் வள்ளலாம் விஷ்ணு. நீலமேக சியாமளனாய் அன்பு என்ற பாற்கடலில் துயின்று அடியார்கள் என்ற மலைகளில் தன் கருணையாம் மழையை வர்ஷிக்கின்றார்."

'முருகன் அருளின்றி அவன் தன்மை ஒருவருக்கும் விளங்காது. அவன் ஜகத்திற்கெல்லாம் ஒரு குரு. அவன் சுவாமி மலையில் நிற்கும் குருநாதன். ஈசனிடம் தங்கிய

ஜோதிமயமாகிய ஞானஸ்வரூபம் அவனே. ஞானத்தின் அருள் கிடைத்தால் ஞானம் உண்டாகுமாதலால் ஞான தேசிகனும் முருகன். அவன் அருளைப்பெற்று அவன் தத்துவத்தை அறிவீர், என்றார்.

திருமூலர் திருமந்திரத்தில் சொல்லியதும் காண்க.

அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பெனப் பேர்பெற்று உருசெய்த தவ்வுரு
அப்பினில் கூடிஅது ஒன்றாகு மாறுபோல்
செப்பினில் ஜீவன் சிவத்துளடங்குமே.

---

வினையகற்றும் வழி.

14

கைவாய் கதிர்வேன் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியாம்
ஐவாய் வழிசெல் லுமவா வினையே.

பொழிப்புரை.

'மனமே! கையினிடத்து ஒளிபொருந்திய வேலை ஏந்திய பாதங்களைப் பெற்றுப் பிழைப்பாய்; அன்றியும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து வழிகளாலும் நுகரப் படும் அவாவை ஒழிவாய்; ஒழிவாய்.

விளக்கவுரை.

பிறவியை எடுத்த நாம் உய்யவேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும்? முருகன் கழல் (அடிகள்) பெறவேண்டும்.

ஐந்து வழிகளாய் நம் இந்திரியங்கள் வெளியே ஓடிஓடிப் பாதித்துகொண்டு வருகின்றன. எவற்றையெனில் 'அவா வினையே, ஆசையால் தூண்டப்பட்டு ஐம்பொறிகள் நமக்கு வினையெனும் செல்வத்தைச் சேர்த்துக்கொடுக்கின்றனவாம். இந்த வினையின் தொகுதியே நமது விதியாகும். இந்த உடம்பு "விதிகாணும் உடம்பு" என்று 35-ஆம் பாட்டில் பாடியது காண்க. நமது விதியின் ஸ்வரூபமாய் நிறகின்றது இந்தத் தேகம். வினையின் பயன் விதி. வினையின் பயன் இந்த உடல். உய்யவேண்டுமென்றால் முருகன் கழல் பெற்றுய்வாய் என்று உபதேசித்தார்.

"உறவுமுறை மனைவி மகவெனு மலையில் எனதிதய மலின பவ சலராசி ஏறவிடும் உறுபுணையும் அறிமுகமும் உயர் அமரர் மணி முடியில் உறைவதும் உலவிலதும் அடியேன் மனோரதமும் முருகன் மணநாறு சீரடியே."

முருகன் கழல் எங்கு கிடைக்கும் எனின் அது எங்கும் பரந்துள்ளது. "வீடும் சுரர் மாமுடி வேதமும் வெங்காடும் புனமும் கமமும் கழலே" என்று பின்னே உபதேசிக்கப் போகிறார்கள். எம்பெருமான் கழலின் பெருமையை முற்றும் சீர்பாத வகுப்பின்கண் காண்க. வேன் முருகன் கழல் பெற்று என்றார். வேலுண்டு வினையில்லை என்றபடி "வினையோடவிடும் கதிர்வேல் மறவேன்" என்று 40-ஆவது பாட்டில்காண்க. அஞ்ஞான இருளையும் வினையின் கஷ்டங்களையும் போக்குவதால் கதிர்வேல் என்றார். சூரியனைப்போலப் பிரகாசிக்கும் வேல் கதிர்வேல். உலகின்கண் காமத்தைச்செலுத்தாது முருகனே காமத்துக்குக் குறியெனக்கருதி அன்பு செய்யும்அடியார்களுக்கு அவர்கள் கருத்தறிந்து முடிப்பானை கையாலும் கதிர்காமத்தனாய் நின்றான். ஆகவே "அவா வினையை ஒழிவாய்" கழல்பெற்று உய்வாய், நற்கதிக்கு இது வழி என்றார்.

வேலின் உருவம் மிகவும் அருமையானது. அது இலை போல் நிற்கும்; விரிந்து குவிந்து ஆண்டவன் பணியை நாடி அவன் கண் இடைவிடாது நிற்கும்.

மனம் விரிந்து குவிந்தது மாதவம்
மனம் விரிந்து குவிந்தது வாயுவும்
மனம் விரிந்து குவிந்தது மன்னுயிர்
மனம் விரிந்து மாண்டது முக்தியே.

அன்பால் விரிந்த மனம் ஆண்டவன் அடியில் குவிந்தது. குறியைக் குறியாது குறித்தறியும் நெறியே அன்பின் நெறி. விரிந்த அன்புக்கும் ஒரு குறியுண்டு. அது குவிந்து காட்டும் குறி. அதனைக் குமரன் கையில் வைத்தார்; எங்கள் அம்மை தன் கண்ணில் வைத்தாள்.

திருவள்ளுவர்.

இன்பம் இடையறா தீண்டுமவாவென்னுந்
துன்பத்துள் துன்பங் கெடின்

---

உணர்வுதரும் செயல்.

15

முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகுஞ் செயறந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங் கவவெண் குணபஞ் சரனே.

பொழிப்புரை.

அசுரரோடு போர் புரியும் தேவர்களும், உலகினரும் போற்றுகின்ற குரு சிரேஷ்டனே! எண் குணங்களாகிய கூட்டில் விளங்குபவனே! (உன்னை) முருகனென்றும், குமரனென்றும், குகனென்றும் (நான்) சொல்லி மனமுருகும் செயலை யளித்து உண்மையுணர்வை நீ எப்பொழுது தருவாய்?

## விளக்கவுரை.

முருகன் கழல் பெறும் மார்க்கத்தை உபதேசிக்கின்ருர். முருகன், குமரன், குகன் என்று அவன் நாமத்தை மொழிந்து மொழிந்து உருகுதல் வேண்டும் என்ருர். ஞான வாசனையும் ஆனந்தத்தேனும் ஒருங்கே நிறைந்து மொழிபவரை என்புருகத் தித்திக்கச்செய்யும் நாமம், முருக நாமம்.

ஊனினை யுருக்கிடும் முருகாவெனும் நாமம்
தேனினைச் சொரிந்திடும் முருகாவெனும் நாமம்
ஊழ்வினை களைந்திடும் முருகாவெனும் நாமம்
வாழ்பதம் அளித்திடும் முருகாவெனும் நாமம்.

ஆனந்தமும் ஞானமும் கலந்தால் மூப்பு, நிரை இவை அகன்றுவிடும்; காலன் அணுகான், என்றைக்கும் குமரனாய் நிற்கும் பதவியுண்டாம். குமரன் என்றும் குமரன். அவன் ஜீவராசிகளின் இதய குகையுள் அதாவது தகராகாசத்தில் இருப்பதால் குகன் என்றும் அழைக்கபபட்டான். இம்மூன்று நாமங்களையும் சிந்தனை செய்து மொழிந்தால் ஞானமும் ஆனந்தமும் வாடா இளமையும் நமது மனக் குகையுள் குடிகொள்ளுமென்றஉண்மையை உபதேசித்தார்.

அகர உகர மகரங்கள் ஓங்காரத்துக்கு அடிப்படையாய் அமைந்துள்ள அக்ஷரங்களென்றும் இந்த மூன்று அக்ஷரங்கள் அடங்கிய ஓங்காரத்துள் முருகன் விளையாடும்போது மகர உகர அகரமுமாகவும் (முருகன்) உகர, மகர, அகரமாகவும் (குமரன்) உகர அகர மகரமாகவும் (குகம் அல்லது குகன்) முருகன் நாதப்ரம்ம நாம ஸ்வரூபங்கள் வெளிப்படுமென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள். பெரிய மேன்மக்களும் பாருள் ஏனையர்களும் கொண்டாடும் குருநாதன் முருகன். அவனை எண் குணபஞ்சரன் என்றும் அழைத்தார். "எண்ணமரும் குணத்தாரும்" என்பதைத் தேவாரத்தில் காண்க. தன்னை எண்ணும் குணமுடைய தவத்தோர்

களின் இதயம் என்ற கூட்டில் குடிகொண்டிருக்கும் கிளி போன்றவரும் முருகனே என்றவாறு. நாமஸ்மரணம் பாத சாம்ராஜ்யத்தைக் கைகூட்டுமென்பது உபதேசம்.

எண் குணம்-சிவ குணங்கள் எட்டுண்டு. அவை பவமின்மை, இறவின்மை, பற்றின்மை, பெயரின்மை, உவமையின்மை, ஒருவினையின்மை, குறைவிலறிவுடமை, கோத்திரமின்மை என்பனவாம்.

எண் குணங்கள் யாவையென்று பரிமேலழகர் கூறுவதாவது:—தன் வயத்தனுதல், தூய உடம்பினனுதல், இயற்கை உணர்வினனுதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல், பேர் அருளுடைமை, முடிவில் ஆற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை ஈசுவரனின் குணங்கள் எண்ணமுடியாதவை. அவற்றுள் மிகச்சிறந்த எட்டைப் பொறுக்கி வகுத்து வைத்திருக்கிறார்கள். ஈசுவரனை உபாசிக்கிறவன் அந்த ஈசுவரனுடைய குணங்களை எப்பொழுதும் தியானித்து வருவதால், தானும் அந்த குணங்களைப் படிப்படியாய்ப் பெற்று, முடிவில் கடவுள் தன்மையைப் பூர்த்தியாய் அடைகிறான். முனிவர்களுடைய தேஜஸுக்கும், அவர்களுடைய அபார சக்திகளுக்கும் நாம் வேறு காரணங்களையும் காட்டக்கூடும், உபாஸகன் முருகனின் எண் குணங்களையும் தியானிக்கக் கடவன் என்பதைக் காட்டியவாறு.

குரு-புங்கவ-குருச்சிரேஷ்டன். கு- அஞ்ஞான இருள்; ரு-போக்குபவன். குரு-அஞ்ஞான இருளைப் போக்குபவன் குருக்கள் வித்யாகுரு, ஞானகுரு எனப் பலவகைப்படுவர். அப்படிப்பட்ட குருமார்களில் சிரேஷ்டன் என்பது பொருள். குருவாகிய புங்கவனே என்றும் கொள்க.

அறிவில் மற்றவரை யெல்லாம் தோல்வி யடையச் செய்யும் காளைபோன்றவனும், மேன்மக்களின் கல்யாண குணங்களுக்கு இருப்பிடமாய் இருப்பவனுமான முருகா என்றும் பொருள் கொள்ளலாம்.

## 16

பேரா சையெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோக துரந் தரனே.

### பொழிப்புரை.

வீரா ! முதுமையான சூரன் அழிய வேலெறியும் சூரா ! தேவ லோகத்தினரது பாரங்களைச் சுமக்க வல்லவனே ! (நான்) பேராசை என்னும் பாசத்துக்கு உட்பட்டு, இன்னது செய்வதென்று அறியாது வினைகளைச் செய்துகொண்டு உழல்வது தகுமோ ?

### விளக்கவுரை.

*பேராசையை ஓர் பிணியென்றார். ஏனெனில்,*

*" ஆசைக்கோ ரளவில்லை யகிலமெல்லாங் கட்டி*
*யாளினுங் கடன்மீதிலே*
*ஆணை செலவே நினைவ ரளகேச னிகராக*
*வம்பொன் மிக வைத்தபேரும்*
*நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்*
*நெடுநாளிருந்த பேரும்*
*நிலையாக வேயினுங் காயகற்பந்தேடி*
*நெஞ்சு புண்ணாவ ரெல்லாம்*
*யோசிக்கும் வேளையிற் பசிதீரவுண்பது*
*முறங்குவது மாக முடியும்..."*

*என்று தாயுமானவர் சொல்லியதை ஓர்க. கங்கற்ற பேராசை எனும் வெள்ளத்தினின்றும் நம்மை மீட்பது வளர் அருள்*

ககனவட்டக் கப்பலாம் கருணுகரக் கடவுளே என்றும் உரைத்தார். நினைத்து நினைத்து ஆசைப்பிணி யென்று தள்ளாமல் அதிலே உழன்றுகொண்டு வாழ்நாளை வீணுகக் கழிக்கற்பாலதோ என்ருர். தேவர் சேனைகளுக்கு அதிபதி யாய் நின்ற முருகன், ஆதலால் சுரலோக துரந்தரன் என்ருர்.

பேராசையைத் தாண்டும் வழி ஒன்றையும் நாடா திருத்தல்; வேண்டாமை என்ற மேலான மனோநிலையை அடைதல்; வருவது வருக போவது போக, செயலென என் செயல் என்று சும்மாவிருத்தல் ஆகியவை வேண்டு மாம். "சந்ததமும் எனது செயல் நினது செயல்" என்ற சமரஸ பாவத்தை அடைய வேண்டுமாம்.

ஏதேது செய்தாலும் ஏதேது சொன்னுலும்
ஏதேது சிந்தித் திருந்தாலும்—மாதேவா
எல்லாம் நினது செயலேயென்று நின்னருளால் உணரில்
என்செய லேதும் காண்கிலனே.

என்ருர் ஒரு பெரியார். அகப்பேச் சித்தர் கூறியதும் இதுவே.

யாரலைந்தாலும் அகப்பேய் நியலையாதேயடி
ஊரலைந்தாலும் அகப்பேய் ஒன்றையும் நாடாதே.

சிவவாக்கியர் உணர்த்துவதாவது :

வேணும் வேணுமென்று நீர் வீணுழன்று தேடுவீர்
வேணு மென்று தேடினுலு முள்ளதல்ல தில்லையே
வேணு மென்று தேடுகின்ற வேட்கை யைத்துறந்தபின்
வேணு மென்ற வப்பொருள் விரைந்து காணலாகுமே.

## 17

யாமோ தியகல் வியுமெம் மறிவுந்
தாமே பெறவே லவர்தந் ததனற்
பூமேன் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே னடவீர் நடவீ ரினியே.

### பொழிப்புரை.

நாம் கற்ற கல்வியும் பெற்ற எம் அறிவும் நாம் இயல் பாகப் பெற அவ்வேலவரே தந்தார்; ஆகையால் (அவற்றைக் கொண்டு) இப்பூமியில் மயக்கம் நீங்க உண்மை ஞானத்தை அடைவீர் ; நாவால் (அவனைப் புகழ்ந்து) இனி நடப்பீராக ; நடப்பீராக.

### விளக்கவுரை.

*கல்விச்செருக்கு அடையாதிருமின் என்று உபதேசிக் கிறார். கற்ற கல்வியும் அறிவும் முருகன் கொடுத்தான் என்ற அறிவை மறவாதிருப்பீராக. முருகன் கொடுத்த அறிவைக் கொண்டு நீர் செருக்கடையக் காரணமில்லை. புத்திமானுக்குத் தெரியாமலிருத்தல் முடியாது. புத்தி ஹீனனுக்குத் தெரிந்து கொள்ளுவதும் முடியாது எவர் எவர்க்கு எவ்விதம் அறிவின் நுட்பம் ஈசன் அளிக்கின்றானோ அவரவர்கள் அங்ஙனம் இருப்பரென்று அறிந்து கொண்டு செருக்கடையாதீர் என்று வற்புறுத்துகின்றார் 'உலகத்தின் கண் செல்லும் ஆசையையும் அவாவையும் மாயை யென்று தள்ளி மெய்யென விளங்கும் முருகனையே போற்றுமின்.' என்றார். 'மெய்ஞ்ஞானப் பாதையில் ஏறுமின்' என்றார்*

அந்தப் பாதை எங்குளதோ எனின், 'உமது நாவின் மேல் செல்லும் அப்பாதை; அதன் மேல் முருகன் திரு நாமத்தையும் திருப்புகழையும் ஏற்றி நீர் செலுத்துவீராக. இவ்விதம் நடத்திச் செல்வீராகில் நாடிய அரும்பொருள் உமக்குக் கிட்டுமே' யென்றவாறு. "பலகலை படித்தோதும் பாவாணர் நாவிலுறை இருசரண விஸ்தார வேலாயுதா" என்ற திருப்புகழைக் காண்க. முருகன் புகழ் ஓதும் அறிஞர் நாவிலன்ருே முருகன் தாள் பட்டது என்ருர். பாவலர்கள் புகழை ஓதுங்கால் அவர் நாவில் முருகன் சரணம் பட்டதால் கங்கை அவர் நாவில் வந்து விடுகிருள். முருகனும் அங்கே ஆடிவருகிருன்.

> மதுரவாணி தானுட மலரில் வேதனுராட
> மருவுவானு ளோராட மதியாட
> வனஜ மாமியாராட நெடிய மாமனுராட
> மயிலுமாடி நீயாடி வரவேணும்

என்ற திருப்புகழைக் காண்க.

கல்வி கற்கவில்லை என்று அறிவதும் அறிவே. அறியும் பொருளையும் அதன் தன்மையையும் சுட்டிப் பேசுங்கால் கல்வி என்றும் அறிபவர் அறியும் இன்பத்தைப் பற்றிப் பேசுங்கால் அறிவென்றும் கூறலாம், கல்வியும் அறிவும் கூடிய இடத்தில் அன்ருே முருகன் வீற்றிருக்கிருன். பொருள்களும் கல்வியும் அறிவும் கூடி ஒன்ருய் நிற்கும் நிலையில் முருகனைக் காணலாகும்.

கல்வியை இரண்டுவகையாய்க் கூறலாம். நாம் கற்கும் கல்வி பிரபஞ்சக் கல்வி. மாயையில் புகுந்து விளையாடத் தெரிந்து கொள்ளும் எத்துகளைத் தாயுமானவர், "வாடித் திரிந்து கற்றதும் கேட்டதும் அவலமாய்ப் போதல் நன்ருே" என்ருர். நாம் முருகனிடம் பெற்ற கல்வி வேருெரு கல்வி. கல்லா தனவெலாம் கற்பித்தானை என்று அப்பர் பாடி

யபடி முருகன் உபதேசித்த கல்வி அது. அறிவு பிறப்புடன் பிறந்து முருகன் அருளால்'வளர்ந்தது.

கல்வி-எட்டுக் கல்வியும் கேள்விக் கல்வியும் ஆகும். அறிவு—என்பது ஞானம். இது கல்வியின் பயனுகவும் பூர்வஜன்ம வாசனேயாலும் குருவின் கடாக்ஷத்தாலும் ஏற்படுவது. கல்வி கற்றும் ஞானம் ஏற்படாமல் இருக்கலாம். கல்வி இல்லாமலும் ஞானம் ஏற்படலாம். இவ்விரண்டும் ஒருவருக்குச் சேர்ந்து அமையுமானல் அதுவே "பொன் மலர் நாற்றமுடைத்து".

ஆகவே, "முருகன் புகழை நாவில் நடாத்திச் சகல தேவதைகளுடனும் நடித்துக்கொண்டு ஆனந்தப்பாதையில் செல்மின்"; வேதனேயைத்தரும் உலகமாயையில் செல்லாதீர் என்பது உபதேசம்.

---

## 18

உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா வநகா வபயா வமரா
வதிகா வலசூ ரபயங் கரனே.

பொழிப்புரை.

பிறப்பில்லாதவனே! இறப்பில்லாதவனே! உணர்ச்சி, மறதி இவையற்றவனே! பிரமன், மால் ஆகியோர் அறிய முடியாத பரமசிவனின் புதல்வனே! எல்லோரிலும் மேம்பட்டவனே! பாபமற்றவனே! அபயனே அமராவதி காவலனே! சூரபத்மனுக்கு அச்சத்தைத் தருபவனே!

விளக்கவுரை.

இப்பாடல் துதியளவாகவே நின்றது. பயனைக் கருத வில்லை. துதித்தல் நம் கடன். ஒரு பயனைக் கருதுதல் அவ்வ ளவு மேலானதன்று என்பதை இப்பாட்டு சுட்டுகின்றது. உதியா, மரியா, என்றதால் முருகன் நிலை பிறப்பு, இறப்பு இவற்றைக் கடந்தது என்பதும், உணரா, மறவா என்றதால் நினைப்பு மறப்பு என்று சொல்லத்தக்க உணர்ச்சி நிலைக்கும் அப்பாலுள்ளது என்றும் கூறப்பட்டது. அந்நிலை சகல கேவலாவஸ்தைகளையும் கடந்ததாகும்.

உதிக்காதவனும் இறக்காதவனும், அதாவது பிறப்பு இறப்பு இல்லாதவன் முருகன். பூர்ணமாய் உணரப்பட அரியவன்; மறக்கப்படாதவன்; மறந்த உள்ளத்தின் உள் ளேயும் மறைந்து உறைபவன். பிரமனும் (விதி) விஷ்ணு வும் (மால்) காண்டற்கரிய ஈசனார் புதல்வன் முருகன் என்றவாறு.

முருகன் எவற்றினும் மேலானவன். ஆகவே, பாபமில் லாதவன். தான் பாபமற்றவனாலும் பிறர்பாபத்தை அவன் போக்குவான். அநகன். அபயத்தைப் பிறர்க்குக்கொடுத்தரு ளும் தீரன். தான் பயமற்றவனாலும் பயந்தவரைக் காப் பான். அமரர்களுக்கு அமரன். தேவாதி தேவன். தேவலோ கத்தைக் காப்போன். காமக்ரோத சூராதிகளுக்கெல்லாம் பயங்கரன். அமராவதி காவலன் என்றதால் தெய்வ ஸம் பத்து பெற்றவர்களை அவன் காப்பான் என்பதும், சூர் பயங்கரன் என்றதால் அசுர ஸம்பத்தியுள்ளவர்களைத் தொலைப்பான் என்பதும் கூறப்பட்டன. நம்மைக் காம லோப மத மாச்சர்யங்களினின்றும் மீட்பவன். இவன் நாமத்தைச்சொல்லுவீர்—சுகம் பெறுவீர்—என்றவாறு.

வடிவுந் தனமு மனமுங் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா வயில்வே லரசே
மிடியென் றொருபா விவெளிப் படினே.

பொழிப்புரை

வடிவழகும், செல்வமும், நன்மனமும், குணமும், குடியுயர்வும், குலமேன்மையும், இவையாவும் ஒருமிக்கத் தொகுக்கப் பெற்றவனே! ஆதி அந்தம் இல்லாதவனே! கூர்மையான வேலாயுதத்தை ஏந்திய அரசே! தரித்திரம் வாய்ந்த ஒரு பாவி நான் ஏன் பிறந்தேன்!

விளக்கவுரை.

*அமரர் வடிவும், இகதனம் பரதனம்என்ற இருதனமும் நல்ல மனமும் (அதாவது வருந்தும் அடியாரைக் கைவிடாமல் காத்தருளும் கருணை வாய்ந்த மனமும்,) ஈசுவர கல்யாண குணத் தொகுதியும் மேன்மை பெற்ற குடியும், குலமும், பூரணமாய்க் கொண்டவனே! பிறப்பும் இறப்பும் இல்லாத அயில் வேலரசே! உன்னுடைய மேன்மையெல்லாம் காண்பித்து ரக்ஷிக்க, மிடி (தரித்திரம்) வாய்ந்த ஒரு பாவியேன் ஏன் வெளிப்பட்டேன்? என்று வினவுகின்றார். வினையால் மிடியடைந்த என்னையேன் பிறபபித்தாய்? இது உன் கல்யாண குணங்களுக்குத் தகுமோ?*

பட்டினத்தார் வினவியதையும் காண்க,

பொல்லாதவனெறி நில்லாதவனையும் புலன் கடமை
வெல்லாதவன்கல்வி கல்லாதவன்மெய் யடியவர்பாற்
செல்லாதவனுண்மை சொல்லாதவனின் திருவடிக்கன்
பில்லாதவன் மண்ணிலேன் பிறந்தேன் கச்சியேகம்பனே.

மிடிஎன்றதற்கு அருட்செல்வம் சற்றும் இல்லாதவன் என்று பொருள் கொள்ளல் வேண்டும். உலக இயல்பில் பேசும் செல்வம் இங்குச் சொல்லப்பட்டதன்று.

சிறியரே மதிக்கும் இந்தச்செல்வம் வந்துற்றஞான்றே
வரியபுன் செருக்குமூடி வர்யுள்ளார் மூகராவர்
பறியணி செவியுளாரும் பயிரறு செவிடராவர்
குறிபெறுங் கண்ணுளாருங் குருடராய் முடிவரன்றே.

உலகச் செல்வம் ஒரு ஜீவனுக்கு எவ்வளவு தரித்திரத்தை உண்டாக்குவது என்பதை இவ்விதம் குறிப்பிட்டார். உலகச் செல்வம் ஓர் வெள்ளமென்றும் பேசியுள்ளார். சுழித்தோடும் ஆற்றுப் பெருக்கானது செல்வம். இன்பம் துன்பம் கொழித்தோடுவது எக்காலம் என்றார் கந்தரலங்காரத்தில்.

கறையற்ற பல்லும் கரித்துணியாடையுங் கள்ளமின்றிப்
பொறையுற்ற நெஞ்சமும் பொல்லாதவூணும் புறந்திண்ணை
தறையிற் கிடப்பு மிரந்துண்ணுமோடுஞ் சகமறியக் [யுங்
குறைவற்ற செல்வமென்றே கோலமாமறை கூப்பிடுமே

என்றார் பட்டினத்தார். ப்ரபஞ்ச சுகத்தை நாடாத மனம் எப்பொழுதும் தரித்திரத்தை அடையாது. குறைவற்ற செல்வத்தில் திருப்தியுடன் விளங்கும்.

"அருட்செல்வம் சற்றுமில்லாத இந்த மிடியனை பிறப்பில் வெளிப்படுத்தியது ஏன் எனினும் உன் குணத்தையும் நாமத்தையும் கூறிக்கதறிவிட்டேன். ஆகையால் என்னை நீ ஆண்டு அருள்கொள்ளக் கடவாய்" என்றவாறு.

மிடி என்பதற்குச் சாதாரணமாகக் கொள்ளப்படும் பொருளையும் கொண்டு இப்பாடலுக்குப் பொருள்கொள்ளலாம். என்னிடம் மிடியென்னும் ஒரு பாவி வர என் வடிவு முதலிய எல்லா நலன்களும் என்னைவிட்டு ஓடி விடுகின்றனவே என்றும் கூறலாம். மிடி என்பது சாதாரணமாக எங்கும் காணப்படும் ஏழ்மை. பசிவந்திடப் பத்தும் பறந்துபோம் என்பர். உலகத்தில் வறுமையால் உண்டாகும் கொடுமையைச் சித்தரித்தார். அம்மிடி தன்னை அணுகாமலிருக்கப் பிரார்த்தித்தார். மிடி என்பதும் கடவுளறிவில்லாத ஏழ்மையுமாகும். அது இல்லாதவனும், தான் வடிவு முதலிய பெற்றும் அவை இல்லாதவனே யாவான் என்றும் கொள்ளலாம்.

---

"உபதேச மகிமை"

20

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா வுபதேச முணர்த் தியவா
விரிதா ரணவிக் ரமவே ளிமையோர்
புரிதா ரகநா கபுரந் தரனே.

பொழிப்புரை.

விரிந்த (உலகத்திற்கு) அடிப்படையானவனே! வெற்றி வேளே! தேவ உலகத்திற்குத் தாரகனே! செங்கோட்டில் அமர்ந்தவனே! (அல்லது நாக உலகத்தை ரக்ஷிப்பவனே) மிக்க அரிதான உண்மைப் பொருளுக்கு (மோக்ஷபதவிக்கு) அடியேன் உரியவனாகும்படி உபதேசம் உணர்த்தியவனே!

கந்தரலங்காரம்—பாட்டு (9) பார்க்கவேணும்.

விளக்கவுரை.

"செங்கோடமர்ந்த பெருமாளே! தேவேந்திரலோகத்தைக் காப்பாற்றுகிறவனே! விரிந்த உலகங்கட்கு அடிப்படையாளியும் பராக்ரமசாலியுமான கந்தவேளே! நீஎனக்கு உபதேசம்செய்த குரு அல்லனோ? அறிவினால் அறிய அரியதாய் நிற்கும் அந்த நித்ய பொருளுக்கு உரித்தானவன் அடியேன் என்று எனக்கு உபதேசித்த கருணையை என்சொல்லுவேன்" என்று போற்றுகின்றார்.

'மெய்ப்பொருள் அடியார்களுக்கு உரிமையன்றோ? அவருடைய சொத்து அன்றோ? ஆகவே மெய்ப்பொருளை நீ எனக்கு உபதேசித்தாய், என்றார். ஞானி-குரு அஞ்ஞானி-சிஷ்யன் உபதேசத்திற்கு உரிமை உடையவன். மெய்ப்பொருள் என்பதுயாது? பட்டினத்தார் சொல்லுவார்.

அடியாருறவு மரன்பூசை நேசமு மன்புமன்றிப்
படிமீதில் வேறு பயனுளதோ பங்கயன்வகுத்த
குடியான சுற்றமுந் தாரமும் வாழ்வுங் குயக்கலங்கள்
தடியாலடியுண்ட வாறொக்கு மென்றினஞ் சாந்திலரே.

"அபசாரநிந்தைபட் டுழலாதே உபதேச மந்திரப் பொருளாலே ஜெபமாலை தந்த சற்குருநாதா"

சிவம், அன்பு, உறவு எல்லாம் ஒன்றே.

பட்டினத்தார் உபதேசமும் இத்துடன் உணர்க.

தாரணவேள்—யாதும் நிலையற்றலையும் ஏழுபிறவிக் கடலை ஏற விடுநற்கருணை ஓடக்காரனும்' என்று முருகனைப்

பாடியதை வேளைக்காரன் வகுப்பில் காண்க. சம்ஸாரக் கடலை தாண்டவைக்கும் ஓடக்காரன் அவன்.

நாகர் = தேவர்—நாகபுரம் = தேவலோகம்.

தாயுமானவர் அனுபவமும் காண்க "வாராதனலா மொழிய வருவனவெலா மெய்த-மனது சாக்ஷியதாகவே— மருவநிலை தந்ததும் வேதாந்த சித்தாந்த மரபு சமரசமாகவே பூராயமா யுணர வூகமது தந்ததும் பொய்யுடலை நிலையன்றெனப் போதநெறி தந்ததும் சாசுவத வானந்தபோகமே வீடென்னவே நீராளமாயுருக வுள்ளன்பு தந்ததும் நின்னதருள் இன்னு மின்னும் நின்னையே துணையென்ற வென்னையே காக்கவொரு நினைவு சற்றுண்டாகிலோ பாராதியறியாத மோனமே யிடைவிடாப் பற்றகநிற்க அருள்வாய் பார்க்குமிடமெங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணாநந்தமே,

---

நெறி.

21

கருதா மறவா நெறிகா ணவெனக்
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூ ரவிபா டணனே.

பொழிப்புரை.

வரங்களைத் தருபவனே! முருகா! மயில்வாகன! விரதங்களைக் காப்பவனே! சூரனே! சூரனைத் தொலைத்த அம்புடையவனே! நினைக்கமுடியாததும் மறக்கமுடியாததுமான ஒரு நெறியை நான் காண்பதற்காக உன் இரு பாதாரவிந்தங்களையும் எனக்கு அளிக்க இசைவாயாக.

## விளக்கவுரை.

முருகா! உன் பாதாரவிந்தங்களை என்று நீகொடுப்பாய்? கருத்தினில் முட்டாத சதாகால பூஜையும், உன்னை என்றும் மறவாத நெறியும் ஏழையேற்கு என்றருள்வாய்? அடியார்க்கு வரதனே, முருகா, மயில்வாகனனே, அடியார்க்கு என்றும் உதவும் கொள்கையுடைய விரதனே! அசுரசூரனைத் தொலைத்த அம்பு உடையவனே.

ஆண்டவன் விரதம் அடியாரைவிட்டுப் பிரியாத விரதமாகும். அடியாருக்கு நேமத்துணையாம் முருகன்.

நீ தத்துவமாகி நேமத் துணையாகிப்
பூதத் தயவான போதைத் தருவாயே;
நாதத் தொனியோனே ஞானக்கடலோனே
கோதற் றமுதானே கூடற் பெருமாளே.

என்ற திருப்புகழிலும் காண்க.

## கந்தரலங்காரம்.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கண் மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கண் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ் செங்கோடன் மயூரமுமே.

அடியார்க்கு வரமளிப்பதே தன்விரதமாகக் கொண்டான் முருகன்.

துதிக்குமடி யவர்க்கொருவர் கெடுக்கவிடர் நினைக்கினவர் குலத்தைமுத லறக்களையு, மெனக்கோர்துணை யாகும்.

சொலற்கரிய திருப்புகழை யுரைத்தவரை யடுத்தபகை யறுத் தெரிய வுருக்கியெழு, மறத்தைநிலை காணும்.

என்று வேல்வகுப்பில் பாடியவாறு அடியவர்க்கு இடர்கள் செய்யும் துஷ்டர்களைச் சம்ஹாரம் செய்யும் மூர்த்தியாதலால் சூரவிபாடணனே என்றார்.

---

## 22

**காளைக் குமரே சனெனக் கருதித்**
**தாளைப் பணியத் தவமெய் தியவா**
**பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்**
**வேளைச் சுரபூ பதிமே ருவையே.**

பொழிப்புரை,

பாளைபோன்று நீண்ட கூந்தலையுடைய வள்ளியின் பாதங்களைப் பணியும் வேளையும், தேவலோக அதிபதியாய் மேருவைப்போல் நிற்பவனையும் காளைப் பருவத்துக் குமரேசனாக எண்ணி அவன் பாதங்களைப் பணியத் தவம் அளித்தவனே! (அல்லது நான் பெற்ற பெருமைதான் என்ன?)

விளக்கவுரை.

"தெய்வ உபாசனைகளுள் அதாவது சகுண உபாஸனையில் சிறந்ததானது முருகன் உபாஸனை யென்று சிரேஷ்டமாம் குமரேசன் உபாசனையில் ஈடுபட்டு உன் தாளைப்பணியும் பெரிய தவத்தை எனக்கு ஈந்தவனே" என்று முருகனைப் போற்றுகின்றார். பணியும் திறம் பெரியோர்மாட்டே. அப்பர்ஸ்வாமிகள்.

"இலையாலன்பால் ஏற்றுமவர்க்கு
நிலையாவாழ்வை நீத்தார் இடமாம்
தலையால் தாழும் தவத்தோர்க்கென்றும்
தொலையாச்செல்வத் சோற்றுத் துறையே."

என்று பாடியதும் காண்க.

உலகுக்குத் தர்மத்தை நடித்துக்காட்டத் திருவுளம் கொண்டு அவதாரம் எடுத்த ஸ்ரீராமரைக் கம்பராமாயணத்தில் சூர்ப்பணகை வர்ணனையில் சிறப்பாகச் சொல்வதுங் காண்க.

வந்தனை முனித்தலைவர் பாலுடையார்
வானத்து இந்துவின்முகத்தர் எறிநீரில்
எழுநாளகந்தமலரைப் பொருவுகண்ணர் கழற்கையர்
அந்தமில் தவத்தொழிலர் யாரிவரை யொப்பர்.

ஆண்டவனையும் அடியார்களையும் பணிதல் ஒரு பெரிய தவம் என்று கூறினர். அடியார்கள் எல்லோரையும் ஆண்டவன் ரூபமாகக் கருதல் வேண்டும். அகங்கார மற்ற மனத்தாலும் அன்பின் வெள்ளத்தாலும் ஆண்டவனை அண்டிப் பூஜை செய்வது முக்கியம். தலை வணங்கல் ஆணவத்தைக் கீழே தள்ளி, அன்பின் ரூபமாய் எழுந்து ஆண்டவனைத் தரிசனம் செய்வதைக் குறிப்பிடுகிறது. பாளை பாளையாய்க் கேசங்கள் படர்ந்த கூந்தலுடைய வள்ளியின் பாதத்தை ஆண்டவன் பணிந்தானன்றோ! வேளைக்காரனுப் புனக் காட்டின் மேவி வள்ளி நாயகியை ஆட்கொண்ட தெய்வம் நல்ல வேளையிலும் என்னை ஆட்கொள்ளுவன் என்றவாறு. மேரு பர்வதம்போல உலகில் மேன்மை வாய்ந்தவனும் மூன்று லோகத்திற்கும் அதிபதியாய் விளங்குபவனுமான முருகனை வேளைக்காரன் என்றார். வேளைக்காரன் திறமையை வேளைக்காரன் வகுப்பில் காண்க.

வேடுவர்புனத்திலுரு மாறிமுனி சொற்படிவி யாகுலம
னத்தினெடு போம்விற் காரனும்
மேவியபு னத்திதணி லோவியமெ னத்திகழு மேதருகு
றத்தி திரு வேளைக் காரனே.

கெட்ட வேளையெல்லாம் நல்லவேளையாய்ச் செய்திடும் திறமையுடையவன். உரியவேளையில் வந்து உதவுகிறவனும்

வேலைக்காரன். 'முருகன் அன்பின் மிகுதியால் அடியார்கள் சேவையே மேன்மையாகக் கொண்டு வள்ளிபதம் பணிந்தா னெனில் அடியேன் உன்பதம் பணிய எனக்கு நீ ஈன்ற அறிவையும் கருணையும் எவ்வாறு போற்றுவேன்?' என்று பரிதபிக்கிறார் போலும்.

---

## 23

அடியைக் குறியா தறியா மையினுன்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே.

### பொழிப்புரை.

கூர்மையான வெற்றி வேலை ஏந்திய பிரபுவே! குறவர் குலத்துப் பிறந்த மின்னற் கொடியை மணக்கும் குணச் சிரேஷ்டனே! உன் திருப்பாதங்களைக் குறியாமல் அறியாமை யால் நான் முற்றிலும் கெட்டுவிடல் முறையோ? முறையோ?

### விளக்கவுரை.

"முருகனுடைய அடியே குறியாய் (லக்ஷியமாய்) இருக்கவேண்டுவது நிற்க, ஏனைய பொருள்களைக் குறியாகக் கொண்டு 'பொய்ம்மையே பெருக்கி என்பொழுதினைச் சுருக் கும் புழுத்தலைப் புலையனேன்' முடியக் கெடுவதும் உன் கருணைக்குத் தகுமோ, தகுமோ. உன் அடியைக் குறியாகக் கொள்ளும் அறிவினை எனக்கு ஈந்து உய்விக்கச் செய்வதும் உன் கடன் அன்றோ" என்றவாறு.

குறவர் கூட்டத்தில் குறக்கொடியை ஆண்ட செல்வ! எனையும் ஆண்டு கொள்வாய் என்று வேண்டுதல் பொருள்.

---

## 24

கூர்வேல் விழிமங் கையர்கோங் கையிலே
சேர்வே னருள்சேர வுமெண் ணுமதோ
சூர்வே ரோடுகுன் றுதுளைத் தநெடும்
போர்வே லபுரந் தரபூ பதியே.

### பொழிப்புரை.

சூரனை வேரோடு அழியும்படி குன்றைத்துளைத்த நீண்ட போர்புரியும் வேலையுடையவனே! இந்திர உலகத்து அதிபனே! கூர்மையான வேல் போன்ற விழிகளையுடைய மங்கையர் கோங்கையிலே சேரும் எண்ணத்தையுடைய என்னிடத்து உன் அருள் வந்து சேரவும் எண்ணுமோ.

### விளக்கவுரை.

5, 9, 34-ஆம் பாடல்களோடும் சேர்த்து உணர்க. பெண்ணாசை மாய்ந்தாலன்றிப் பொருள் கைகூடுமோ? நின் திருக்கைவேலால் என் மாயையை ஸம்ஹரித்து என் சித்தத்தையும் அறிவையும் மாற்றி எனை ஆண்டு அருள்வாய் என்பது வேண்டுகோள்.

---

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்
தையோ வடியே னலையத் தகுமோ
கையோ வயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலே றியசே வகனே.

பொழிப்புரை.

கை, வேல், பாதம், என்ற எல்லாமும் சிவந்து விளங்குபவனே! மயிலேறிய வீரனே! கொடிய வினைசூழ்ந்த வாழ்வை மெய் என்று மகிழ்ந்து வாழும் அடியேன், ஐயோ, அலையத் தகுவேனோ?

விளக்கவுரை.

*"வினைகளால் இரட்டப்பட்ட இந்த வாழ்வை மெய் யென்று நம்பி, அதற்குத் துரோகம் நேரிடும்தோறும் சொல் லொணுத் துயரமுற்று வுற்று, ஐயோ! அடியேன் அலை வது தகுமோ? முருகா! அபயம் கொடுத்த உன்கையிருக்க, துன்பந்தரும் பகைஞர்களை அன்பராய் மாற்றிடும் நின் திருக்கை வேலிருக்க, தேவாதி தேவர்கள் முதல் சகல பிராணிகளுக்கும் துணையாக நின்ற நின் கழலிருக்க, மேன் மையையும் நன்மையையும் உருவாய்க் கொண்ட என் ஆண்டவா நீயிருக்க, நான் ஏன் இப்படி அலையவேண்டுமோ? ஐயனே! அடியார்க்கு மயிலேறிய சேவகனன்றோ நீ? என் அறியாமையை அகற்றி என்னை ஆனந்தத்தில் நிலைநாட்டு வது உன் கடமை" என்றவாறு.*

---

26

ஆதா ரமிலே னருளைப் பெறவே
நீதா னெருசற் றுநினைந் திலையே
வேதா கமஞா னவினோ தமனோ
தீதா சுரலோ கசிகா மணியே.

## பொழிப்புரை.

வேதங்கள், ஆகமங்கள் இவற்றின் பொருளே! ஞான விநோதா! மனத்திற்கு எட்டாதவனே! தேவர் உலகத்தின் சிரோரத்னமே! நான் ஆதார மற்றவன். உன் அருளை நான் பெறுவதற்கு நீ சிறிதும் நி நினைத்தாயல்லையே.

## விளக்கவுரை.

*"ஜகத்துக்கெல்லாம் நீயே ஆதாரம். ஆகையால் உனையன்றி ஆதாரமிலேன்; உனதருள் எனக்குக் கிடைக்குமாறு சற்று நீ சிந்தித்தருளக் கூடாதோ! எனக்குச் சிந்திக்க முடியவில்லையே! நீயேனும் சிந்தித்தருளாயோ? வேதம் ஆகமம் முதலியவற்றிற்குள் அஞேத ஞானப்பொருளாய் விளங்கும் முருகா! மனத்திற்கு எட்டாத பொருளே! தேவர்கள் சிகாமணியே!" என்றார்.*

*"அறிவும் அறியாமையும் கடந்த அறிவு நின் திருமேனி யென்றுணர்ந்து உன் அருண சரணாரவிந்தம் என்று அடைவேனோ" என்று திருப்புகழில் பாடினார். அறிவின்றி அறிவில்லை. அறிவு முருகன் தத்துவமாதலால் எவ்வாறேனும் எங்கெங்கு விளங்கினும் அந்த அறிவு முருகனின் அருள் தோற்றமேயாகும். ஆதலால், 'அறிவின்மையை நீக்கும் பொருட்டு உன் அருளை நான் பெறவே நீதான் ஒரு சற்றும் நினைந்திலையே' என்று ஏசுகிறார்.*

---

## 27

மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயிலே றியவா னவனே.

## பொழிப்புரை.

பொன்னே ! மணியே ! பொருளே ! அருளே ! அரசே ! மயில் வாகனனான தேவனே ! மின்னலை ஒத்த இவ் வாழ்வை விரும்பிய நான் என் செயலை என்னேன்பேன் ? இவ்விடத்து ஊழ்வினையின் பயன் இதுவோ?

## விளக்கவுரை.

மின்னல் போல அழிந்திடும் தேகம். இந்தத் தேகத்தைக் கருதிய வாழ்வை மெய்யென்று நம்பிய யான்விதியின் பயனாய்ப் படுந் துயரம் கணக்கில்லையே, ஆகவே தேகம் நிலைபொருள் அன்று ; ஆனந்தம் தரும் பொருள் அன்று ; என்று இவ்வாறு உணர்ந்து யான் இனி உன்னையே ஓவாது "பொன்னே, மணியே, பொருளே, அருளே, மன்னே, மயிலேறிய வானவனே" என்று கூறுவேனாக.

'உலகின்கண் சகல செல்வமும், ஒளியும், நித்யமாய் நிற்கும் பிரமமும், கருணாகரக் கடவுளும். ஜீவராசியுள் நிறைந்த பொருளும் ஆகி இருப்பவன் மயிலாகிய ஓங்காரத்துக்குள் விளையாடும் முருகா நீயன்றோ ?' என்றவாறு,

முருகனால் அடியார்களுக்குப் பிரயோஜனம் உண்டு. அது பொன்போல் இருப்பது; ஆதலால் பொன்னேஎன்றார். பட்டினத்தார் சொல்லுவார்.

பின்னாற் பிரயோஜனம் பொன்படைத்தார்க்குண்டு
பொன் படைத்தோன்
தன்னாற் பிரயோசனம் பொன்னுக் கங்கே துண்டத்
தன்மை யைப்போ
லுன்னாற் பிரயோசனம் வேணதெல்லாமுண்
டுனைப்பணியு
மென்னாற் பிரயோசன மேதுண்டு காளத்தி
யீச்சுரனே.

மணியே என்றார். சுப்ரமான தேஜோமணி; அடியார் மனதில் ஜபிக்கும் மந்த்ரமணி; வள்ளியின் கழுத்தைக் கட்டி மார்பிலாடும் முத்துமணி; தெய்வயானை பக்கம் ஒலிக்கும் ஓசைமணி; திருப்புகழ் அடியார் கண்களில் வாழும் கருமணி என்றும் அநுபவிக்கலாம்.

மாணிக்கத்துள்ளே மரகத ஜோதியாய்
மாணிக்கத்துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன்மன்றினுள் ஆடும் திருக்கூத்தைப்
பேணித்தொழுது என்னபேறு பெற்றார்.

—(திருமூலர்)

பிரும்மமே முருகன். ஆதலால் அவனன்றி வேறொரு பொருள் இல்லை. ஆகையால் பொருளே என்றார். அப்பர் ஸ்வாமிகள் தேவாரத்தில் இந்தக் கருத்தை வெளியிட்டிருப்பதும் காண்க.

நின்னாவார் பிறரின்றி நீயேயானாய்
நினைப்பார்கண் மனத்துக்கோர் வித்துமானாய்
மன்னானாய் மன்னவர்க்கோ ரமுதமானாய்
மறைநான்கு மானாயா றங்கமானாய்
பொன்னானாய் மணியானாய் போகமானாய்
பூமிமேற் புகழ்தக்க பொருளேயுன்னை
என்னானா யென்னானா யென்னினல்லா
லேழையே னென்சொல்லி யேத்துகேனே.

விதி வலியை நொந்து வருந்துகிறார். விதி யாரைவிட்டது? ஸ்ரீராமசந்திர மூர்த்தியையும் காட்டுக்கு அனுப்பவில்லையா விதி? பரதன்மேல் லக்ஷ்மணன் மிகவும் கோபித்துப் பேசுங் காலத்தில் லக்ஷ்மணனைப் பார்த்து ஸ்ரீராமர் சொல்வது அருமையான உபதேசம்.

நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை அற்றே
பதியின் பிழையன்று; பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று; மகன் பிழையன்று; மைந்த!
விதியின் பிழை! இதற்கு என்னை நீ வெகுண்டது?

விதியைத்தாண்ட ஔவை ஓரே ஒருவழி செல்லி யிருக்கின்றுள்.

வினைப்பயனை செல்வதற்கு வேதமுதலாம்
அனைத்தாய நூலகத்தும் இல்லை—நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லாற் கவலைப்படே னெஞ்சமெய்
விண்ணுறுவார்க்கில்லை விதி.

---

## 28

**ஆனு வமுதே யயில்வே லரசே**
**ஞான கரனே நவிலத் தகுமோ**
**யான கியவென் னைவிழுங் கிவெறுந்**
**தானய் நிலைநின் றதுதற் பரமே.**

பொழிப்புரை.

உண்டு தெவிட்டாத அமுதமே! கூரிய வேலைத்தாங்கும் அரசனே! ஞானத்தை உண்டாக்குபவனே! நான் என்ற எண்ணத்தை நான் விழுங்க எஞ்சி நிற்பது வெறும் தானக நின்ற தற்பரமேயாகும்.

விளக்கவுரை-

இந்தப் பாட்டு ஒரு பெரிய ரத்னம். இதை 49-ஆம் பாட்டுடன் சேர்த்துப் பார்க்க வேண்டும்.

ஆண்டவன் ஆதியந்தமில்லாத அமிர்தவாரியாய் இருக்கின்ருன் எனும் தத்துவத்தை விளக்கியது. தற்பரத்தைச் சொல்ல முடியாது. அனுபூதி சொல்லி முடியாது. அனுபவித்தாலன்றித் தெரியாது. நான், என், எனும் என் செயல் மாண்டு என்னை விழுங்கிய பிறகு தாஞய் நிற்கும் நிலை தற்பரமே. தாயுமானவர் சொல்லுவதையும் உணர்க.

அத்துவித வத்துவைச் சொற்பிரகா சத்தனியை
யருமறைகண் முரச றையவே
யறிவினுக் கறிவாகி யானந்த மயமான
வாதியை யநாதி யேக
தத்துவ சொரூபத்தை மதசம்ம தம்பெருச்
சாலம்ப ரகிதமான
சாசுவத புட்கல நிராலம்ப வாலம்ப
சாந்தபத வ்யோம நிலையை
நித்தநிர் மலசகித நிஷ்ப்ரபஞ் சப்பொருளை
நிர்விஷய சுத்த மான
நிர்விகா ரத்தைத் தடத்தமாய் நின்ருெளிர்
நிரஞ்சந நிராம யத்தைச்
சித்தமறியாதபடி சித்தத்தி னின்றிலகு
திவ்யதே ஜோம யத்தைச்
சிற்பர வெளிக்குள்வளர் தற்பரம தானபர
தேவதையை யஞ்சலி செய்வாம்.

தற்பரமதான தேவதை யாஞகிய என்னை விழுங்கிஞலன்றி புலப்படாது போலும்.

தன்னை மறந்து தலைவாசல் தாள்போட்டு
உன்னை நினைந்து உறங்குவது எக்காலம்

(2-3-ஆம் பாட்டுகளைப் பார்க்க.) நான் என்ற நினைவு மறந்தாலன்றித் தற்பரமான உணர்ச்சி கைகூடாது என்ருர்.

"தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் மொருவர்க்கிசைவிப் பதுவோ"

வாசாம கோசரமாய் நின்ற நிலை முருகன் அனுபூதி நிலை எனப்படும். இந்த நிலையைக் கங்குல் பகல் அற்றவிடம் என்பார்கள். சும்மா இருந்த நிலை என்பார்கள். மௌன நிலை என்பார்கள். மின்னல் போன்ற ஒளியையுடைய மேல் தாங்கிய கையனே! நினைப்பவர் கஷ்டங்களை நீக்கிக் கருதும் பலனைக் கொடுத்துவரும் வள்ளால்! அனுபூதி ஆனந்தத்தை என்ன வென்று சொல்லுவேன்! கந்தரலங்காரத்தில் அனுபூதியின் ஆனந்தத்தைசொல்வதும் காணீர்.

போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்பு முள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில் லாதொன்று வந்து வந்து
தாக்கு மனோலயந் தானே தருமெனைத் தன்வசத்தே
ஆக்கு மறுமுக வாசொல் லொணுதிந்த வானந்தமே.

அப்பர் ஸ்வாமிகளும்

"தன்னை மறந்தாள் தன்னுமம் கெட்டாள்
தலைப்பட்டாள் மங்கை தலைவன் தாளே"

என்பதையும் காண்க.

"தானலாத தொன்றுமே தயங்கி ஆடுகின்றதோ"

என்ற மேற்கோளையும் நோக்குக.

இல்லே யெனுமா யையிலிட் டனைநீ
பொல்லே னறியா மைபொறுத் திலையே
மல்லே புரிபன் னிருவா குவிலென்
சொல்லே புனையுஞ் சுடர் வேலவனே.

பொழிப்புரை.

உண்மைப்பொருளல்லாத மாயையில் என்னை வைத்தாய். நான் பொல்லாக் குணங்களுடையவன். என் அறியாமையைப் பொறுக்கவில்லையே! வலிமைச் செயல்களையே புரியும் பன்னிரண்டு தோள்களிலும் என் சொற்களாலாகிய மாலையைப் புனையும் ஒளிபொருந்திய வேலவனே !

விளக்கவுரை.

*மாயை இல்லையென்ற விபரம் முன்னமே ஒருபாட்டின் கண் கூறப்பட்டது. உலகின் கண் நாமரூபமாய் அநேக வேடங்கள் தரித்து நன்றாகித் தீகாகி, நாசத்தோடு உற்பத்திக்கு நண்ணுதாகி விளையாடுகின்றார் ஈசன். ஈசன் அதை அநுபவிப்பதுபோலே நாமும் அனுபவித்தல் வேண்டும். பொருள் நாசமும் கிடையாது; ஆதமநாசமும் கிடையாது. ஜீவனும் உடம்பும் பிரிந்து, சேர்ந்து, பிரிந்து ஆடும் பெரும் விளையாட்டை விளைவிக்கின்றார். இல்லாதது ஒன்று தோன்றியது போலும் உள்ளது ஒன்று அழிந்தது போலும் காணப்படுவது தோற்றமேயன்றி உள்ளது இல்லையே. ஆகையால், இல்லேயெனும் மாயையில் இட்டனை நீ என்றார் மாயையை உண்மைபோல் அறிந்திடும் பொய்யான கண்களைக் கொடுதது மெய்யான உன்னை உணர்ந்திட உணர்ச்சியையும் அறிவையும் கொடுத்திடாததால் பொல்லேன் அறியாமை பொறுத்திலையே என்றார்.*

இல்லையெனும் மாயைஎன்பதற்குக் குடும்ப வாழ்க்கையென்னும் மாயை என்றும் பொருள் கொள்க. இல்=வீடு. [தமிழர் பொருள்களுக்குப் பெயரிட்டிருக்கும் அழகை நோக்குக, யாதொன்று உள்ளது இல்லாததோ (நிலையற்றதோ) அது இல். யாதொன்று விடத்தக்கதோ அது வீடு.] இல்வாழ்க்கை மாய வாழ்க்கை. மாயையான இல்லறவாழ்க்கையில் புகுத்தியவன் அவனே. அதனின்று விடுவிக்க வேண்டியவனும் அவனே. பொல்லேன், "பொல்லாப் புழுக்கையேன்" என்றார் பிறரும். அறியாமை பொறுத்திலையோ? அறியாமை என்ற அஞ்ஞானமே எல்லாக் கேட்டுக்கும் காரணம். அவ்வறியாமையால் விளையும் பயன் என்னைச் சாராமல் நீ செய்யவில்லையோ? பூமாலை புனைவதைப்போலப் பாமாலையும் கடவுளுக்கு இன்பம அளிக்கத் தக்கது. தேவாரம் என்ற சொல்லுக்கு தேவனுக்குரிய ஹாரம் என்றும் பொருள் கொள்வதையும் நோக்குக.

முருகன் பன்னிரு தோள்களும் என் வினைகளோடும் பொருகின்றன; சண்டை செய்கின்றன. கைகளின் செயல்களை நக்கீரர்.

செம்பொறி வாங்கிய மொய்ம்பில் சுடர் விடுபு
வண் புகழ் நிறைந்து வசிந்து வாங்கு நிமிர் தோள்
விண் செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை; உக்கம் சேர்த்தியது ஒருகை;
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயது
அங்குசம் கடாவ ஒருகை; இருகை [ஒருகை
ஐயிருவட்டமொடு எஃகுவலம் திரிப்ப; ஒருகை
மார்பொடு விளங்க; ஒருகை
தாரொடுபொலிய; ஒருகை
கீழ் வீழ் தொடியொடு மீமிசைக்கொட்ப; ஒருகை
பாடு இன் படு மணி இரட்ட; ஒருகை
நீல்நிற விசும்பின் மலி துளி பொழிய; ஒருகை
வான் அர மகளிர்க்கு வதுவை சூட்ட
ஆங்கு அப் பன்னிருகையும் பாற்பட இயற்றிஎன்றார்.

முருகனைத் துணைகூறி, 'முருகா உன் அடைக்கலம் என்று அடைந்த அடியார்க்கு வேறு கவலையுண்டோ? பாரம் அவனது இலையோ? என் புன்சொல்லால் உன்தோள் வலியைப் புகழ்ந்த சொற்களைத் தோளில் அணிந்த அழகா, என்வினைகளையும் தாங்கிப் பொறுத்தருளே', என்று வேண்டுகின்றார்.

காக்கக் கடனில்லையோ—நோயைத்
தாக்கநின் வேலிலையோ ஷண்முகா காக்க.

வானவன் மணாளா
கானவள் தன் கணவா
மலைமகள் தன் குமரா
வட பழனி முருகா காக்க

பாருளோர்கள் இகழ்ந்திடினும்
அடியானென்று ஏசிடினும்
மிடிகடலில் ஆழ்ந்திடினும்
வினைகள் பல சூழ்ந்திடினும் காக்க.

அமரர்குடி ஏற்றுவித்து
அசுரர்பகை மாற்றியிட்ட
எம்பிரானே குகனென்றேத்தி
நம்பி நம்பி நின்றவரைக் காக்க.

செவ்வா னுருவிற் றிகழ்வே லவனன்
றெவ்வா ததென வுணர்வித் ததுதான்
அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே.

பொழிப்புரை.

என்னை ஆட்கொண்ட அன்று சிவந்த வானத்தை ஒத்த உருவில் விளங்கிய வேலவன் 'ஒவ்வாதது' என்று எனக்கு உணர்வித்த உபதேசத்தை அப்படியே அறிவார் அறிய வேண்டுமே யல்லாமல் பிறர் ஒருவருக்கு எடுத்து கூறுவது எப்படி ?

விளக்கவுரை.

*தினம் தினம் இரண்டு பெரிய அனுபவ விஷயங்கள் ஏற்படுகின்றன. அவை சூரியன் உதயமும் சூரியன் அஸ்தமனமும்தான். மாலையில் சூரியன் மேற்குத் திசையில் மறையுங்கால் அவனுடைய கிரணங்கள் சிவந்த வர்ணத்தை யடைந்து, வானத்தை முழுவதும் சிவப்பு ஏறச் செய்து, பார்வைக்கு ஆவியை அபகரிக்கும் சிவந்தபழம்போல்அவன் தோன்றுகின்றான். அந்தச் சாயுங் காலத்தில்தான் நடராஜா நிர்த்தனம் செய்கின்றார். முருகன் உருவம் எப்படியோஎன்னில்செவ்வானமும்ஒவ்வாத ஜோதிமயம்என்று அன்று உபதேசித்தார். பரஞ்ஜோதிப் பொருளை எவ்வாறு அறிவது? பரந்த குளிர்ந்த ஆனந்தம் விளைவிக்கும் அற்புத ஒளியின் ரூபமான நிகரற்ற காட்சிகூட முருகன் ஜோதிக்கு உவமை ஆகாது. ஆகாது என்று உணர்ந்தாலன்றி எவ்விதம் புன் சொற்களால் மொழிவது ?*

"திருக்கை சேவற் கொடி யோனே
ஜெகத்திற் ஜோதிப் பெருமாளே"

என்றும் "ஜகஜ்ஜோதி நடமிடும் பெருமாளே" என்றும் திருப்புகழில் உபதேசித்ததும் காண்க.

"வேலே விளங்குகை யான்செய்ய தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளவிங்ஙன் காண்பதல் லான்மன வாக்குச்செய
லாலே யடைதற் கரிதா யருவுரு வாகியொன்று
போலே யிருக்கும் பொருளை யெவ்வாறு புகல்வதுவே"

என்பதைக் கந்தரலங்காரத்தினும் காண்க. திருமூலர் சொல்வதும் காண்க.

எவ்வாறு காண்பானறிவு தனக்கெல்லை
அவ்வாற ருள்வான் அநுதியான் தானும்
ஒவ்வாத மன்றில் உமைகாண ஆடும்
செவ்வானிற் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கம்"

ஒவ்வாதவென உணர்வித்தது-என்பதற்கு வேறுவகை யாகவும் பொருள் கொள்வர். வேலவன் அன்று எனக்கு உணர்வித்தது என்ன? ஒவ்வாதது என—எது ஒவ்வாதது? தான் உபதேசித்த மெய்ப்பொருள் சாதாரணமான இவ்வுல கத்துப் பொருள்களான செல்வம், கல்வி, இவற்றோடு ஒவ்வாதது என்பதே. இவை யெல்லாம் அழியத்தக்கவை. தான் சொல்லும் பொருள் அப்படிப்பட்டதல்ல என் பதையே அவன் உபதேசித்தான்.

அப்படி அவன் உபதேசித்த தத்துவம் மிகவும் நுட்ப மானது. முருகனே அதை உபதேசிக்க வல்லவன் முருகன் ஒருவனே. அதை பக்குவியான சீடன்தான் உணரக்கூடுமே

6

யன்றி அதைப்பிறருக்கு எப்படியிருந்தது என்று உணர்த்த முடியாதது என்றபடி.

தன்மனத்துத் தானே அனுபவிப்பதே அல்லாமல் பிறர்க்கு இப்படிப்பட்டது என்று சொல்ல முடியாதது என்பர் காமத்தை. அப்படிப்பட்டதே பேரின்பமும். அதுவே பேச்சற்ற நிலை. உபதேசப் பொருளின் நுட்பமும் அதை உபதேசிக்கவல்லவன் முருகக்கடவுளே என்பதும் இங்கு காட்டப்பட்டன.

செவ்வானுருவில் திகழ் வேலவன்—இதனோடு நக்கீரர் முருகனைக் காலையில் எழும் இளஞ் சூரியனோடு ஒப்பிடுவதை நோக்குக.

உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடல் கண்டு ஆ அங்கு
ஓ அற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி

என்றார். இதற்கு நச்சினார்க்கினியர் கூறும் விசேடஉரை யாவது. 'ஞாயிறு = இருளைக்கெடுக்குமாறு போலத் தன்னை மனத்தால் நோக்குவார்க்கு மாயையிற் கெடுத்தலின் தொழிலும், தன் கட்புலனால் நோக்குவார்க்குக் கடலிற் பசுமையும் ஞாயிற்றின் செம்மையும் போல மயிலின் பசுமையும் திருமேனிச் செம்மையும் தோன்றலின் வண்ணவுவமும் கொள்ளக் கிடந்தமை காண்க.'

## 31

**பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே**
**வீழ்வா யெனவென் னைவிதித் தனையே**
**தாழ்வா னவைசெய் தனதா முளவோ**
**வாழ்வா யினிநீ மயில்வா கனனே.**

பொழிப்புரை.

மயில்வாகனனே ! பாழ்கள் வாழ்கின்ற வாழ்வு என்று சொல்லப்படும் இந்தப் படுமோயையில் வீழ்வாயாக என்று எனக்குக் கட்டளை இட்டனையே. நான் தாழ்வான காரியங்கள் செய்தன உண்டாமோ ? இனியும் உன்னையே வாழ்த்துவேன்.

விளக்கவுரை.

ஏன் எனக்கு இந்த ஜன்மத்தை அளித்தாய்? பாழ் வாழ்வு எனும் மாயையில் வீழ்த்தினாய். தாழ்வானவற்றை நான் செய்திருந்திருத்தல் வேண்டும். அவை நீங்க இப்பொழுதே உன்னை வாழ்த்தினேன். "வாழ்வாய் இனி நீமயில் வாகனனே" என்றேன். மேன்மையே தரும் இந்த வாழ்த்து இனி கைக் கொண்டேனுதலின் பாழ் வாழ்வை நீக்கிப் பெருவாழ்வை கொடுத்தருள்வாய், என்றார்.

"வாழியென நித்த மறவாது பரவிற்சரணவாரிஜமளிக்கும் உபகாரக்காரன்" அன்றோ முருகன்.

இராமலிங்கஸ்வாமிகளும் முருகன் புகழே மெய்ம்மையென்றும் ஏனைய பிரபஞ்ச சப்தங்கள் பொய்ம்மையென்றும் கருதி

"பொய்ம்மைபேசா திருத்தல் வேண்டும்"
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும் என்றார்.

இனி இந்தச்செய்யுளைப் பக்தன் தன்கஷ்டம் பொருக்க மாட்டாமல், தன் நாயகன்மீது சலுகையால் கோபித்து "நான் விழ நீ வாழ்வாய்" என்று நிந்தால் துதியாகக் கூறினதாகவும் கொள்ளலாம். "என்னை நாசமுறக் கட்டளை யிட்டாய் நீவாழ்" என்பது பொருள்.

இப்படிக் கூறுவது எல்லோருக்கும் சாத்திய மன்று. ஈசுவரனிடம் ஸக்ய பாவத்தால் அதாவது தோழன் என்ற முறையில் பக்திசெய்து சாதித்த, தம்பிரான் தோழரான சுந்தரமூர்த்தியின் பாடலை ஒப்பிடுக. சுந்தரரின் கண்கள் கடவுளின் கட்டளையால் அவிந்து போயின. அவர் குருடராய்ப் பலநாள் வாழ்ந்தார். தன் தலைவரைத் தனக்கு கண் கொடுக்குமாறு பலமுறை பிரார்த்தித்தார். பயனில்லை; கடைசியாக,

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளா யிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரிர் வாழ்ந்து போதிரே.

என்ற பதிகத்தைக் காண்க.

## கல்விஞானம் கற்றஅஞ்ஞானம்

### 32

**கலையே பதறிக் கதறித் தலையூ**
**டலையே படுமா றதுவாய் விடவோ**
**கொலையே புரிவே டர்குலப் பிடிதோய்**
**மலையே மலைகூ றிடுவா கையனே.**

பொழிப்புரை.

கொலையையே செய்துவாழும் வேடர்களின் பெண்ணுன குலயானையை மணந்த மலையே! மலையைப் பிளந்து வெற்றிமாலை யணிந்தவனே! சாஸ்த்திரங்களை யெல்லாம் நான் பதறிக்கதறி என்தலை கிறுக்குற்று அம்மயக்க மயமாய் விட்டு விடல் தகுமோ?

விளக்கவுரை.

*சாஸ்த்திரங்களை யெல்லாம் கற்றுச் சமுத்திரம் போல இருக்கும் கலைகளின் அலைகளால் என் தலை அடிபடவும் இதற்குமேல் பிரயோஜனம் அற்றுப்போய் விடவும் தானோ என் கதி! கல்வி என்பது ஒன்று கல்வியினுல் அறியக் கூடாதவன் கடவுள் என்றும் அவனை அறிய அன்பினலன்றி இயலாது என்றும் அறிவதே கல்வியின் பயன்.*

*புத்தியின் கூர்மை எவ்வளவு பெற்றாலும் இதயத்தின் கொடுமை போகாது. மனமுருகி அன்பால் ஈடுபட்டாலன்றி ஆண்டவனை அடைய முடியாது. ஆணவத்தில் நிலை நின்று பேர் அறிவாளன் என்ற பெயர் தரித்து சமுத்திரம் போன்ற கலைகளை யெல்லாம் என்புத்தியின் கண் ஏற்றி அதின் அலை*

களால் அலைக்கபட்டு அழிவது பயனில்லையே என்றவாறு தாயுமானவர் கூறுவதும் அதுவே.

கல்லாத பேர்களே நல்லவர்க ணல்லவர்கள்
கற்று மறிவில்லாதவென்
கன்மத்தை யென் சொல்வேன் மதியை யென் சொல்லு
வேன் கைவல்ய ஞானநீதி
நல்லோருரைக்கிலோ கர்மமுக்கிய மென்று
நாட்டுவேன் கர்மமொருவ
னுட்டினலோ பழய ஞான முக்கிய மென்று
நவிலுவேன் வடமொழியிலே
வல்லாணெருத்தன் வரவு ந்த்ராவிடத்திலே
வந்ததா விவகரிப்பேன்
வல்லதமிழறிஞர் வரி னங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிது புகல்வேன்
வல்லாம லெவரையு மருட்டி விடவகைவந்த
வித்தையென் முத்திதருமோ
வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே.

---

எத்தனை விதங்கடான் கற்கினுங் கேட்கினுமென்
னிதயமு மொடுங்க வில்லை
யானெனு மகந்தைதா னெள்ளளவு மாறவிலை
யாதினு மபிமானமென்
சித்தமிசை குடிகொண்ட தீகையோ டிரக்கமென்
சென்மத்து நானறிகிலேன்
சீலமொடு தவவிரத மொருகன விலாயினுந்
தெரிசனங் கண்டு மறியேன்
பொய்த்த மொழியல்லான் மருந்துக்கு மெய்ம்மொழி
புகன்றிடேன் பிறர்கேட்கவே

போதிப்பதல்லாது சும்மாவிருந்தருள்
　　பொருந்திடாப் பேதை நானே
யத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா
　　வவனிமிசை யுண்டோ சொலா
யண்டபகிரண்டமு மடங்க வொரு நிறைவாகி
　　யானந்தமான பரமே.

சாஸ்திர ஞானம் போதாது; பஜனை செய்யுங்கள், என்றார் ஆதி சங்கராச்சாரியார். க்ரௌஞ்ச கிரியைத் தூள் தூளாகப் போகும்படி வேலேவிய தோளுடையவனே! உன் தோள்கள் மலைபோன்றிருக்கின்றனவே! மலையின் சாரல்களில் யானைகள் வசிப்பது இயல்பு. அவ்விதமே கொலையே புரிகின்ற வேடர் குலத்தில் பிறந்து பெண்யானை போலும் நடையுடைய வள்ளி நாயகி யென்ற யானை உன் தோள் சாரல்களில் சஞ்சரிக்கின்றாள் என்றார். மாயா மலையைப் பொடி யாக்கி வள்ளி நாயகியால் தழுவப்பட்ட நிலைத்த மலையிலக்காய் நிற்கும் உண்மையே நீ உன்னை யானறிய அருள் புரிய வேண்டும் என்பது கருத்து.

இன்னும் "கலையே பதறிக் கதறித் தலையூடலையே படுமாறதுவாய் விடவோ" என்ற பகுதிக்குக் 'காட்டிலே அலைக்கப்பட்ட மான் மனம் பதை பதைத்துக் கதறி அக் காட்டிடத்திலேயே அலைபட்டுச் சிக்கிக் கதியில்லாமல் தவிக்கும் தன்மையைப்போல இச்சமுசாரத்தினிடத்திலே அதிலேயே விளையும் தொல்லைகளுக்குட் பட்டு மன முடைந்து தவித்துக் கரையேற வழியில்லாமல் நான் திகைப்பு அடைவது தகுதியோ' என்னும் பொருளும் காணலாம். "தலையூடு அலைபடுமாறு" என்பதற்கு அதன் தலையிலுள்ள அழகுள்ளன போலக் காண்கிற கொம்புகள் மரக்கிளைகளில் சிக்கிக்

கொண்டு அக்காரணத்தால் அழிவது போல என்றும் கொண்டு, சமுசாரத்தில் ஏதொன்று நமக்கு இன்பத்தைத் தருகிறது என்று எண்ணுகிறோமோ அதுவே நமக்கு ஆபத்தாய் நிற்க அதனால் சிக்கிக் கஷ்டப்படுவது போல என்றும் தொனிப்பதைக் காண்க.

வாகையனே என்பதற்கு வெற்றிமாலை சூடியவனே என்று பொருள் கொண்டு, அசுரர்கள் மீதில் வெற்றி கொண்டு வாகை சூடும் உனக்கு என்! தொல்லையைத் தொலைப்பது இலகுவானதே என்றும் கொள்க. அன்றியும் அசுரரைக் கொல்வதும் உன் கை; வள்ளி தோய்வதும் உன் கை. அதுவே பகைவர்க்கு யமன்; பக்தர்களுக்குக் காதலன்.

இன்னும் கொலையே புரி வேடர் குலத்திலே உன்மீது தோயத்தக்க ஒரு குலப்பிடி பிறந்தது; அதனை நீ ஆட்கொண்டாய்; அதே போல் பிரபஞ்ச மோக வாழ்க்கையின் இடையிலே உன்னை உணரும் அறிவு எனக்கு வாய்த்தது. அதனை நீ ஏற்பாய் என்ற பொருள் நயங்களையும் நோக்குக.

பொன்னுரை

33

சிந்தா குலவில் லொடுசோல் வமெனும்
விந்தா டவியென் றுவிடப் பெறுவேன்
மந்தா கினிதந் தவரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே

பொழிப்புரை.

கங்காதேவி பெற்ற சிறந்த தோற்றமுடையவனே! கந்தா, முருகா, கருணாகரா, மனத்துக்கு ஆகுலமான குடும்பம், செல்வம் என்ற விந்தியாமலையிலுள்ள அடவி போன்ற காடுகளை என்று நான் விட்டு வெளியேறுவேன்?

விளக்கவுரை.

மந்தாகினியாகிய கங்காதேவி உதவிய வரதனே! கந்தா முருகா! கருணாகரனே! உனை ஒன்று வேண்டுகின்றேன். மனக்கவலையால் நிரம்பி யிருக்கும் மனை என்றதும், செல்வம் என்பதும் ஒரு "மாயாபஜார்" என்று யான் அறிந்து அவற்றைத் தள்ள அறிவு அருளல் வேண்டும். ஆச்சர்யமான ஒரு காடு இந்தமனை—மறைந்து மறைந்து தோன்றித் தோன்றித் துன்பம் விளைவிக்கும் காடு. இதினின்றும் மீள உன்னருள் வேண்டும் என்பது கருத்து.

செல்வத்தைப் பற்றி முன்னமேயே ஒரு பாட்டின் கண் சொல்லப்பட்டது. எல்லாம் மாயை என்று நினைத்து அவற்றிற்கு நாம் இறந்தாற் போல் இருந்திடல் வேண்டுமென்பது உபதேசம். விந்தாடவி—விந்தைமலை யோரத்திலுள்ள பெருங்காடுகள்.

*பட்டினத்தார் விளக்குவார்*

மையாடு கண்ணியு, மைந்தரும், வாழ்வு, மனையுஞ், செந்தீ
யையா ! நின் மாயை யுருவெளித் தோற்ற மகிலத்துள்ளே
மெய்யா யிருந்தது ; நாட்செல நாட்செல, வெட்ட வெறும்
பொய்யாய், பழங்கதையாய்க், கனவாய்மெல்லப் போனதுவே.

உள்ளது போல் மயக்கி வனத்தைக் கவர்ந்து பிறகு துன்பத்தில் ஆழ்த்தி இல்லதுவாய் மறையும் பிரபஞ்சம் இது ஒரு பெரிய ஆச்சரியமான காடு என்றார்.

## 34

**சிங்கா ரமடந் தையர்தீ நெறிபோய்**
**மங்கா மலெனக் குவரந் தருவாய்**
**சங்க்ரா மசிகா வலசண் முகனே**
**கங்கா நதிபா லக்ருபா கரனே**

### பொழிப்புரை.

போர்செய்ய வந்ததும் சிகையைப் பெற்றதுமான மயிலை வென்ற ஷண்முகனே, கங்கையின் மகனே, கிருபையைச் செய்பவனே அழகிய பெண்களிடம் மோகம் கொள்வதாகிய கொடிய வழியே சென்று மயக்க மடையாமலிருக்க வரம் தருவாயாக.

### விளக்கவுரை.

*மனத்தின் விகாரத்தைக் கண்டித்து நன்னெறியை உணர்த்தும் அருணகிரியார் பெண்பாலை இகழ்ந்ததாகக் கொள்வது அறிவின்மையாகும்.*

*ஆசை ஆண் பெண், இருவருக்கும் உண்டு ஆகவே இரு பாலர்களும் ஆசையை நீக்கி, ஆசையை யெல்லாம் முருகனிடம் சேர்க்க வேண்டும் என்பது உபதேசம். "போரில் (சங்கிராமம்) மிகவும் சிறந்தவனே வல்லவனே, க்ருபாகரனே" என்று கூவி வரம் கேட்கின்றார். என் ஆசையினின்றும் என்னை விடுவித்து ஆட்கொள்ள உனக்குப் பராக்ரமம் இல்லையோ? சக்தி யில்லையோ ஆதலால் நீ எனக்கு ஒரு வரம் தரல்வேண்டும். மங்கையர்கள் ஆசை துரத்தேக வரம் தரல் வேண்டும் என்பது கருத்து.*

## ஷண்முகம்.

மாயிருள் ஞால மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுகம்; ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங் கொடுத் தன்றே ஒருமுகம்;
மந்திர விதியின் மரபுளி வழா?
வந்தணர் வேள்வி யோர்க்கும்மே ஒருமுகம்;
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக்கும்மே ஒருமுகம்
செறுநர்த்தேய்த்துச் செல்சம முருக்கிக்
கறுவுகொணெஞ்ச மொடுகளம் வேட்டன்றே ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகைய மர்ந்தன்றே.

---

## 35

**விதிகா ணுமுடம் பைவிடா வினையேன்**
**கதிகா ணமலர்க் கழலென் றருள்வாய்**
**மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்**
**றுதியா விரதா சுரபூ பதியே.**

### பொழிப்புரை.

பிறைச் சந்திரனை யொத்த நெற்றியை யுடைய வள்ளியை யல்லாமல் வேறு ஒருவரையும் பின் சென்று துதியாத விரதத்தை யுடையவனே! தேவர்களுக்கு அரசனே, விதியால் உண்டான உடலைவிட்டு நீங்காத வினையையுடைய யான் நற்கதியைக்காணும் வண்ணம் உன் மலரணிந்த திருப்பாதங்களை என்று அருள்வாய்.

### விளக்கவுரை.

*"தேவலோக அதிபதியே! விதியே உருவாய் வந்த இந்தத் தேகத்தை நம்பி நம்பி விடாது பற்றித்துன்புறுகின்றேன். நான் (கதி) நல்ல மோக்ஷத்தை அடையுமாறு உன் தாமரைமலர் போன்ற பாதங்களை என்று பெறுவேன்" என்றார். சந்திரபிம்பத்தைப்போல் முகவிலாஸத்தையுடைய வள்ளிநாயகியை யல்லது பிறரைத் துதிப்பின் செல்லாத விரதத்தையுடையவன் முருகன் என்றார்.*

*" அந்தோமனமே நமதாக்கையை*
*நம்பாதே இதாகித சூத்திரம்*
*அம்போருகனுடிய பூட்டிது"*

*என்று திருப்புகழில் காண்க.*

இந்து வாண்முகவன ஜமும் ம்ருகமத
குங்குமாசல யுகளமும் மதுரித
இந்தளாம் ருதவசனமும் முறுவலும் அபிராம

இந்தரகோபமும் மரகத வடிவமும்
இந்தரசாபமும் இருகுழை யொடு பொரு
இந்தர நீலமும் மடலிடை எழுதிய பெருமாளே.

என்றும் வள்ளியை வர்ணித்துள்ளதும் காண்க.

மெய்வாய் விழி நாசியொடும் செவியாம்
ஐவாய் வழி செல்லும் அவா வினையே.

என்று ஏற்கனவே உபதேசித்தவாறு இந்த உடல் விதியின் பயனும் விதியாய் காணப்படுமாம், வினையால் விதி எய்தியது. அவாவன்றி வினையேது? ஆதலால் வேண்டாமை அருள்வாய்.

கைவல்யத்தில் ஜீவன் முக்தர்கள் லக்ஷணத்தைச் சொல்லுங்கால்,

சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார்
கண்முன் நின்றது புஜிப்பர் வெய்யல் நிலவாய்
விண்விழுது வீழ்ந்து பொன்றிய சவம் வாழ்ந்தா
லும் புதுமையாய் ஒன்றும் பாரார் நன்று
தீதென்னார் சாக்ஷி நடுவான ஜீவன் முக்தரே.

என்று கூறியதும் காண்க.

36

**நாதா குமரா நமவென் றரனு**
**ரோதா யெனவோ தியதெப் பொருடான்**
**வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்**
**பாதா குறமின் பதசே கரனே.**

பொழிப்புரை.

வேதனாகிய பிரமன் முதல்தேவர்கள் யாவரும் உச்சியில் தரிக்கு மலர்ப்பாதனே! குற மகளாம் மின்னலில் பாதத்தைச் சிரசில் தரிப்பவனே! அரனுர் (உன்னை நோக்கி), நாதா, குமரா, நம ஓதாய், என்று கேட்க அவருக்கு ஓதிய பொருள் தான் என்ன?

விளக்கவுரை.

எங்கும் நிறைந்து நிற்கும் தத்துவம் ஒன்றாகவே நிற்க அந்தச் சிவதத்தும் சிருஷ்டியை உண்டு பண்ணி ஜகலீலை யில் விளையாடா நிற்க ஒரே தத்தும் ஈருருவாய்ச் சிவம் என்றும், சக்தியென்றும் பேதப்பட்டுக் கலந்து சிருஷ்டியில் விளங்குவது ப்ரக்குதி யென்றும் புருஷன் என்றும் கூறு வரர்கள். சங்கரனென்றும் நாராயணன் என்றும் கூறுவார் கள். இரண்டு தத்துவங்களாய்ப் பிரிந்து விளங்குங்கால் இந்தஇரண்டு தத்துவங்களும் ஒன்றே. ஆதலால் இவ்விரண் டின் உள்ளும் ஒன்றாக விளங்கும் ஞான ரூபமாய் கிடக்கும் ஏகமே ஷண்முகன். சோமாஸ் கந்தமூர்த்தி என்னுரைப்பார் ஸ்வாமி மலையில் அந்த ஏகதத்துவத்தைச் சிவனுக்கு உப தேசம் செய்தார். தானே அந்தத் தத்வம் ஆகும் என்று

மொழிந்தார். சமுஷ்டியில் (தொகுதியில்) ஏகமாய் நின்ற தெய்வ தத்துவம் பேதமாய் விளங்கிவரும் ஸ்ருஷ்டியில் மறைந்த போது பூரணமாய்நின்ற ஏகம் என்ற ஞானம்குரு நாதனுய் விளங்கிஞர். பேதத்தில் ஈடு பட்டு அபேதத்தன் மையை மறைந்த ஜீவன் சிஷ்யனுய் உபதேசம் பெற்ருன். ஞானம் குரு என்றும், அஞ்ஞானம் சிஷ்யன் என்றும் கூறப் பட்டது காண்க. உலகத்தில் குருநாதன் ஒருவனே ஒருவன் பல முகமாய்ப் பேதித்த ஜீவன்களுக்கு அவரவர்களுக்கு இசைந்த வண்ணம் பலமுகமாய் வந்து குருவாய் உபதேசிய் பார்.

உபதேசித்த பொருள் யாது.

அகரமுத லெனவுரைசெய் ஐம்பத்தோ ரக்ஷரமும்
அகிலகலை களும்வெகுவி தங்கொண்ட தத்துவமும்
அபரிமித சுருதியும டங்குந்த னிப்பொருளை எப்
பொருளுமாய

அறிவையறி பவரறியும் இன்பந்த னைத்துரிய
முடிவை அடி நடுமுடிவில் துங்கந்த னைச்சிறிய
அணுவையணு வினினமலமு மெஞ்சுங்கு ணத்ரயமு
மற்றதொருகாலம்

நிகழும்வடி வினைமுமுடிவி லொன்றென்றி ருப்பதனை
நிறைவுகுறை வொழிவறநி றைந்தெங்கு நிற்பதனை
நிகர்பகர அரியதைவி சும்பின்பு ரத்யமெ
ரித்தபெருமானும்

நிருபகுரு பரகுமர என்றென்று பத்திகொடு
பரவஅரு ளியமவுன மந்தரந்த னைப்பழய
நினதுவழி யடிமையும்வி ளங்கும்ப டிக்கினிது
ணர்த்தியருள்வாயே;

என்பதை திருப்புகழில் காண்க.

"கொன்றைச் சடையற் கோன்றைத் தெரிய
கொஞ்சித் தமிழை பகர்வோனே"

என்பதும் காண்க. தமிழைப் பகர்ந்தாரா. அமிழ்த மாம் தமிழ் ஓம்கரரத்துள் விளங்கும் அமிழ்தம். முற் பட்ட அமிழ்தம் மூவர்க்கும் முற்றுமாய் முற்றுக்கும் பின்னை அமிழ்தம் ஆகவே அது முத்தமிழ். அது லோகத்துக் கெல்லாம் ஆதியாய் நின்ற அமிழ்தம், இந்த அமிழ்தத்தை உபதேசித்தார். முருகன் செங்கனிவாயில் ஊறும் அமிழ்தம். நினைக்கும் அடியார் உள்ளத்தில் ஊறும் அமிழ்தம். ஞானப்புகலுடையோர் உள்ள புண்டரீக புஷ்பத்தினிடை காணப்படும் தேன். அன்பாக வெளிப்பட்டு ஆழியாய்ப் பெருகி நிற்கும் பாற்கடலும் அதுவே. அப் பாற்கடலில் துயிலுகின்ற கருடத் தனிப்பாகனும் அதுவே.

நாரணன் காணல் முகன் காணல்வே தன்காண்
ஞானப்பெருங் கடற்கோர் நாவாயன்ன
பூரணன் காண் புண்ணியன் காண் புராணன் ரன்காண்
புரிசடைமேற் புனலேற்ற புனிதன்ரன் காண்
சாரணன் காண் சந்திரன் காண் கதிரோன் ரன்காண்
டன்மைக்கட்டானே காண்டக் கோர்க் கெல்லாம்
காரணன்காண் காளத்தி காணப்பட்ட
கணநாதன் காணவனென் கண்ணுளானே.

அவன் உந்தியில் வளர் நான் முகனும் ஏனையதேவர்களும் மன்னும் விண்ணும் விசும்பும் அதுவே. காதலித்தங்கடியார்கள் பரவிநின்ற பண்ணுகி இன்னமுதமாம் பரஞ்சுடரும் அதுவே.

தானே புணர்ந்து தானேயறிந்து
தானே மகிழ்ந்து அருளுறி
தாய் போல் பரிந்த தேனேடுகந்து
தானே தழைந்து சிவமாகி

தானே வளர்ந்து தானே இருந்த
தார்வேணியெந்தை அருள்பாலா
சாலோக தொண்டர் சாமீபதொண்டர்
சாரூப தொண்டர் பெருமாளே.

என்றவாறு நின்றதானும் காதலித்த அடியார்க்குக் கனிந்த மெய்ப் பொருளாய்க் காணப்படும் உண்மையும் அதுவே. ஆகையால் " குறமின்பதசேகரனே " என்றார்,

---

முருகன் பரிவாரம் அன்றோ யான்

37

கிரிவாய் விடுவிக் ரமவே லிறையோன்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
அரிவா யடியோ டுமகந் தையையே

போழிப்புரை.

மனமே, மலையின் மீது வீசும் வெற்றிவேலையுடைய தலைவனின் பக்தகோடிகளுள் சேர்ந்தவன் என்று சொல்வதற்குரிய காரியங்களையே செய்வாய். உன் அகந்தையை பொறுமை என்ற அறிவால் வெட்டித்தள்ளுவாய்.

விளக்கவுரை.

சக்திவேலைக் கையில் தாங்கி மாயையாம் க்ரௌஞ்சகிரியைப் பஞ்சாடிய வேலவனார் இவ்வுலகெலாம் ஆட்டிவைக்கும் தத்வம். ஆகையால் அல்லவோ தாயுமானவர்.

அகிலமீது என்னை ஆட்டி ஆடல் கண்டவனும் நீ,
ஆடுகின்றவனும் நீ, அருளும் நீ
மௌன ஞானதாதாவும் நீ என்று பாடினர்

அவன் ஆணையின்றி ஓர் அணுவும் அசையுமோ. சக்தி அவன் கையில் நிற்க அவன் அசைந்தாலன்றி செயலேது? இந்த அருமையான நிலையைச் சமரஸ சுவபாவம் என்பார்.

ஆராயும் வேளையிற் பிரமாதி யானுலு
மையவொரு செயலுமில்லை
யமைதியொடு பேசாத பெருமைபெறு குணசந்த்ர
ராமென விருந்த பேரு
நேராக வொருகோப மொருவேளை வரவந்த
நிறைவொன்று மில்லாமலே
நெட்டுயிர்த் துத்தட் டழிந்துளறு வார்வசன
நிர்வாக ரென்றே பேரும்
பூராய மாயொன்று பேசுமிட மொன்றைப்
புலம்புவார் சிவராத்திரிப்
போது துயி லோமென்ற விரதியரு மறிதுயிற்
போலே யிருந்து துயில்வார்
பாராதி தனிலுள்ள செயலெல்லா முடிவிலே
பார்க்கினின் செயலல்லவோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணனந் தமே

இவ்விதம் "சந்ததமும் எனது செயல் நினது செயல் யானெனுந்தன்மை நினையன்றி யில்லாத் தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த சமரச சுபாவமிதுவே" என்றும் தாயுமானவர் உபதேசித்துள்ளார்.

செயலெலாம் அவன் செயலாதலால் செயலுக்கு உதவியாய் நிற்கும் ஜீவனெல்லாம் சக்திவேலன் பரிவாரமன்றோ? நான் என்றதும் என் செயல் என்றதும் ஆணவம் எனும் மாயையின் செய்கை என்று தெரிந்து பொறுமை என்றும்

ஞானமென்றும் கருதப்பட்ட சக்தியினுல் என் அகந்தையை அடியோடு அறுத்துவிடல் வேண்டும். நான் என்பதொழிங் தால் தேகம் ஈசன் பரிவாரம் என்ற அறிவுதோன்றும். அதுதோன்றியக்கால் சமரஸத்தில் நிற்க சாசுவத ஆனந்தம் எய்தும் என்றவாறு.

---

## தீதாளியை ஆண்ட தெய்வம்

## 38

ஆதா ளியையொன் றறியே னையறத்
தீதா ளியையாண் டதுசெப் புமதோ
கூதா ளகிரா தகுலிக் கிறைவா
வேதா ளகணம் புகழ்வே லவனே

### பொழிப்புரை.

கூதாள மலர்களை அணியும் வேடர் குலத்தில் உதித்த குலக்கோடிக்கு (வள்ளிக்கு) இறைவா! வேதாளக் கூட்டங்களால் புகழப்படும் வேலவனே! மூடத்தனத்தால் ஆளப்பட்டவனும், ஒன்றும் அறியாதவனும், தீமையை முற்றும் ஆளுகின்றவனும் ஆன என்னை நீ ஆண்ட தன்மை சொல்லத்தக்கதோ?

### விளக்கவுரை.

“மனமே நீ அஞ்சாதே, உன் கொடுமைகளை நினைந்து நினைந்து தளராதே. முருகனை அண்டினுல் அவன் உன்னை ஆள்வது திண்ணம். என்னையே ஆண்டுள்ளான். ஆணவத்தில் நிலைபெற்று எப்போதும் எனது கர்வத்தையே காட்டிப் பிதற்றிக் கொண்டிருந்தேன். ஏதும் அறியாத அறிந்ததுபோல் பிறரை ஏமாற்றிக் கொண்டிருந்தேன்.

நன்று என்பது ஒன்றுமில்லாத தீதாளியாய்த் திரிந்தேனை அவன் கருணையால் ஆண்டது சொல்லவும் முடியுமோ! கூத்தாடிகளாய் மன ஈரம் இல்லாத கிராதகர்களுள் வளர்ந்த வள்ளிக்கு இறைவனுப் வந்தவனன்றோ அவன்; அவன் உன்னை ஆள்வான். இதனாலன்றோ வேதாள கணங்களும் அவனைப் புகழ்கின்றன. அஞ்சேல் அஞ்சேல்" என்றவாறு.

---

ரஷணத்ரயம்

39

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவே டணையென் றுமுடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவசங் கரதே சிகனே

பொழிப்புரை.

என் தலைவனே! குறவர் குலத்து மின்னல் கொடியான வள்ளியின் தோளை அணையும் தேவனே! மங்களகரமானவனே! சுபத்தைச் செய்பவனே! குருவே! கொடிய ஏழ்பிறவிகளும் கெட மாயை அகலாமற் கிடக்கும் மூன்று ஆசைகளும் முடியும் காலம் எதுவோ?

விளக்கவுரை.

ஈஷணங்கள் மூன்று உண்டு. ஈஷணத்ரயம் என்பார்கள். அவையாவன:—அருத்தவேடணை, புத்திரவேடணை, உலகவேடணை. இந்த மூவகையாம் ஆசை அல்லது அவா என்பது ஜீவனை ஏழுவகைப் பிறவிக்கு ஏதுவாய் நிறுத்தும். ஏழுவகைப் பிறவி யாவை என்னில், அவை தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்ப

வைகளே. ஆசை கெட்டால் பிறவிக்கடலைத் தாண்ட முடியும். ஆகையால் பெருத்த ஏழ் பிறப்பு வகையான கடலைத் தாண்ட என் ஆசை என்றுதான் ஓயும்? என்று முருகனை வினவுகின்றார். "அரசே, வள்ளி நாயகனே, சங்கர தேசிகனே" எனக்கூவி அழைத்தும் ஆசை போகாதா என்றவாறு அருமையான ஒரு பிறவியைப் பெற்று அந்தப் பிறவியின் வேரை யறுத்து உன் திவ்ய நாமங்களை என் நாவால் தெரிய ஓதியே பிழைத்திட உன் னருள் தாராய் என்னும் திருப்புகழில் காண்க.

நிலையாதச முத்திர மான
சமுசாரது றைக்கணின் மூழ்கி
நிசமானதெ னப்பல பேசி யதனூடே
நெடுநாளுமு ழைப்புள தாகி
பெரியோர்கணி டைக்கர வாகி
நினைவால்நின டித்தொழில் பேணி துதியாமல்
தலையானவு டற்பிணி யூறி
பவநோயின லைப்பல வேகி
சலமானப யித்திய மாகி தடுமாறித்
தவியாமல்பி றைப்புயு நாடி
யதுவேரைய றுத்துனை யோதி
தலைமீதில்பி ழைத்திட வேநி னருள்தாராய்;
பதியான திருத்தணி மேவு
சிவலோகமெ னப்பரி வேறு
பவரோகவ யித்திய நாத பெருமாளே

"யாதுநிலை யற்றலைபு மேழுபிற விக்கடலை யேறவிடு நற் கருணை ஓடக்காரனும்" என்பதை வேளைக்காரன் வகுப்பில் காண்க.

## வினையை வெல்வது வேல்

## 40

**வினையோ டவிடுங் கதிர்வேன் மறவேன்**
**மனையோ டுதியங் கிமயங் கிடவோ**
**சுனையோ டருவித் துறையோ டுபசுந்**
**தினையோ டிதனோ டுதிரிந் தவனே**

### பொழிப்புரை.

சுனைகளிலும், அருவித்துறைகளிலும், பசுந்தினைப் புனங்களிலும், பரண்களிலும் (வள்ளியை நாடித்) திரிந்தவனே, நான் என் வினைகளை ஓட்டும் ஒளிமிகுந்த (உன்) வேலை மறவேன்? அப்படி இருக்கும் நான் சமுசாரத்தில் ஈடுபட்டு மயங்கக்கடவனோ?

### விளக்கவுரை.

முருகன் கையில் உள்ளது ஞானச்சுடர்வேல். அந்த வேலை மறவாத அடியார்கள் ஆசையால் துன்பப்பட்டார்கள். ஆனால் அவர்கள் சீக்கிரத்தில் ஆசையினின்றும் விடுபடுவார்கள். ஆகவே ஆசையே வினையானதால் வினையை ஓடும்படிச் செய்யும் முருகன் வேல். வேலை நினைந்தவர்கள் சமுசார சமுத்திரத்தால் வருந்தார். மயக்கம் அடைய மாட்டார்.

முருகனைக் குறிஞ்சி நாட்டில் விளையாடிய பெருமையைச் சொல்லிக் கொண்டாடுகிறார். வள்ளியம்மை ஸ்நானம் செய்யும் சுனைகளிலும் சிறு நீரோடைகளின் துறைகளிலும் புனங்காத்த பசுந்தினையோடும் ஆலோலமென்று கூவிய பரண்மிசையிலும் திரிந்த முருகா என்று அழைத்தார். இதின் உட்பொருளும் போற்றத்தக்கது. நெஞ்சு என்ற கல்லானது நெகிழ்ந்து அன்பு வெள்ளமெடுத்துச்

சுனையாக நின்ற மகான்கள் இதயத்திலும் அந்த மகான் களின் அன்புக்குப் பாத்திரமான அடியார்க்கு அடியார்களி டத்திலும் அன்பின் பலனாகவும் நின்ற முருகன் எல்லார் நெஞ்சத்திலும் விளையாடுகின்றான் என்றும் அறியலாம். கதிர்வேல் மறவாதவர்க்குத்தான் ஞானமாம் கதிர் கைகூடு மென்பதை உபதேசித்தார்.

---

சாவை வெல்வது சரணம்

41

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனர் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே.

பொழிப்புரை.

வெற்றி கொண்டவனே! அழகனே! மயில்வாகனனே! யோகியே! சிவஞானத்தை உபதேசம் செய்யும் குருவே, யமன் வந்து கலகம் செய்யும்போது (என் மரண காலத்தில்) நான் சாகாமல் உன் சரணங்களையே அடையுமாறு காப்பா. யாக! காப்பாயாக!

விளக்கவுரை.

அமிர்தமயமான உன் சரணங்களைப் பெற்ற பெரியார்க் குச் சாவு உண்டோ! இல்லை என்றவாறு. ஆகவே எனக்கும் ஞானோபதேசம் செய்து மரண பீதியினின்றும் என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டுவார் போலும்.

மரணம் என்பது எமன் செய்யும் செயல். அந்தச் செயலால் வருந்தாத ஜீவன் கிடையாது என்று உலகம் நம்பும். அந்த மரணம் பொய். நிமிஷத்துக்கு நிமிஷம் நாம் இறந்துகொண்டே இருக்கின்றோம். ஆகவே நிமிஷத்துக்கு நிமிஷம் முருகனை மறவாது பஜித்துக் கொண்டிருங்கள்.

முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு துங்கெடுக்கு
மிடியாற் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமா ளவுணர் குலமடங்கப்
பொடியாக்கிய பெரு மாடிரு நாமம் புகல்பவரே.

மரணத்தை வெல்வதற்குச் சரணத்தைபற்றவேண்டும் சரணத்தை பற்றவேண்டில் உலகப்பற்றிய கைகளை விரித்து, விரித்த கைகளை தலைமேல் கூப்பி, முருகன் சரணத்தைப் பற்றுமின். கந்தரலங்காரத்தில் போதிப்பார்.

மரணப்ர மாத நமக்கில்லை யாமென்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலுமுண் டேகிங் கிணிமுகள
சரணப்ர தாப சசிதேவி மங்கல்ய தந்துரக்ஷா
பரணக்ரு பாகர ஞான கரசுர பாஸ்கரனே.

எல்லாமிழந்த நலம்

42

குறியைக் குறியா துகுறித் தறியு
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே.

பொழிப்புரை.

ஒப்பற்ற வேலன் இலக்ஷியத்தைக் குறிக்காமலே நான் அதைக் குறித்து அறிந்து அந்நெறியிலே நிற்கக் கற்பிக்கவும் நான் உலக சம்பந்தத்தை நீக்கி உலகத்தாரோடு பேசுதலும் அவர்களை நினைத்தலும் இல்லாமல் அறிதல் அறியாமை என்ற நிலைகளையும் நீங்கி நின்றேன்.

விளக்கவுரை.

*வேல் தாங்கிய அழகியர் (வேல் + ஐ) என்னைச் சரியான நெறியில் நிகழ்த்திடுவார். நிற்கும்படி அருள் புரிவர். அந்த நெறி யாதென்று கூறுகின்றார். ப்ரபஞ்சத்தில் அஞ்ஞானத்தால் மூடப்பட்ட ஜீவன்கள் எந்த உலக வாழ்க்கையைக் குறியாகக்கொண்டு முயல்கின்றனரோ அவ்வாறான குறிகளின் குறியை அதாவது இலக்ஷியத்தை அலக்ஷியம் செய்யவேண்டுமென்ற குறியைக்கொண்டு அறிந்துகொள்ளும் நன்னெறி யென்றார். வேண்டாமையிலேயே சிறந்த இலக்ஷியத்தைப்பூண்டு அந்த அறிவினால் கண்ட உண்மை நெறியை ஆட்கொண்ட பெரியோர்கள் கண்ட அனுபூதியைச் சொல்லுவார். சங்கத்தை நாடார். சிந்தையையும் நோக்கார். அவர்களுக்கு உலகம் இறந்துவிடும். அவர்கள்*

அறிவும் அறியாமையும் கடந்த அறிவேனும் முருகனை சதா காலமாய் அனுபவித்து களி கூர்வர் என்றார்.

அறிவும் அறியாமையும் கடந்த
அறிவு நின் திருமேனியென் றுணர்ந்து
அருண சரணார விந்தமென்று அடைவேனோ

என்று திருப்புகழில் காண்க.

---

ஆசையிறந்தது—பூதி பிறந்தது

43

தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா வனுபூ திபிறந் ததுவே.

பொழிப்புரை.

பரிசுத்தமான ரத்னங்களையும் ஆடைகளையும் தரிப்பவளாகிய வள்ளி நாச்சியாரின் நேசனே! முருகா! உன் அன்பு நிறைந்த அருளால் ஆசையாம் சங்கிலி பொடிப் பொடியாகி விட்டன, பிறருக்குப் பேசப்படக்கூடாத அனுபூதி முளைத்தது.

விளக்கவுரை.

ஆசாரத்தோடு ஸ்நானம் செய்து பரிசுத்தமான ஆடை தரித்து மணிமாலைகளால் அலங்கரிக்கப்பட்ட வள்ளியின் நேசா! வள்ளிபோல் பக்தி செய்யும் அன்பர்க்கு சதாகால நேசன் என்றார். நேசர்க்குப் பேரொளிதது என்று திருப்புகழில் அன்பர்பால் முருகன் நேசத்தை உரைத்தார்.

முருகா உன் அருளால் அன்றி, ஆசையாகிய நிகளம், பந்தமாகிய சங்கிலி தூளாகுமோ. அவ்விதம் உன்னருளின் பலத்தால் என்னைக் கட்டிச் சிறைகொள்ளும் ஆசையின் கட்டுகளை யெல்லாம் தூளாக்கிவிட்டால் பிறகல்லவோ மௌனம் என்ற பேரானந்த அனுபூதி பிறந்திடும். ஆசை அற்றது அனுபூதி உற்றது என்பார்.

முருகன் அருளின்றி ஆசையை ஆண்டவனிடம் செலுத்த முடியாதென்பதையும் ஆண்டவனிடம் கொண்ட அன்புதான் பிரபஞ்ச ஆசையைத் தூளாக்கும் வன்மையை யுடையது என்றும் உபதேசிக்கிறார். அன்பே அருள், எனின் ஜீவனின் அன்பு முருகன் அருளாகப் பலன் கொடுக் கும். சிவமே அன்பு. அன்பே சிவம் என்றவாறு. ஜீவ னெல்லாம் சிவஸ்ரூபமாகையால் அன்பே குணமாகக் கொண்ட பெரியோர் சகல ஜீவனிடத்திலும் தங்கள் அன் பைச் செலுத்துவார். ஜீவனுக்குள் வீற்றிருப்பதும் சிவம் ஆதலால் சிவத்தால் தூண்டப்பட்டு ஜீவன்களும் பெரியோ ரிடம் அன்பையே திருப்புவார்கள். அன்பு பெருகி இவ் வாறு அன்பைக் கொடுத்து அன்பை வாங்கியே உறும் ஆனந்தமாம் வாழ்வுதான் பெருவாழ்வு. அந்த வாழ்வில் உற்ற பெரியோர் பேராசை எனும் பிணிகளால் துன்புறார். அன்பால் மனம் கலந்த இடம் மனம் கரைந்த இடமாகும். கரைந்த மனம் அற்ற மனம். மனமற்று நின்ற நிலை மௌன மாம். அனுபூதி உதிக்கும் இடமாம். மிகவும் தெளிவாக சுட்டிக்காட்டும் அழகை நோக்கற்பாலது. அன்பெனும் தன்மை ஆண்டவன் வண்ணம் ஆகவே ஜீவன்கள் நெஞ்சில் ஊறினும் அது தெய்வத்தன்மையதுதான். ஆகையால் நினதன்புகாணும் அன்பெலாம் முருகன் அன்பு. வேறு அன்பென்பது இல்லை என்றார். உன்னிடம் செலுத்திய அன்பால் பெற்ற அருளால் அனுபூதி உதித்தது என்றவாறு.

## 44

சாடுந் தனிவேன் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடுஞ் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே.

### பொழிப்புரை.

மோக்ஷபதவியிலும் தேவர்கள் தம் பெரிய முடிகளிலும் வேதத்திலும் கொடிய காடுகளிலும், புனங்களிலும் மணம் வீசும் அவன் திருப்பாதங்கள் பகைவர்களைக் கொல்லும் ஒப்பற்ற வேலையுடைய முருகனின் அப்படிப்பட்ட சரணங்களை நான் அணியும்படி அனுக்ரஹித்து சொல்லும் தன்மையதோ.

### விளக்கவுரை.

வினையைச் சாடி அகற்றிடும் ஒப்பற்ற வேல் முருகன் கை வேல். அந்த முருகன் பாதாரவிந்தத்தை நான் சென்னியில் சூடும்படி அருள் புரிந்த முருகன் கருணையைச்சொல்ல முடியுமோ. உலகெலாம் பரந்த திருவடி. மோக்ஷத்திலும் நிறைந்துள்ளது. தேவர்கள் தலையிலுள்ளது. காடுகளிலும் புனங்களிலும் கமழுவது முருகன் சரணம் என்றார். முருகன் சரண கமலங்களின் வாசனை உலகெலாம் பரவியுள்ளது. அந்தச் சரணங்களின் பெருமையை சீர்பாத வகுப்பில் சற்று காணலாம். முக்கியமாய்ச் சரணானுபவமே அனுபூதி என்றார். உரையவிழ, உணர்வவிழ, உளமவிழ, உயிரவிழ, உளபடியை உணருமவர் அனுபூதி யாவதுவும் மணநாறும் சீறடி என்றார்.

*தாவடி யோட்டு மயிலிலுந் தேவர் தலையிலுமென்*
*பாவடி யேட்டிலும் பட்டதன் றோபடி மாவலிபாண்டச்*
*மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகடுமுட்*

சேவடி நீட்டும் பெருமாண் மருகன்றன் சிற்றடியே.
என்பதைக் கந்தரலங்காரத்திலும் காண்க. துன்பத்தை யெலாம் மாற்றி ஆனந்தத்தை ஊட்டும் திருவடி

கிளைத்த ஜோதி திளைத்த திருவடி
முளைத்த வல்வினை மடித்த திருவடி
வளைத்த கொல்பகை வதைத்த திருவடி
துளைத்த சுடர்வேல் தரித்த திருவடி
அளித்த அன்பை இனித்த திருவடி
களித்த காரளி இசைத்த திருவடி
ஒளித்த சூரனை அசைத்த திருவடி
ஒளித்த திருப்புகழ் உரைத்த திருவடி
ஜெனித்த பிறவியைக் கொடுத்த திருவடி
ஜெனியா தெமையினி விடுத்த திருவடி
பனித்த சடையினர் பிடித்த திருவடி
இனித்த வெமதுளம் உடுத்த திருவடி
அடன்மிகு கஜமுகன் அருள்சேர் திருவடி
உடலுயிர் பொருளெலாம் போந்தருள் திருவடி
ஜடனெனை விரகொடு ஆண்டருள் திருவடி
வடபழனி யப்பன் அருள் திருவடியே.

ஆண்டவன் திருவடி ஜகத்தின் க்ஷேமத்துக்கு மூலாதாரமாய் அமைந்தது. அந்தத் திருவடி எங்கும் கமழ்ந்தும் தனக்குக் கிடைக்காமலிருந்து கடைசியாக கிடைத்தபோது வாய்த்த அனுபூதியை சொல்லமுடியவில்லை. வாசாமகோசரமானது என்பது கருத்து.

திருவடியே உலகெலாமாகவும் மோக்ஷமாகவும் பரவி நிற்கும் தத்துவத்தை விளக்கினர்.

3-வது பாட்டுடன் சேர்த்துகோள்க

45

**கரவா கியகல் வியுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோ கதயா பரனே.**

பொழிப்புரை.

குருநாதா, குமர குலிசை என்னும் ஆயுதத்தை யுடையோனே! குஞ்சரி நாயகனே! சிவயோக தயாபரனே! வஞ்சக கல்வியை உடையாரிடம் சென்று அதனை நான் யாசிக்காமல் உண்மைப் பொருளை எனக்கு ஈவாயோ?

*வஞ்சக கல்வியில் மிகுந்த தேர்ச்சியடைந்தவரிடம் சென்று பொருளையும் உதவியையும் அவரிடம் ஏற்கும்படி என்னை விட்டுவிடாமல் மெய்ப்பொருளை நீயே எனக்குக் கொடுத்திடல் வேண்டும் என்று வற்புறுத்துகிறார். ஞான குரவனும் என்றும் குமரனும் குலிசை என்னும் ஆயுதமுடையவனும் குஞ்சரி நாயகனுமான சிவயோக தயாபரனை முருகனை வேண்டுகின்றார். ஆத்ம லாபமில்லாத கல்வியின் பிரயோஜனம் என்ன? அதுவேண்டாம் ஸ்ரீ மாணிக்க வாசகப்பெருமான் இனி கற்பனவும் வேண்டேன் கசிந்துருக வேண்டுவனே என்று பாடியுள்ளார். மெய்ப் பொருளைப் பற்றி முந்திய பாக்களில் விரிவாகச் சொல்லப்பட்டதால் இங்கு கூறாது விடப்பட்டது. அந்தப் பொருளை கீழ்கண்ட திருப்புகழில் விவரித்துள்ளார்.*

தசையு முதிரமு நிணமொடு செருமிய
கரும கிருமிக ளொழுகிய பழகிய
சடல வுடல்கடை சுடலேயி லிடுசிறு குடில்பேணுஞ்

சகல கருமிகள் சருவிய சமயிகள்
சரிய கிரியைகள் தவமெனு மவர்சிலர்
சவலே யறிவினர் நெறியினை விட இனி யடியேனுக்

கிசைய இதுபொரு ளென அறி வுறவொரு
வசனமற இரு வினையற மலமற
இரவு பகலற எனதற நினதற அனுபூதி

இனிமை தருமொரு தனிமையை மறைகளி
னிறுதியறுதி யிடவரிய பெறுதியை
இருமை யொருமையில் பெருமையை வெளியிட
மொழிவாயே.

46

**எந்தா யுமெனக் கருடந் தையுநீ**
**சிந்தா குலமா னவைத்தீர்த் தெனையாள்**
**கந்தா கதிர்வே லவனே யுமையாள்**
**மைந்தா குமரா மறைநா யகனே.**

பொழிப்புரை.

கந்தனே! கதிர்வேலவனே! உமையாள் மகனே! குமரனே! வேதங்களின் அதிபனே! என் தாயும் எனக்கருளும் தந்தையும் நீ. என் மனத் துன்பத்தையெல்லாம் நீக்கி என்னை ஆள்வாயாக.

விளக்கவுரை.

*ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமான்*

*" அம்மையே யப்பா வொப்பிலா மணியே*
*யன்பினில் விளைந்தவா ரமுதே*
*பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்*
*புழுதலைப் புலையனேன் றனக்குச்*
*செம்மையே யாய சிவபத மளித்த*
*செல்வமே சிவபெரு மானே*
*யிம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே*
*னெங்கெழுந் தருளுவ தினியே.*

*என்று பாடியுள்ளார். அப்பர் ஸ்வாமிகளும் பாடியது காண்க.*

" அப்பனீ அம்மைநீ யையனுநீ
யன்புடைய மாமனு மாமியுநீ
ஒப்புடைய மாதரு மொண்பொருளுநீ
யொருகுலமுஞ் சுற்றமு மேரூருநீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ
துணையாயென் னெஞ்சந் துறப்பிப்பாய்நீ
இப்பொன்னீ யிம்மணிநீ யிம்முத்துநீ
யிறைவனீ யேறூர்ந்த செல்வனீயே

ஆகவே முருகனையே முதல் பொருளாகக்கருதி "என்தாயும் தந்தையும் நீ மனக் குறைகளை யெல்லாம் தவிர்த்து என்னை ஆளவேண்டும் என்று மூறையிட்டார்" நாலந்த வேதத்தின் பொருளோனே நான் என்று மார்தட்டும் பெருமாளே, குகன் ஆதலின் மறை நாயகனே என்று அழைத்தார்.

சிவவாக்கியர் கூறுவதும் நினைப்புக்கு வரவேண்டும்.

தந்தைதாய் தமரும் நீ சகலதேவதையும் நீ
சிந்தைநீ தெளிவுநீ சித்திமுத்தி தானும்நீ
பிந்துநீ விளைவுநீ மேலதாயவேதம்நீ
எந்தைநீ இறைவன்நீ என்னை ஆண்ட ஈசனே"!

மேலும் அப்பர் சொல்வதைப்பார்க்க பார்க்க விந்தையே.

நின்னுவார் பிற ன்றி நீயே யானாய்
Etc. etc.......... ஏத்துகேனே"!

பட்டினத்தார் அறிந்துகொண்ட பூரணத்தை நோக்கின் கிடைப்பதும் இதுவே.

"ஊனுக்குள் நீ நின்று உலவினதைக்காணுமல்
நானென்றிருந்து நலமழிந்தேன் பூரணமே"

## 47

ஆறு றையுநீத் ததன்மே னிலையைப்
பேறு வடியேன் பெறுமா றுளதோ
சீறு வருசூர் சிதைவித் திமையோர்
கூறு வுலகங் குளிர் வித்தவனே

### பொழிப்புரை.

சீறிவரும் சூரனைச் சிதைவித்துத் தேவர்கள் தம்முடைய தென்று கூறும் தேவலோகத்தைக் குளிர்வித்தவனே! 36 தத்துவங்களையும் கடந்து அதன்மே நிலையை நான் என் பேருகப் பெறும் வழி உண்டோ?

### விளக்கவுரை.

முப்பத்தாறு தத்துவங்களை யெல்லாம் கடந்து அதற்க்கு மேல் குடிகொண்ட தத்துவம் தான் மெய்ப்பொருள். "யோகமார்க்கத்தை அனுஷ்டிக்குமவர்கள் இதனை நன்கு அறிவார்கள். அவர்களும் 36 தத்துவங்களை அறிந்தாலும் அதற்கு மேலிருக்கும் தத்துவத்தை உணர முடியாது. அதை அவன் அருளாலே அவனுகவே உணரவேண்டு மாகையால் உன்னை உணரும் பேற்றை எனக்கு என்று ஈவாய்" என்று வினவுகின்றார். கோபத்தினுலும் குரோதத்தினுலும் சிறிக் கொண்டுவரும் சூரபத்மாதிகளைத் தாபம்தீர குளிர்வித்த பெருமானும் ஆகிய முருகனை வேண்டுகிறார்.

உள்ளம் குளிர்ந்தவர்கள் கண் குளிர்ந்தவர்கள். அக் கண்களால் பார்க்கப்பட்ட உலகம் க்ஷேமத்தை அடையும்.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை கரையிலாக் கருணைமாகடலை
மற்றவறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணிவிளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற வெஞ்சிவனைத் திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங் குளிரவென் கண் குளிர்ந்தனவே

என்பதையும் காண்க.

பேதித்த தத்துவங்கள் வெப்பத்தைத் தருகின்றன. குளிர்ச்சியான அனுபூதி வேண்டுமென்றால் வெப்பத்துக்கு அப்பால் நின்ற அபேதமெனும் குளிர் நாட்டைச் சேர வேண்டும். ஆசையை வளர்க்கும் பேதத்தைத் தாண்டி அன்பெனும் அபேதத்தை நாடுமின். அன்பெனும் நிலையே அகண்ட நிலையாம்.

"நாவேறு பாமணத்த"

---

ஆண்டவன் உளத்தில் கோயில் கொள்ளல்

48

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும் வேலவனே

பொழிப்புரை.

ஞானநிலை என்ற ஒன்றில் முற்றிலும் நின்று ஆராய்வார் அறிவிலே சிறிதேனும் பிரியாமல் நிலைத்து நின்ற பெருமான் நீ அல்லனோ! நெருங்கி நிற்கும் அறிவான ஒன்று வந்து தோன்ற அஞ்ஞானம் என்னும் இருள் ஓட, கோபம் முதலிய வற்றை வென்று நிற்கும் அவரோடு பொருந்தும் வேலவனே.

விளக்கவுரை.

அறிவை அறிவது பொருள் என்று முருகன் உபதே சித்தார். அறிவு ஒன்றவும் மற்றவை அறவும் நின்று அறிவார்கள் ஞானிகள். ஞானிகளின் அறிவில் பிரிவிலாமல் எப்போதும் நிற்கின்ற பிரான் முருகன். ஆகவேதான் அறிவும் அவன். அறிபவன் அவன். அறியப்படுவதும் அவன்.

"அறிவும் அறியாமையும் கடந்த அறிவு நின்திரு மேனி என்றுணர்ந்து நின் அருண சரணா விந்தம் என்ற டைவேனோ?" என்று திருப்புகழில் பாடியுள்ளார்.

"அறிவாலறிந்து இருதாள் இறைஞ்சு
மடியார் இடைஞ்சல் களைவோனே

என்ற திருப்புகழையும் காண்க.

ஞானம் அடைந்த பெரியோர்கள் சாதுக்கள் ஸங்கத் தால் நிஸ்ஸங்கத்தை அடைந்து ஆசாபாச இருளை அகற்றி ஐம்புலன்களின் வெறியடங்கி ஆசையை யெல்லாம் ஈசன் பால் செலுத்தி நிற்பவர் அவரோடு விளையாடிக் கொண் டிருப்பவன் முருகன் என்றார்.

"மருவும டியார்கள் மனதில் விளையாடு
மரகத மயூரப் பெருமாள் காண் என்றும்

"நித்தமு மோதுவார்கள் சித்தமே வீடதாக
நிர்த்தமதாடு மாறுமா முகவோனே என்றும்

"சந்தமும் அடியார்கள் சிந்தையது
குடியாக தண்சிறுவை தனில்மேவும் பெருமாளே
என்றும

பாடிய திருப்புகழ் அடிகளையும் காண்க.

முருகன் எங்கும் நிறைந்து நிற்கும் பொருளென்று உபதேசித்தவர் அறிவார் அறிவில் பிரிவு ஒன்றற நின்ற பிரான் அலையோ என்று சொன்னதின் விசேஷம் என்ன? எங்கும் பிரிவின்றி இருக்குங்கால் அறிவார் அறிவில் பிரிவின்றி முருகன் இருப்பர் என்று சொல்லுவானேன்.

சூரியன் உதயமான பிறகு அஸ்தமிக்கும் வரையில் பிரிவிலாமல் உலகின் கண் பிரகாசித்துக் கொண்டிருக்கிறன். ஆயினும் கண்ணில்லாதவர்களுக்குச் சூர்ய பிரகாசம் ஒன்றுகிறதில்லை. தெரிகிறதில்லை. பிரகாசம் பிரிந்தே இருக்கின்றது. மேகத்தால் ஆகாயம் மூடுபட்டாலும் அப்படியே. பகலில் நித்திரை செய்கின்றவர்க்கு நித்திரை காலத்தில் சூர்யப்பிரகாசம் அவரைவிட்டுப் பிரிந்தே இருக்கின்றது. அது போல் அறிவால் அறியும் ஞானிகள் உணர்ச்சியில் எப்போதும் உணரப்படுவான் என்பது பொருள். அறிவற்ற அஞ்ஞானிகள் உலகப் பொருளை நாடிச் செல்பவர். முருகனை மறந்தவர்கள் எங்கும் இருக்கும் முருகன் அவர்கள் மனதிலிலும் இருந்தும் அவர்கள் உணராததால் அவரை விட்டு பிரிந்து நிற்பான் போலும் தோன்றுவான்.

49

**தன்னந் தனிநின் றதுதா னறிய**
**இன்னம் மொருவர்க் கிசைவிப் பதுவோ**
**மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்**
**கின்னங் களையுங் க்ருபைசூழ் சுடரே.**

பொழிப்புரை.

மின்னுகின்ற ஒளியோடு கூடிய வேலை ஏந்திய விளையாட்டையுடையோனே! தியானிப்பவருடைய துன்பங்களைத் துடைக்கும் கருணைநிறைந்த ஒளியே, பற்றெல்லாம் விட்டுத் தனித்து நான் நின்ற நிலையை நானே (நீயே) அறியக் கூடுமே யன்றி வேறெவர்க்கு அதைச் சொல்லக்கூடுமோ.

விளக்கவுரை.

28-வது பாட்டின் கண், "யானாகிய என்னை விழுங்கி வெறும் தானாய் நிலை நின்றது தற்பரமே என்றார்" "யாமோதிய கல்வியும்... " "யானெழிந்த வெறும் தனியில் உணர்ந்த பேரின்பத்தைப் புகலவொணாது என்று உபதேசிக்கிறார்கள். தன்னை நினைந்தவர்களுடைய கின்னங்களை அதாவது துயரங்களைத் தீர்த்து அநுக்ரஹிக்கும் மெய்த்துணை முருகன், அவனேயான்" என்னும் தத்துவம் என்பதை அறிந்து தனியில் நின்ற அடியார்களுடன் கலந்த இன்பத்தை வெளியிடக் கூடுமோ? பட்டினத்தாரும் புகல்வது அதுவே. இதை பாட்டின் பாவத்தில் காண்க.

## 50

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திரஞா னசுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே.

### பொழிப்புரை.

ஞான சுகாதிபவ! திதியின் புதல்வர்களான அசுரனைக் கொல்லும் வீரனே! அறிவு கெட்டு, முற்றிலும் வாட்டமடைந்து மயங்கி முழுமையும் கதிகெட்டு, வீணே கெடக் கடவேனோ?

### விளக்கவுரை.

*"ஜலமல சுவாஸ ஸஞ்சல மதாலே*
*மதிநிலை கெடாமலுந்தன் அருள்தாராய்"*

என்று பழநித் திருப்புகழில் பாடியவாறு "பேத சிருஷ்டியின் சஞ்சலத்தால் என் புத்தியும் மயங்கிடாமல் காத்தருள்வாய்" என்று வேண்டுகின்றார். கங்காநதி புத்திரனாகிய முருகனை த்யானம் செய்தால் மனது, காயம் இவற்றின் பரிசுத்தி ஏற்படும். அசுரர்களாம் திதிபுத்திரர்கள் வலிமையை அழிக்கின்றன அமரர்கள் சேவகனும் முருகன். என் மதி கெட்டு விடாமல் காப்பாற்றவேண்டும். மதிகெட்டால் கதிகெட்டுப் போய் விடுமே. ஆகையால் என் மதியையும் கதியையும் நீயே காப்பாற்றவேண்டு மென்று போற்றுவார். முருகனை மதிக்காமல் சென்றான் ஒருநாள் பிரமன். அவன் கெதி கெட்டு விட்டது, சிறையிடப்பட்டான். அறிவு முருகா, உன்னிடம் இருக்க என் கதிக்குறைவில்லை என்றார். ஆசையும் பாசமும் ஆன அசுரர்களிடை மயங்காது என், கதியைக் காப்பாற்றி அருள வேண்டும்.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே

பொழிப்புரை.

குகனே நீ உருவாயும், அருவாயும், உளதாயும் இலதாயும் மணமாயும் மலராயும், மணியாயும், ஒளியாயும், கருவாயும் உயிராயும், கதியாயும், விதியாயும் குருவாயும் வருவாய் வந்து அருள்வாய்,

விளக்கவுரை.

முருகன் ஜகமுழுவதும் தானாய் நின்றவன். உருவும் அவனே. அரூபமாய் நிற்கும் தத்துவமும் அவனே. தெய்வம் உண்டு என்று அன்பால் பணியும் அடியார்களுக்கு உள்ள தொரு பொருளாய் வந்து தாங்கும் தத்துவம் அவனே. தெய்வம் இல்லை என்ற மாற்றார்களுக்கு அவர்கள் உணர்வினின்றும் மறைந்து இல்லாதது போல் நிற்பவனும் முருகனே. வாசனை தங்கிய மருவாயும் மலராயும் நிற்பவனும் அவனே. ரத்னங்களாயும் மணிகளின் ஒளியாயும் விளங்குகின்றவனும் முருகனே. கருவாய் நின்று என்னை வளர்த்தவனும் அவனே. கருவாய் நின்று பிறகு உருவாய் வந்து உயிராய் வளர்ந்து அந்த உயிருக்குக் கதியாகவும் விதியாகவும், தகைந்த பிரபு எண் குருநாதன். முருகனை குருவாய் வந்து உபதேசிக்க வேடுண்டு மென்றார். இந்தப் பாட்டில் முருகனை எவ்விதம் உபாசிக்கவேண்டு மென்பதை போதித்தார். சமரஸ சுபாவம் என்ற நிலையில் நின்று முருகனைப் போற்றுகின்றார். உலகின்கண் நடக்கும் எல்லாக் காரியங்களும் அவன் செயலன்றி வேறு இல்லை என்ற நல்ல நினைவோடு குகனை உபாசித்தல் வேண்டும்.

"பெருநலனும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவும் தம்முருவும் தாமேயாகி

என்று அபபர் பாடிய தேவாரத்தைக் காண்க.

"என்றும் போக்குவர வறநிகழ்த்து
மாதார வாதேய முழுது நீயாதலா
லகிலமீதென் னையாட்டி
யாடல் கண்டவனுநீ யாடுகின்றவனுநீ
யருளிநீ மௌன ஞான
தாதாவு நீபெற்ற தாய்தந்தை தாமுநீ
தமருநீ யாவு நீகாண்
சர்வபரிபூரண வகண்ட தத்துவமான
சச்சிதானந்த சிவமே.

என்று தாயுமானவர் உபதேசித்ததையும் காண்க.

உலகின்கண் விளங்குகிற சர்வதெய்வமும் முருகன். ஜீவன்களும் முருகன். நான் என்பது இல்லை. நானில்லை ஏனைய வெல்லாம் முருகன் என்ற தியானத்தில் பக்தி செய்தால் முருகன் அருள் கைகூடும் என்று உபதேசித்தார்.

கந்தரனுபூதியை "ஆடும்பரி" யென்று ஆரம்பித்தார். ஆடும்பரி என்பது மயில். மயில் என்பது ஆனதனி மந்த்ரமாம் ஓங்காரமாகும் உருவம் என்பது மாயையின் வெளித்தோற்றம். மாயையின் மோகம் தெளிந்தவுடன் ஓங்காரப் பொருளின் உண்மையான இயல்பு வெளியாகும். அந்த வெளியாகும் பொருள்தான் மௌனம் என்று சொல்லுவது. அந்த மௌனத்தில்தான் அனுபூதியின் முடிவு என்று சொல்லலாம், ஞானத்தின் வரம்பாகவும் அபேதத்தின் உயிராகவும் விளங்குவது மோனம். தாயுமானவர் இதை விவரமாய் விளக்கியுள்ளார்.

பந்தமறு மெய்ஞ்ஞான மான மோனப்
பண்பொன்னற யறுளியந்தப் பண்புக்கேதான்

சிந்தையில்லை நானென்னும் பான்மையில்லை
தேசமில்லை காலமில்லை திக்குமில்லை

தொந்தமில்லை நீக்கமில்லை பிரிவுமில்லை
சொல்லுமில்லை யிராப்பகலாந் தோற்றமில்லை

யந்தமில்லை யாதியில்லை நடுவுமில்லை
யகமுமில்லை புறமுமில்லை யனைத்துமில்லை

இல்லை யில்லை யென்னிறைன்று மில்லாதல்ல
வியல்பாகி யென்று முள்ள வியற்கையாகிச்

சொல்லரிய தன்மையதா யான்றூ னென்னத்
தோன்றூதெல் லாம்விழுங்குஞ் சொரூப மாகி

யல்லையுண்ட பகல்போல வவித்தை யெல்லா
மடையவுண் டு தடையறவுன் னறிவைற் தானே

வெல்லவுண்டிங் குன்னையுந்தா னுகக் கொண்டு
வேதமாய்ப் பேசாமை விளக்குந்தானே.

அந்த மோனப்பண்பே எனது சத்குருநாதன். அவர் எனக்கு உண்மையாம் தன்னை விளக்குவாராக என்று அனுபூதியை நிலைநிறுத்தி இந்த அனுபூதி நிலை அடியார் உள்ளத்திலேயே நிற்கட்டும் என்றுவிட்டார்.

வேலும் மயிலும் துணை.

ஜெயாநந்த பூமன் ஜெயா பாரதாமன்
ஜெயாமோக கீர்த்தே ஜெயானந்த மூர்த்தே
ஜெயானந்த சிந்தோ ஜெயா சேஷபந்தோ
ஜெயத்வம் ஸதா முக்திதானேசு சூனே!

மங்களம்.

# தமிழில் பாணி சீரிஸ் புத்தகங்கள்

| | | | அ. | ப. |
|---|---|---|---|---|
| 1. | யஜுர்வேத ஸந்தியாவந்தனம் | ... | 2 | 6 |
| 2. | ரிக்வேத ஸந்தியாவந்தனம் | ... | 2 | 6 |
| 3. | ஸ்யாமளா தண்டகம் | ... | 1 | 0 |
| 4. | ஸாமவேத ஸந்தியாவந்தனம் | ... | 2 | 6 |
| 5. | ஸ்தோத்திரமாலா | ... | 3 | 0 |
| 6. | கல்பத்ரயம் | ... | 5 | 0 |
| 7. | விஷ்ணு ஸஹஸ்ரநாமம் | ... | 6 | 0 |
| 8. | ஸுப்ரமண்ய புஜங்க ஸ்தோத்திரம் | ... | 2 | 0 |
| 9. | லக்ஷ்மீ ஸஹஸ்ரநாமம் | ... | 7 | 0 |
| 10. | லலிதா ஸஹஸ்ரநாமம் | ... | 7 | 0 |
| 11. | ஸுப்ரமண்ய பூஜா விதி | ... | 3 | 0 |
| 12. | புருஷஸூக்தம் | ... | 2 | 0 |
| 13. | இந்திராக்ஷி சிவகவச ஸ்தோத்திரம் | ... | 2 | 0 |
| 14. | ஆதித்யஹ்ருதயம், அர்த்தத்துடன் | ... | 2 | 6 |
| 15. | ஸௌந்தர்யலஹரி | ... | 2 | 6 |
| 16, | பஜகோவிந்தம், கோபிகா கீதை | ... | 1 | 0 |
| 17. | ஸுப்ரமண்ய ஸஹஸ்ரநாமம் | | 6 | 0 |
| 18. | மஹாலக்ஷ்மி அஷ்டோத்தரசதநாமம் | ... | 2 | 6 |
| 19. | சிவாநந்தலஹரி | ... | 2 | 0 |
| 20. | யஜுர் உபாகர்மம் | ... | 2 | 0 |
| 21. | நவக்ரஹ ஸ்தோத்திரம் | ... | 3 | 0 |
| 22. | பூஜாராமாயணம், நாமராமாயணம் | ... | 1 | 0 |
| 23. | அகிலாண்டேஸ்வரி அக்ஷரமாலிகா | ... | 1 | 6 |
| 24. | யஜுஸ்ஸந்தியா பாஷ்யம் | ... | 5 | 0 |
| 25. | சங்கராந்தி பூஜை - கோ பூஜை | ... | 2 | 0 |
| 26, | மார்க்கபந்து ஸ்தோத்திரம் | ... | 2 | 0 |
| 27. | நித்யான்னிகம் | ... | 6 | 0 |
| 28. | ஸதாசிவ கீர்த்தனங்கள் | ... | 1 | 0 |
| 29. | அஷ்டபதி, கீதகோவிந்தம் | ... | 5 | 0 |
| 30. | விஷ்ணு பாதாதிகேசாந்த ஸ்தோத்ரம் | ... | 2 | 0 |
| 31. | தேவிநித்யபாராயணம் | ... | 8 | 0 |
| 32. | தேவீ கட்கமாலா | ... | 1 | 6 |
| 33. | அஷ்டோத்ர கதம்பம் | ... | 9 | 0 |

பி. டி. பாணி கம்பெனி,

திருவல்லிக்கேணி - மதராஸ்.